

தமிழில்: ரகுநாதன்

# லெனின் கவிதாஞ்சலி

## மயாகோவ்ஸ்கி

# லெனின் கவிதாஞ்சலி

மயாகோவ்ஸ்கி

தமிழில் :

ரகுநாதன்

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிட்.

6, நல்லதம்பி செட்டித் தெரு,

சென்னை-2

முதற் பதிப்பு: ஏப்ரல், 1970
லெனின் நூற்றாண்டு விழா வெளியீடு

Tamil Translation of
VLADIMIR ILYICH LENIN
A POEM
By
V. MAYAKOVSKY
Original Published by
PROGRESS PUBLISHERS, MOSCOW
Translated into Tamil by
RAGUNATHAN

விலை ரூ: 3-00

அச்சிட்டோர்:
நியூ செஞ்சுரி பிரிண்டர்ஸ்,
சென்னை-2.



இக் கவிதாஞ்சலியை
ரஷ்யக் கம்யூனிஸ்டுக்
கட்சிக்குச் சமர்ப்பிக்
கிறேன்.

—*மயாகோவ்ஸ்கி*

# முன்னுரை

## 1

''கண்ணுக்கே தெரியாத கடுகுப் பொடியனிவன்!
என்றாலும்—
சின்னஞ் சிறுஇதயம் சிரித்துத் துடிதுடிக்க
என்னமாய் இப்பொடியன் இளைக்காது முயல்கின்றான்!''
என்றே கதிரவனும் எனைநோக்கி வியந்திருந்தான்...

* * *

''நேசிக்கிறேன்'' என்ற கவிதையில் கவிஞர் விளதிமிர் மயாகோவ்ஸ்கி தமது பிள்ளைப் பருவத்தைப் பற்றி இவ்வாறு நினைவு கூர்கிறார். இவரது வாழ்வையும் வாழ்வில் இவர் காட்டிய தாகத்தையும் வேகத்தையும் அறிந்தவர்கள் எவரும், அந்தப் ''பொடியனை''க் கண்டு, கதிரவனும்கூட வியப்புற்றுப் போனதில் பொருளுண்டு என்றே கூறத் துணிவர்...

1893 ஜூலை 7 அன்று ஜார்ஜியாவைச் சேர்ந்த பக்ததி என்ற குக்கிராமத்தில், வனப்பாதுகாவலர் ஒருவரின் மகனாகப் பிறந்த மயாகோவ்ஸ்கி பிள்ளைப் பருவத்திலேயே தந்தையை இழந்து விட்டார். பின்னர் பிழைப்பை நாடி மாஸ்கோவுக்குக் குடி பெயர்ந்து வந்த இவரது குடும்பத்துக்கு, அங்கு வறுமைதான் காத்திருந்தது. இந்த வறுமைக்கிடையிலும் இவர் 1906-7 ஆண்டுகளில் பள்ளியில் படித்து வந்தார். அந்தப் பதின்மூன்று வயதுப் பருவத்திலேயே இவருக்குத் தத்துவ விசாரணையிலும், மார்க்சிய அரசியலிலும் மிகுந்த நாட்டமும் தேட்டமும் ஏற்பட்டு விட்டன. இதன் விளைவாக, இவர் ரஷ்ய சோஷலிஸ்டுக் கட்சியில் சேர்ந்து ரகசிய நடவடிக்கைகளில் ஈடுபட்டார். விரை விலேயே ரகசியப் பிரசுரங்களை எழுதிக்கொடுத்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுக் கைதானார். ஆயினும் தமது சாமர்த்தியத்தினால் அதிலிருந்து தப்பி விடுதலையானார். எனினும் சிறைக்குள்ளிருந்த பெண் கைதிகள் சிலரைத் தப்பித்து ஓட உதவியதற்காக இவர் மீண்டும் கைதானார்; சிறைத் தண்டனையும் பெற்றார். அப்போது இவருக்கு வயது பதினைந்து. சிறைவாசத்தின்போது இவர் தமது

காலத்து எழுத்தாளர்களது நூல்களையும், டால்ஸ்டாய், பைரன், ஷேக்ஸ்பியர் முதலியோரது நூல்களையும் உலகப் பேரிலக்கியங்களையும் ஒரே மூச்சில் படித்து முடித்தார். அத்துடன் கவிதை எழுதும் முயற்சிகளிலும் ஈடுபட்டார்.

1910ல், பதினாறுவது வயதில் சிறையைவிட்டு வெளிவந்ததும் இவர் முன் ஒரு கேள்வி எழுந்தது. கட்சி வேலையில் ஈடுபடுவதா, கலைத்துறையில் ஈடுபடுவதா என்பதே அக்கேள்வி. சிறையில் இவர் படித்த நூல்களெல்லாம் இவருக்கு வெறும் அலங்காரச் சொல்லடுக்குகளாகவே பட்டன. புரட்சிக்கு அவற்றையெல்லாம் காட்டிலும் தீவிரமான விஷயங்கள் தேவை எனத் தோன்றியது இவருக்கு. தமது கட்சித் தோழர் ஒருவரிடம் சென்று, "நான் ஒரு சோஷலிஸ்டுக் கலையைப் படைக்க விரும்புகிறேன்!" என்று மார் தட்டினார். அந்தத் தோழரோ, "தம்பி, உனக்கு ஆசை அதிகம். ஆனால் ஆற்றல் போதாது" என்று கூறிவிட்டார். மயாகோவ்ஸ்கியோ மனம் தளர்ந்துவிடவில்லை. கட்சி வேலையை நிறுத்திவிட்டுக் கவிதை முயற்சிகளை மேற்கொண்டார். இவருக்குக் கவிதை எழுதுவதில் தாகமும் வேகமும் இருந்தபோதிலும், இவரது முயற்சியில் இவருக்கே நம்பிக்கை பிறக்கவில்லை. கவிதை தமக்குக் கை வராத சரக்கோ என்ற சந்தேகம் தட்டியதும் இவர் கவிதையைக் கைவிட்டுவிட்டு, 1911ம் ஆண்டில் ஓவியப்பள்ளியில் சேர்ந்துவிட்டார். அங்கும் இவர் "தொல்லை கொடுக்கும் பேர்வழி"யாகவே கருதப்பட்டார். அதன் விளைவாக ஓவியக்கல்வி முடிவதற்கு முன்பே, மூன்றே ஆண்டுகளில் அங்கிருந்து வெளியேற்றப்பட்டார்.

ஓவியப்பள்ளியில் படித்து வந்த காலத்தில், இவர் பசியால் வாடியபோதிலும்கூட, இவரது கலைத்தாகம் பசி வேட்கையையும் மிஞ்சியதாக இருந்தது. இந்தக் காலத்தில் இவரும் இவரையொத்த இளைஞர்களும் ஒன்றுகூடி, பாசி பிடித்த பழமைக் கலைகளுக்கெல்லாம் முழுக்குப் போட்டுவிட்டு, புத்தம் புதிய கலைமரபொன்றை உருவாக்கவேண்டும் என்று ஆவேசத்தோடு பேசி வந்தனர். இந்த இளைஞர்கள் அளித்த ஊக்கம் மயாகோவ்ஸ்கியை மீண்டும் கவிதை எழுதத் தூண்டியது. இந்த இளைஞர்கள் தமது கலை இலக்கியக்கொள்கையை "Futurism" என்றும், தம்மை "Futurists" என்றும் கூறிக்கொண்டனர். இந்த இளைஞர்கள் 1912ல் தமது கொள்கை அறிக்கையையும் வெளியிட்டனர். அதில் கையெழுத்திட்டிருந்தவர்களில் மயாகோவ்ஸ்கியும் ஒருவர். "பொதுஜன ரசிகத் தன்மையின் மூஞ்சியில் ஓர் அடி!" என்பதே அந்த அறிக்கையின் தலைப்பு! "நவீனத்துவம். என்ற கப்பலிலிருந்து புஷ்கின், டால்ஸ்டாய், தாஸ்தோவ்ஸ்கி முதலியோரையெல்லாம்

கடலுக்குள் தூக்கி எறியுங்கள்!" என்று அதில் அவர்கள் எழுதியிருந்தனர்! உண்மையில் இந்த இளைஞர்களை இலக்கிய உலகின் கலகக்காரர்கள் என்றே சொல்லாம். இந்தக் கலக வெறியில் பிறந்த ஆவேசம், இத்தனை காலமும் கூட்டுப் புழுவைப் போல் தூங்கிக்கிடந்து உள்ளுக்குள் வளர்ச்சி பெற்று வந்த மயாகோவ்ஸ்கியின் கவிதா சக்தியைச் சிறகடித்துப் பறக்கச் செய்துவிட்டது!

ஆனால் பழமையான கலைகளை முற்றிலும் மறந்துவிட்டும் துறந்து விட்டும் சுத்த சுயம்புவான, 'தான்தோன்றியான கலையையோ இலக்கியத்தையோ எவரும் படைத்துவிடமுடியாது. அது அஸ்திவாரமில்லாமலே கோட்டை கட்ட நினைப்பதற்குச் சமமாகும். மனிதகுலம் பரம்பரை பரம்பரையாகப் படைத்தளித்துள்ள சிந்தனையையும் மரபையும் ஜீரணித்துக்கொண்டு, அதன் மூலம் ஜீவசக்தியும் பெற்றுக்கொண்டு இலக்கியம் படைக்க முனைபவனே உண்மையில் புதுமையைச் சாதிக்கமுடியும். இந்த உண்மையை உணராது, பழைய இலக்கியத்தில் தான் கற்றுக் கொள்வதற்கு எதுவுமே இல்லை என்ற தகப்பன்சாமி மனோபாவத்தோடும் அகம்பாவத்தோடும் இலக்கியம் படைக்க முனைபவன் எவனும் இலக்கிய முயற்சியில் பரிதாபகரமான தோல்வியடைவதுடன்கூட, தன்னுக்குள் தானாய்த் தானுக்குள் எல்லாமாய்ச் சமாப்தியாகிவிடும் தனிமனிதத்துவப் புதை மணலிலும் ஆழப்புதைந்து, அழுவாரும் தொழுவாருமின்றி அழிந்து போய்விடுவான். நல்ல வேளையாக, மயாகோவ்ஸ்கி மானிட சமுத்திரத்திலிருந்து தம்மைத் தாமே பிரித்து, சுண்டி வற்றிச் சுவறிப்போய்விடும் துளியாக மாறிவிடவில்லை. பழைய இலக்கியங்களை இவர் வெறுத்தபோதிலும் மறுத்தபோதிலும், இவர் மானிட சாகரத்தில் தம்மைத்தாமே கரைத்துக் கொள்வதில்தான் தமது வலிமையை இனம் கண்டார். பழைய இலக்கியங்களைத் தாம் தாக்கியதற்குக் காரணம் என்ன என்பதையும் இவர் பின்னொரு சமயம் இவ்வாறு விளக்கினார்:

"பழைய கவிதைக் கலையை நான் பலமுறை தாக்கிப் பேச நேர்ந்ததுண்டு. இதற்குக் காரணம் பழமையான கவிதைக் கலைமீது நான் ஏதோ பகைமை கொண்டிக்கிறேன் என்பதல்ல. அந்தக் கலை ஒரு பாவமும் அறியாதது. நான் தாக்கியதற்குக் காரணம் இதுதான்: பழைய பாணியை ஆதரிப்பவர்கள் புதிய கலையை எதிர்த்துப் போராடுவதற்காக, பெரிய மனிதர்களின் நினைவுச் சின்னங்களுக்குப் பின்னால் மறைந்து தம்மைக் காப்பாற்றிக்கொள்ள முனைகின்றனர். எனவே அந்த நினைவுச் சின்னங்களைத் தட்டி நொறுக்கித் தள்ளுவதன் மூலம் இத்தகைய பெரிய மனிதர்களது முற்றிலும் மூடிமறைக்கப்பட்ட, புறக்

கணிக்கப்பட்ட அம்சத்தை நான் வாசகர்களின் கண்ணில் புலப்பட வைத்தேன். அதுதான் என் நோக்கம்.''

மயாகோவ்ஸ்கி இவ்வாறு ஒரு புதுமை நோக்கோடு கவிதைகள் எழுத முனைந்த காலத்தில், பத்திரிகை உலகம் இவரைச் சீந்தவில்லை. 1913—14 ஆண்டுகளில் இவரைப் பழித்துக்கூறும் அவசியம் நேரும்போது மட்டுமே பத்திரிகை உலகம் இவரது பெயரைப் பிரஸ்தாபித்தது. ஆயினும் 1914ல் இவர் "கால்சராய் அணிந்த மேகம்'' என்ற தமது கவிதையின் சில பகுதிகளை மாக்சிம் கார்க்கிக்கு வாசித்துக் காட்டினார். அவற்றைக் கேட்டதும் கார்க்கி பரவசம் எய்தி, ஆனந்தக் கண்ணீர் வடித்தார். மயாகோவ்ஸ்கியிடம் ஒரு புதிய மேதாவிலாசம் குடிகொண்டிருப்பதைக்கண்டு குதூகலித்தார். 1915ல் கார்க்கி "லெத்தோபிஸ்'' என்ற பத்திரிகையை வெளியிட்டபோது, அவர் மயாகோவ்ஸ்கியை அதன் நிரந்தர எழுத்தாளர்களில் ஒருவராக நியமித்தார்.

மாக்சிம் கார்க்கியின் கவனத்தை ஈர்த்த மேற்கூறிய கவிதையிலேயே மயாகோவ்ஸ்கி இவ்வாறு எழுதியிருந்தார் :

கொடும்பசியால் கொதித்தெழுந்த
கூட்டத்தார் படைமுன்னால்
அடலேறு போற்புரட்சி
முள்முடியை அணிந்தவனாய்
வழிநடக்கும் மனிதனுக்கும்
வருங்காலம் தனைக்கூர்ந்து
தெளிந்தறிய மாட்டாத
திருஷ்டிக் குறையுண்டு.
ஆயினும், நான் மட்டும்
ஆயிரத்துத் தொளாயிரத்துப்
பதினாறும் ஆண்டதனை
ஏறிட்டுப் பார்க்கின்றேன்....

இவ்வாறு புரட்சியின் வரவைத் தீர்க்க தரிசனமாக ஏறிட்டு நோக்கிய மயாகோவ்ஸ்கி, 1917ல் அக்டோபர் புரட்சி வெற்றி பெற்றவுடன் அதனை "எனது புரட்சி'' என்றே வரவேற்றார்; அதன் செல்வாக்குக்கு உடனே ஆட்பட்டு, இவர் புரட்சிக் கவிஞராக, சோவியத் பூமியின் புதுமைக் கவிஞராக மலர்ச்சி பெற்றதில் வியப்பேதுமில்லை. புரட்சிக்குப் பின்னர் இவர் எழுதிய கவிதைகள் அனைத்தும் சோவியத் மக்களின் இதயக் குரலாகவும் வெற்றிப் படைக்கலங்களாகவுமே விளங்கி வந்தன.

சிங்கம்போல் தலைநிமிர்ந்து

செருப்பறையின் இசைக்கொப்ப

எங்கள் படைவீரர்

ஏறுநடை பயில்வதைப் பார்!

அஞ்சாத நெஞ்சோடு

அணிதிரண்டு தற்காக்கும்

செஞ்சேனை வீரர்குழாம்

செல்கின்ற அழகைப் பார்!...

வீரர்களே! என்னுடைய

விரோதியெலாம் உம் பகைவர்!

வீரர்களே! உமையெதிர்க்கும்

விரோதிகளே என் பகைவர்!

என்று இவர் "அருமை! மிக அருமை!" என்ற கவிதையில் பாடுகிறார். இவ்வாறு சோவியத் மக்களோடு இணைந்துநின்ற இந்தக் கவிஞர், சோவியத் மக்களின் ஒப்பற்ற தலைவரான லெனினது கவனத்தையும் கவர்ந்தார். 1922ல் இவர் "கமிட்டிக் கூட்டங்"களைப் பற்றி எழுதிய நையாண்டிக் கவிதையொன்றைப் படிக்க நேர்ந்த லெனின் இவ்வாறு குறிப்பிட்டார்:

"நேற்று நான் தற்செயலாக இஸ்வெஸ்தியாவில் மயாகோவ்ஸ்கி அரசியல் கருத்தொன்றைக் கொண்டு எழுதியுள்ள கவிதையொன்றைப் படித்தேன்...அரசியல் நோக்கிலும் சரி, நிர்வாக நோக்கிலும் சரி, நான் இத்தகைய இன்பத்தை அனுபவித்து நெடுங்காலம் ஆகிறது. இக் கவிதையில் இவர் கூட்டங்களை முற்றிலும் எள்ளி நகையாடுகிறார். கூட்டங்கள், கூட்டங்கள் என்று ஓயாது நடத்திவரும் கம்யூனிஸ்டுகளை இவர் கேலி செய்கிறார். இவரது கவிதை எப்படிப்பட்டது என்று எனக்குத் தெரியாது. ஆயினும் அரசியல் ரீதியாக நான் நிச்சயமாகக் கூறுவேன். அவர் கூறுவது உண்மையேயாகும்."

புரட்சிக்குப் பின்னர் அதன் ஈடிணையற்ற கவிஞராக மயாகோவ்ஸ்கி தமது இறுதிக்காலம் வரையில் திகழ்ந்து வந்தார். ஆனால் வாழ்க்கை முழுவதுமே அடங்காத தாகத்தோடும் வேகத்தோடும் ஆவேசத்தோடும் இயங்கிவந்த இந்தக் கவிஞரின் முடிவும் அதே வேகத்தில் எதிர்பாராத விதத்தில் சோக மரணமாக முடிந்துவிட்டது. 1930 ஏப்ரல் 14ம் தேதி இரவில், தமது 37வது வயதில் இவர் துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை புரிந்து கொண்டார். "இத்தகைய கசப்பான விரக்தியுணர்ச்சியை மயாகோவ்ஸ்கிக்கு ஏற்படுத்திய சொந்தக் காரணங்கள் என்ன

என்று நமக்குத் திட்டவட்டமாகத் தெரியவில்லை" என்று எழுதுகிறார் இன்றைய சோவியத் எழுத்தாளரான அலெக்சாந்தர் நெஸ்தரெங்கோ.

## 2

அக்டோபர் புரட்சியின் வரவால் அரிய புரட்சிக் கவியாகவும் புதுமைக் கவியாகவும் பூரண வளர்ச்சியும் மலர்ச்சியும் பெற்றுச் சிறந்த மயாகோவ்ஸ்கி, அந்தப் புரட்சியின் தலைவரான லெனினது நினைவுக்குப் படைத்தளித்துள்ள புகழாரமே லெனின் கவிதாஞ்சலி. இவர் இயற்றியுள்ள கவிதைகள் யாவிலும் அளவு, தரம், வளம் ஆகிய அனைத்திலும் தலைசிறந்து நிற்பது இந்த நெடிய கவிதையேயாகும்.

1924ல் லெனின் காலமான செய்தியை அறிந்ததும், சோவியத் நாடு முழுவதுமே துக்க சாகரத்தில் ஆழ்ந்தது. ஈடு செய்ய முடியாத இழப்பினால் நாட்டுமக்களுக்கு நேர்ந்த சோகத்தில் பங்கு கொண்ட மயாகோவ்ஸ்கி இந்தச் சமயத்திலேயே,

**தருணம் இது—**

**லெனின்கதையைச் சாற்றத் தொடங்குகிறேன்!**

என்று கூறி, லெனினைப் பற்றிய கவிதையைப் பாட முனைந்தார். ஆயினும் லெனின் காலமான சமயத்திலேயே இத்தகைய கவிதையொன்றைப் பாடமுனைவதைப் பற்றி முதலில் அவருக்கே சற்றுத் தயக்கம் இருந்தது. ஏனெனில் 'கலை கலைக்காகவே' என்ற கொள்கையைக் கொண்ட விமர்சகர்கள் சிலர் இதனை வரவேற்கவில்லை. "கலைஞன் என்பவன் தொலைநோக்குக் கொண்டவனாக இருக்க வேண்டும். ஒரு சம்பவம் நடந்து முடிந்த தருணத்திலேயே அதைப்பற்றி அரிய இலக்கிய சிருஷ்டியொன்றைப் படைப்பது அசாத்தியம். சில ஆண்டுகள் சென்ற பின்னரே லெனினைப் பற்றிய சரியான மதிப்பீடு உருவாகும்; அதன்பின்னரே, அவரது சித்திரத்தை இலக்கியத்தில் சரியான முறையில் வடித்தெடுக்க முடியும். இப்போது எழுதுவது சந்தர்ப்பச் சூழ்நிலைக்கு உதவும் இலக்கிய நயமற்ற அரசியல் பிரசாரமாகவே இருக்கமுடியும்" என்று அவர்கள் கூறினர். ஆனால் இவர்களது கெடுமதி படைத்த ஆலோசனைக்கு மயாகோவ்ஸ்கி செவி சாய்க்கவில்லை.

**இங்கே நான் பாடிவரும்**

**இக்கவிதை தனைக்கண்டு**

பொங்கிவரும் சீற்றத்தால்
புழுங்கி, விமர்சகர்கள்
கையில் சவுக்கெடுப்பார்.
கவிஞரெலாம் வெறிகொண்டு
மெய்குலுங்க, என்மீது
சீறி விழுந்திடுவார்.
"கவியா இதுவெல்லாம்?
கடைந்தெடுத்த பிரசாரம்!
சுவையுண்டா?
உணர்வுண்டா?
சொற்சால அலங்காரம்!"
என்றெல்லாம் பழித்திடுவார்
என்பதையும் யானறிவேன்

என்று கூறிக்கொண்டே, மயாகோவ்ஸ்கி தமது கவிதையைப் பாடத் தொடங்குகிறார். அத்துடன்,

எழுதடா, எழுதிவிடு!—
என்னிதயம் இவ்வாறு
அழுத்தமுடன் சொல்கிறது.
கடமையிட்ட ஆணைதனைத்
தொழுது தலைவணங்கி
எழுதத் தொடங்கிவிட்டேன்

என்று தமது மனச்சாட்சியின் குரலுக்கும் கடமையுணர்வுக்கும் பணிந்து, இவர் பாடத் தொடங்குகிறார். அதே சமயம் ஒரு கலைஞனுக்கு—கவிஞனுக்கு இருக்க வேண்டிய தொலை நோக்கையும் இவர் துறந்து விடவில்லை.

லெனின் இறந்த செய்தியைக் கேட்டதும் மாளாத் துயரத்தில் ஆழ்ந்த மக்களின் சோகத்தில், லெனின்பால் அவர்கள் கொண்டிருந்த பாசமும் நேசமும் பளிச்சென வெளிப்படுகிறது. இத்தகைய பேரன்பை அவர்கள் லெனின்பால் காட்டுவதற்கு என்ன காரணம்? அத்தகைய சிறப்பு அவரிடம் என்ன இருக்கிறது? என்ற கேள்விகளை எழுப்பிக் கொண்டு அவற்றுக்குப் பதில் காணும் விதத்தில் லெனின் வரலாற்றை மயாகோவ்ஸ்கி பாடத் தொடங்குகிறார். ஆயினும் லெனின் வரலாற்றை இவர் ஒரு தனி மனிதரின் வரலாறாகக் காணவில்லை. ஒரு சகாப்தத்தின் வரலாறாகக் காண்கிறார்.

இற்றைக்கு இருநூறு
ஆண்டுகட்கும் முற்பட்ட
சற்றேறக் குறைவான
சமயத்தே, லெனின்குறித்த
விவரம் முதன்முதலாய்த்
தெரிய வருகிறது...

*என்று முதலாளித்துவ சகாப்தத்தின் பிறப்பு வளர்ப்பிலிருந்தே கதையைத் தொடங்குகிறார். இவ்வாறு காலப் பரப்பில் இருநூறு ஆண்டுகட்குப் பின்னேக்கிச் சென்று, லெனினது வரலாற்றை இனம் காண்பதைப் போலவே காலப்பரப்பில் முன்னேக்கிச் சென்று, எதிர்காலத்தில் நின்றும் லெனினைக் காண்கிறார்.*

...இப்புவியின் எதிர்காலம் தனக்கே நாம்
சென்றிந்த நாளிதனைத்
திரும்பிப் பார்த்திட்டால்...
வறுமைக்கும் பட்டினிக்கும்
மத்தியிலே புதியதொரு
தருமத்தை,
பொதுவுடைமைச் சகாப்தத்தை உருவாக்கும்
பாதையினை முதன்முதலில்
பாரகத்தே தோற்றுவித்த
மேதைலெனின் திருவுருவே
மேலோங்கித் தென்படுமால்...

*இவ்வாறு எல்லையற்ற காலப்பரப்பையே தொலைநோக்குமிக்க தமது திருஷ்டிக்குள் நிறுத்திக் கொண்டு லெனினை ஒரு சகாப்த புருஷராகக் காணும் இக் கவிஞர் லெனினது வரலாற்றை சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் வரலாறாகவும் சோஷலிசப் புரட்சியின் வரலாறாகவும் காண்கிறார். லெனினையும் கட்சியையும் இவர் பிரித்துப் பார்க்கவில்லை.*

லெனினும் கட்சியிதும்
இரட்டைச் சோதரர்கள்.
எனினும் வரலாறு
என்னுமந்தத் தாயவட்கு
இருவரிலும் இனியவர் யார்?
பதிலிறுப்போர் யாருமுண்டோ?

இருவரிலும் எவர்பெயரை
இயம்பிடினும், மற்றுமுள்ள

ஒருவரையும் அப்பெயர்தான்
உணர்த்தாது போவதில்லை

என்று அந்த ஒட்டுறவை இவர் குறிப்பிடுகிருர். அத்துடன் கட்சி என்பதும் மக்களின் "கரம், கருத்து, கண்களெலாம் எண்ணரிய லட்சோப லட்சோபக் கணக்கில்'' இணைந்ததொரு வடிவம்தான் என்றும் காண்கிருர். இத்தகைய கட்சியின் தலைவர் மரணமெய்திய போது, மானிட சாகரமே திரண்டுவந்து மரியாதை செலுத்திய காட்சியைக் கண்டு இவர் பெருமிதம் எய்துகிருர். அத்தகைய மக்கள் பேரணியில் தாமும் ஒருவஞக இருப்பதிலும் இவர் மகிழ்ச்சியும் பெருமிதமும் கொள்கிருர்.

இந்நாளின் பேரணியில்
யானும் ஒருவனென்ற

எண்ணத்தால் மகிழ்பொங்கி
எக்களிப்பு எய்துகின்றேன்.

கண்ணீரும் எமக்கிடையே
பொதுவுடைமைப் பொருளாகும்...

என்று களிப்போடு கூறுகிருர்.

சுருங்கச் சொன்ஞல், மயாகோவ்ஸ்கி லெனினது மரணத்தை யொட்டி இந்த நெடிய கவிதையை எழுதத் துணிந்த போதிலும், இதனை வெறும் சரம கவியாகவோ, கையறு நிலையில் கதறியழும் சாவின் ஓலமாகவோ மாற்றிவிடவில்லை. மாருக, லெனினது மரணத்தால் விளைந்த சோக சித்திரத்தோடு தொடங்கும் இந்தக் கவிதை மீண்டும் லெனினது சவ அக்டகக் கிரியைகளோடு வந்து முடிந்த போதிலும், இந்த இருகோடிகளுக்கும் இடையே இவர் ஒரு சகாப்தத்தின் முடிவையும் நவயுகத்தின் பிறப்பையும் பற்றிய வரலாற்றையே பாடி முடித்து விடுகிருர். மேலும் சோக உணர்ச்சியோடு தொடங்கும் இந்தக் கவிதை, முடிவில் எதிர்காலம் பற்றிய தன்னம்பிக்கையுணர்வோடும், லெனின் விட்டுச் சென்றுள்ள பணியை நிறைவேற்றி முடிக்க வேண்டும் என்ற வைராக்கிய சித்தத்தோடும்தான் நிறைவு பெறுகிறது.

அமைப்பிலும் அழகிலும் புதுமையும் புரட்சியும் மிகுந்து விளங்கும் இந்தக் கவிதை, சோஷலிச எதார்த்தவாத வரலாற்றிலும் ஒரு மைல் கல்லாகும்; மயாகோவ்ஸ்கியின் இலக்கிய சிருஷ்டியிலும் சிகர கும்பமான சித்திரமாகும்.

# 3

சுவை புதிது, பொருள்புதிது, வளம் புதிது,
சொல் புதிது, சோதிமிக்க
நவ கவிதை, எந்நாளும் அழியாத
மகாகவிதை......

என்று நமது மகாகவி பாரதி புதுமைக் கவிதைக்கு ஒரு விளக்கம் கொடுத்திருக்கிறார் அல்லவா? அந்த விளக்கத்துக்கு நூற்றுக்கு நூறு சாட்சியமாக நிற்கக் கூடியவை மயாகோவ்ஸ்கியின் கவிதைகள்.

தமது எண்ணம், கருத்து, மகிழ்ச்சி, துயரம், கோபம், தாபம் யாவற்றையும் மக்களுக்குச் சொல்லக்கூடிய வாகனமாகவே மயாகோவ்ஸ்கி கவிதை வடிவத்தைக் கருதினார். அதாவது கவிதை மூலமாகவே இவர் மக்களோடு பேச விரும்பினார். சொல்லப் போனால், இவர் எல்லோருடனும் யாவற்றுடனும் பேசினார். அவ்வாறு இவர் தம்முன் நிறுத்திக்கொண்டு பேசும் பாத்திரம் ஒருவராகவோ பலராகவோ இருக்கலாம்; அல்லது அஃறிணைப் பொருள்களான கப்பலாகவோ கடலாகவோகூட இருக்கலாம். யாராயினும் எதுவாயினும் இவர் அவரோடு அல்லது அவற்றோடு பேசுவார்; உரையாடுவார்; வாதமிடுவார்; வழக்குரைப்பார்; சீறி விழுவார்; சிரிப்பு மூட்டுவார்; கேலியும் கிண்டலும் செய்வார். இவ்வாறு மக்களிடம் இவர் நேர்முகமாகக் கவிதையைச் சொல்லும் பாணியிலிருந்தே இவரது புதுமையான கவிதை வடிவமும் உருவாயிற்று எனலாம்.

இவரது புதுமையான கவிதா பாணியிலும் வடிவிலும் "கவிதை மொழி" என்று புலவர்கள் போற்றி வரக்கூடிய, வழக் கிறந்த, அகராதிக்குள்ளேயே அடங்கிப் போய்விட்ட, சொற்கள் எதுவும் இடம் பெறுவதில்லை. சாதாரண வழக்கு மொழியே இதுவரை இல்லாத வலுவோடும் வேகத்தோடும் இவரது கவிதையில் இடம் பெறுகின்றது. இந்த வழக்கு மொழியை மயாகோவ்ஸ்கி வெறும் வர்ணனைச் சாதனமாகக் கையாளாது வாசகருக்கு எழுச்சியும் கிளர்ச்சியும் ஊட்டும், அவர்களோடு வாதிடும், அவர்களைத் தம் பக்கம் இழுக்க முனையும் கருவியாக மாற்றி விடுகிறார். மேலும் இவர் கையாளும் அசாதாரணமான உருவகங்களும், கற்பனை வடிவங்களும் இவரது கவிதையில் இவரது தனித்த முத்திரையையும் பதித்து, ஒரு புதிய அனுபவத் தையும் புளகாங்கிதத்தையும் வழங்கி விடுகின்றன.

கவிதை வடிவத்துக்குரிய எதுகை, மோனை, தாளக்கட்டு யாவற்றையும் இவர் சொல்லின் பொருளையும் சொல்ல வந்த

கருத்தையும் ஆணித்தரமாகப் புலப்படுத்த உதவும் கருவியாகவே கருதினுர். இதன் விளைவாக, இவர் தமது தாய்மொழியின் அழுத்தமான ஒலிக்குறிப்புக்களையெல்லாம் புதுப்புதுத் தாள லயங்களையும், கவிதை வடிவங்களையும் உருவாக்கப் பயன்படுத்திக் கொண்டார்; இந்த முயற்சியில் இவர் புதிய புதிய சொற்சேர்க்கைகளையும் புகுத்தினுர். பேச்சு வழக்கில் சொல்லுக்குள்ள வலுவையும் அழுத்தத்தையும் மரபிலக்கண வரம்பை மீறியும் பிரதிபலிக்கும் சாதனையாகவே இவரது கவிதை இருந்தது. இத்தகைய வடிவத்தை இலக்கிய விமர்சகர்கள் Accentual verse—அர்த்தபாவ அழுத்தக் கவிதை — எனக் கூறுகின்றனர். உதாரணமாக, நாம் பேசுகின்றபோது, பேசுகின்ற விஷயத்தைப் பொறுத்தும் அதனை வலியுறுத்தும் தன்மையைப் பொறுத்தும், சில சொற்களுக்கு அழுத்தம் கொடுக்கிறேம்; சிலசமயம் எதிரொலியை எதிர்பார்ப்பதுபோல் சில விநாடிகளுக்கு ஊமையாகவும் மாறுகிறேம். அந்த மௌனமும்கூட அத்தகைய சமயங்களில் வார்த்தைக்கில்லாத வலுவோடு பேசுவதை உணர்கிறேம். இவ்வாறு பேச்சு வழக்கில் சொல்லில் ஏற்றப்படும் தொனி அழுத்தம் — Conversational intonation — தான் இத்தகைய கவிதையின் வடிவத்தைத் தீர்மானிக்கிறது; இதற்கு வலுவும் வனப்பும் அளிக்கிறது.

இந்தப் புதிய அற்புதமான கவிதை வடிவம் சொல்வதற்காகவே எழுதப்படுவதாகும். எனவே மயாகோவ்ஸ்கியின் கவிதைகள் எல்லாம் நாம் தனித்திருந்து, அதுவும் மனத்துக்குள்ளாகவே வாசிப்பதற்காக எழுதப்பட்ட கவிதைகள் அல்ல. அவ்வாறு நாம் மனத்துக்குள்ளாகவே வாசிக்க முனைந்தாலும், மயாகோவ்ஸ்கியே நம்முன் வந்து நின்றுகொண்டு தமது கவிதைகளை இடிக்குரலில் முழங்கும் உணர்வும், அதனை நாம் வியந்து கேட்டுக்கொண்டிருக்கும் உணர்வும்தான் நமக்கு ஏற்படும். மயாகோவ்ஸ்கியின் வாழ்நாட் காலத்தில் இவரது கவிதைகளை இவரே கூறுவதைக் கேட்க, ரசிகப்பெருமக்கள் வெள்ளம்போல் திரண்டு வரத் தவறியதில்லை. இந்தக் காரணத்திலுல்தான் இவர் தமது கவிதைகளை அச்சேற்றிய காலத்திலும், அவற்றை எப்படி வாசிக்க வேண்டும், எங்கெங்கே அழுத்தங்கள், நிறுத்தங்கள் கொடுக்க வேண்டும் என்பதைப் புலப்படுத்தும் வகையிலேயே அவற்றை வெளியிட்டார். இந்தத் தமிழாக்கத்திலும் நான் கூடியவரையில் அந்த முறையையே கையாண்டுள்ளேன்.

மயாகோவ்ஸ்கியின் இத்தகைய புதிய பாணிக் கவிதை நேர்முகமாக வாசகரோடு பேசும் தன்மையினுலும், அவ்வாறு பேசும்போது வெளிப்படும் காம்பீரிய கதியினுலும், கனல்

தெறிக்கும் வாசகங்களாலும், கேட்பவரின் இதயத்திலே நேரடியாக வந்து தைக்கும் வலிமையைப் பெற்றதாகும். எனவே இத்தகைய கவிதையை மொழிபெயர்ப்பது சுலபமான காரியம் அல்ல. மூலக் கவிதையின் கருத்தையும் உணர்வையும், அத்துடன் ஓரளவுக்கு அதன் பாணியையும் வேறொரு மொழியில் சிந்தாது சிதறாது இழுத்து மடக்கிக்கொண்டு வந்து நிறுத்துவது என்பது எளிதான காரியம் அல்ல. இதில் ஏற்படக்கூடிய இடர்ப்பாடுகள் அனந்தம். சந்தத்துக்காகவோ சௌகரியத்துக்காகவோ கருத்தையும் உணர்வையும் திரித்துவிடமுடியாது. மூலசிருஷ்டி முறிபட்டு மூளியாகிவிடாது பார்த்துக்கொள்வது மிகவும் முக்கியம். ஆயினும் கடந்த இருபத்தைந்து ஆண்டுக் காலமாகவே மயாகோவ்ஸ்கியிடம் பெரும் ஈடுபாடு கொண்டு வந்துள்ள நான், இவரது தலை சிறந்த தனிப்பாடல்கள் சிலவற்றை வெற்றிகரமாகத் தமிழாக்கித் தன்னம்பிக்கையைப் பெற்ற பின்னர்தான், இவரது நெடுங்கவிதையான இந்நூலைத் தமிழாக்கத் துணிந்தேன்; முனைந்தேன். இன்று கவிஞன் என்ற நிலையிலிருந்து என்னைக் கழற்றிக்கொண்டு, சற்றே எட்ட நின்று விமர்சகன் என்ற முறையில் இந்தத் தமிழாக்கத்தைப் பார்க்கின்றபோது மயாகோவ்ஸ்கியின் உள்ளத்தையும் உணர்ச்சியையும் போதிய அளவுக்கு வலுக்குன்றாதவாறு தமிழில் இறக்குமதி செய்திருப்பதைக் காணும் திருப்தியுணர்வு எனக்கு ஏற்படுகிறது. இதே உணர்வு வாசகர்களுக்கும் ஏற்படும் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

இந்தத் தமிழாக்கத்தை ருஷ்யமொழி மூலத்தோடு ஒப்பு நோக்குவதிலும், சிற்சில திருத்தங்களைச் செய்வதிலும் எனக்கு உதவி ஒத்துழைத்த நண்பர் திரு. வ. சண்முகசுந்தரத்துக்கும், இதனைத் தக்க தருணத்தில் லெனின் நூற்றாண்டு விழா வெளியீடாக வெளிக்கொணர்ந்து சிறப்பிக்கும் நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தாருக்கும் எனது உளமார்ந்த நன்றி உரியது.

ரகுநாதன்.



# 1

தருணம் இது—
லெனின்கதையைச் சாற்றத் தொடங்குகிறேன்.
வருத்தம் நெஞ்சைவிட்டு
மறைந்துவிட்ட தால் அல்ல;
வாட்டிவந்த கடுந்துயரின்
வாதைமிக ஆழ்ந்துசெலும்
தேட்டத்தை,
தெளிவதனைத்
தேக்கிடுமோர் வேதனையாய்
ஆனதொரு வேளைவந்து அடுத்ததுவால்.
அத்தோடு
ஞானிலெனின் நம்மிடையே
நாவலித்த கோஷங்கள்
சூறு வளிக்காற்றாய்ச்
சுழன்றடிக்கும் காலமிது!
கொடியபெருந் துயர்மனத்தே
குவிந்தாலும், நாமெல்லாம்
விடுவதுவோ கண்ணீரை?
விளம்பிடுவீர்.
வேளையிதில்
சீவிப்பார் யாவரினும்
ஜீவன்மிகும் வாழ்க்கையினை
மேவியிங்கு வாழ்பவரும்
லெனினன்றோ?
மேலும் நம்

ஆயுதமாய்
நல்லறிவாய்,
ஆற்றல் வளம்தானுய்
வாய்ந்தவரும் அவரன்ருே?

## 2

மாநிலத்தில் வாழ்ந்தாலும்
மக்களெலாம் படகுகளே.
மேனிமிர்ந்து அலையெறியும்
வாழ்க்கைக் கடலினிலே
பாறைகளில் மணலடியில்
படிந்தபல பாசிபச்சை
நாறிக் கிளம்பிவந்து
நம்படகின் நாற்புறமும்
ஒட்டிக்கொள் கின்றனவால்.
உறுத்தெழுந்து நுரைகக்கி
முட்டுகின்ற புயலிடையே
முன்னேறிக் கலம்செலுத்தித்
துறைமுகத்தை எய்தியதும்,
சூரியனில் வெயில்காய்ந்து
கறைபடிந்த கடற்பாசிக்
கற்றையினை, பாகுபத
மீனினத்தின் கசிந்தொழுகும்
எச்சத்தை வழித்தெடுப்போம்.
நானுமிது போல்லெனினை
நாடி, எனைச் சுத்திசெய்து
புரட்சியெனும் பெருங்கடலில்
புறப்பட்டுச் செல்கின்றேன்.
என்ருலும்—
மருட்சியினை,
பம்மாத்தைக்
கண்டஞ்சி மயங்குகின்ற

பையனைப்போல் வரிக்குவரி
பயந்தெழுதி வருகின்றேன்.
ஐயன்அவன் தலைமீது
அருள்வட்டப் பிரபையொளி
வளையமிடக் கூடாதே!
வளையமிட்டு, ஞானவொளிக்
கலைபொலியும் மானிடராம்
லெனினவர்தம் அகல்நுதலை
ஒளித்துவிடக் கூடாதே!—
என்றென்னுள் உணர்கின்றேன்.
கொளுத்துகின்ற நறுமணத்துத்
தூபங்கள்,
ஊர்வலங்கள்,
கல்லறைகள், கருமாதிக்
காரியங்கள்,
சடங்கினங்கள்
எல்லாமும் சேர்ந்தவன்றன்
எளிமைதனை மறைத்திடுமோ?—
எனவஞ்சி,
கண்மணியை இமைகாக்கத் துடிதுடித்து
முனைவதுபோல் நடுங்குகிறேன்.
முதறிஞன் லெனினவனைப்
போலியெழில் அலங்காரப்
பொருளாக்கி,
பொய்யாக்கிக்
கேலிசெய்யக் கூடாதே!—
என்றுள்ளம் கிளர்கின்றேன்.
எழுதடா எழுதிவிடு!—
என்னிதயம் இவ்வாறு
அழுத்தமுடன் சொல்கிறது.
கடமையிட்ட ஆணைதனைத்
தொழுது தலைவணங்கி
எழுதத் தொடங்கிவிட்டேன்.

# 3

மாநகராம் மாஸ்கோ
மண்ணெங்கும்,
மக்கள்பலர்

குரலெழுப்பும் இரைச்சலிலே
உறைபனியால் குளிர்ந்திருக்கும்

தரையெல்லாம் சிலிர்த்திடுமால்.
தழல்பரப்பும் இராக்காலப்

பாசறைத்தீ அருகமர்ந்து
பனிக்குளிரில் அவர்களெலாம்

கூசியுடல் வெடவெடத்துக்
கொண்டிருந்தார்...

எவணிருந்து இவர்வந்தார்?
இவர் யாரோ?
இவர் என்ன

தவம் செய்தார்? இத்தகைய
சவஅடக்க மரியாதை

இவருக்கே வழங்குவதும்
எதற்காக?—
என் நினைவுக்

களஞ்சியத்தில் இருந்துபல
வார்த்தைகளைக் கைநீட்டி

இழுத்துவரப் பார்க்கின்றேன்.
என்றாலும்—
எச்சொல்லும்

எழுந்துவந்து ஒலிக்கவில்லை.
எல்லாமே உள்ளுக்குள்

அழுந்தித் தலைதாழ்ந்து
ஆழ்ந்திடுமால்...

அகிலத்தின் சொல்லாக்க
ஆலையினில், வார்த்தைகளின்

தொகைக்கோ கடும்பஞ்சம்!
பொருத்தமுள்ள சொற்குலத்தை

எங்கேபோய்த் தேடுவது?...

இங்கேயோ—
வாரத்தில்
ஏழ்தினமும், சிறுபொழுதாம்

பன்னிரண்டு மணிகளும்தான்
நமக்குப் பயன்படுமால்...

நெடுங்காலம் வாழ்வதற்கும்
நெறிகளிலே; இயல்வதிலே...

கொடுஞ்சாவோ—
சாக்கேதும்
கூருமல் வருகிறது.

காலண்டர் எல்லையையும்
கரைதாண்டிச் சென்றுவிடும்,

கடிகார முட்களுக்குள்
கட்டுண்ணத் தான்மறுக்கும்

காலங்கள் என்ருலோ—
'சக' மென்றும்,
'யுக'மென்றும்

புகல்கின்ரும்;
இரவுகளைத்
துயின்றே போக்குகின்ரும்.

பகற்பொழுதில் நம்முடைய
செயல்பலவும் புரிகின்ரும்.

கறுப்பதனை—
வெளுப்பாக்கிக்
காட்டுகின்ரும்.
செயலற்றே

இருப்பதற்கும் நியாயங்கள்
ஏதேதோ கூறுகின்ரும்.

என்றாலும்—

விம்மிவரும் புவிவாழ்க்கை
வெள்ளத்தை நமக்காகச்

செம்மையுற யாரேனும்
வழிநடத்திச் சென்றிட்டால்,

''ஞானி'' அவர்,
''மேதை''அவர்
என்றெல்லாம் நவில்கின்றோம்.

மாநிலத்தில் நாமேதும்
மாய்மாலம் செய்வதில்லை.

விரும்பிநமைக் கூப்பிட்டு
வேண்டிநின்றால் அல்லாது

திரும்பியும் நாம் பார்ப்பதில்லை.
செல்லமுள்ள மனையாட்டி

முகம்மலரச் செய்வதுடன்,
முற்றாக அத்தோடு—

அகமகிழ்ந்து போகின்றோம்.
ஆனாலும்,
நம்மைப்போல்

இல்லாமல், உடலோடு
உள்ளமுமே இணைந்திட்ட

வல்லாளன் யாரேனும்
வந்துற்றால்—
அவர்தம்மை

''உய்விக்க வந்த மன்னன்''
என்றே உரைக்கின்றோம்;

''தெய்வப் பிறவி''யென்றே
தீர்மானம் செய்கின்றோம்,

இவ்வாறு சொல்லுவதில்
ஏதும் அர்த்தமில்லை.

ஆவியைப்போல் கணப்போதில்
அழிந்தேகும் சொற்களிவை.

கூழ்முட்டை தனில்என்றும்
குஞ்சு பொரித்துவந்து

கண்ணில் தென்படுமோ?
கைகளுக்குள் அகப்படுமோ?

பின்னர்—
இத்தகைய கஜக்கோலைப் பிடித்து,
லெனின்

தன்னை அளந்தறியச்
சற்றேனும் முடிந்திடுமோ?

ஏனும்?—
இங்குள்ளோர் எல்லோரின் கண்களுக்கும்

தானுகத் தெரியும்வணம்
அந்தவொரு "சகாப்த"முமே

வாசல் நடைதன்னில்
நலைமுட்டி வணங்காமல்

தேசுடனே அவர்தம்மைத்
தேடிவந்து புகுந்ததுவால்.

"தெய்வாம்சம் பெற்றுவந்த
திருத்தலைவன்" என்றவரை

மொய்த்துலகம் வணங்கிடுமோ?
முக்காலும் வணங்காது.

தேவாம்சம், ராஜாம்சம்
சேர்ந்ததொரு பிறவியென

ஆவார் அவரென்ருல்,
அப்போதே கொதித்தெழுவேன்.

அந்திக் கிரியைசெய
அணிவகுத்த ஊர்வலத்தை

முந்தி வழிமறிப்பேன்;
முன்னேறிச் செல்லவிடேன்.

செவியெல்லாம் இடிமுழங்கச்
சினந்து, வசைமொழியின்

குவையை எடுத்தெறிவேன்;
கூட்டத்தார் என்னுடலை,

என்குரலை
மிதித்தேறிச் சென்றிடுவார் என்றாலும்,

ஓய்ந்துவிடேன்.
வானுலகம் உலுங்க,
கிரெம்ளினும்தான்

சாய்ந்துவிழ, "ஒழிக!" வென்று
சாபமிட்டுத் தாக்கிடுவேன்.

ஆனாலும்,
சவப்பெட்டி அருகினிலோ,
த்ஸெர்ஜின்ஸ்கி[1]

மோனத் துறுதியுடன்
நடந்துவரு கின்றாரே!

காவல் படையினரும்
காவல்நிலை தனைவிடுத்து

ஆவலுடன் இந்நாளில்
அருகுவர முடிகிறதே!

கோடிக் கணக்கான
கண்களொடு, என்னிருகண்

ஊடும் பெருக்கெடுத்து
ஓடுகின்ற நீர்த்துளியும்

கன்றிச் சிவந்துபட்ட
கன்னத்தில் உறைந்துபட்டுக்

குன்றிப் பனித்துளியாய்க்
குத்திட்டு நிற்கிறதே!

தேவாம்சப் பிறவியெனில்
திருச்சபையின் குருக்களன்றோ

நாவலித்துப் போற்றிடுவார்.
இல்லையில்லை!
நாளின்றோ—

ஊரவர்தம் இதயமெலாம்
உடைந்து, விறைத்துப்போய்

ஆருப் பெருந்துயரில்
ஆழ்ந்து குமைகிறதே!

மண்ணுலகில் வாழ்ந்திட்ட
மாந்தர்குலம் யாவரிலும்

மண்ணுலகை மிகச்சார்ந்த
மனிதர் ஒருவரை நாம்

மண்ணகத்தில் புதைக்கின்ருேம்.
மண்ணுலகைச் சார்ந்தவர்தாம்

என்ருலும்—

தன்னுடைய சிறுகுடிலுக்
கப்பாலும் தலைநீட்டி

முன்னேக்கார் தமைச்சார்ந்த
மனிதர் அவரல்ல.

உலகம் முழுவதையும்
ஊடுருவி, பிறர்கண்ணில்

இலகாது காலத்தின்
இருளில் புதைந்திருந்த

அனைத்தையுமே ஒரேநோக்கில்
அளந்தறிந்து அவர் கண்டார்.

நினைத்திங்கே பார்த்திட்டால்—

உங்களையும் என்னையும்போல்
உருவத்தில், ஒத்து அவர்தாம்

இங்கிருந்தார்.
என்ருலும்—
எண்ணத்தில் சிந்தனையில்

நம்மைவிட மிக்குயர்ந்த
நல்லபல சிந்தனைகள்

தம்மினிரு கண்களின்மேல்
தடம்பதித்துக் கீறலிட்டும்,

நம்முதட்டை மிஞ்சுகின்ற
நல்லூரமும் குறுநகையும்
தம்முதட்டில் குடிகொண்டும்
தானிருந்தார்.
என்றாலும்—
மக்கள்தமை மிதித்தேறி
மமதையுடன் செல்லுகின்ற
சக்கரங்கள் கொண்டவொரு
தேரேறி, குதிரைகளின்
கடிவாளம் தனையிழுத்துக்
கருவத்தோ டேகுமொரு
கொடுங்கோலன் உதடுகளில்
குடிகொண்ட உரம் அல்ல.
தோழரென்றால்—
அன்புள்ளம் சுரந்தோட அரவணைத்து
வாழ்ந்திடுவார்.
பகைவர்குலம் என்றாலோ—
வணங்காத
உருக்கென்ன மாறிடுவார்.
உலகத்தில் நம்மைப்போல்
அவரும்தான் போராடி
வெற்றிபெறப் பற்பலவாம்
கவலைகளை, நோய்நொடியைக்
கண்டதுண்டு.
உதாரணமாய்—
பில்லியர்டுப் பந்தாட்டில்
பிரியமுற்று, நான்கண்ணை
அல்லற் படுத்துகின்றேன்.
அவரோ, தலைவருக்கு
மிகப்பொருத்த மாய்விளங்கும்
சதுரங்க விளையாட்டில்

அகமகிழ்ச்சி கொண்டிடுவார்'
ஆமாம். சதுரங்க

விளையாட்டில் பகைவர்களை
வீழ்த்துமவர், உயிர்சுமந்த

பழிகாரப் பகைவர்கள்தம்
பக்கமும்தான் திரும்பிடுவார்.

நேற்றுவரை சொக்கட்டான்
காயாக நின்றவரை

மாற்றார் தமைத்தாக்கும்
வர்க்கப் படையாக்கி,

மதிலுடைத்து,
மூலதனக் கோட்டையினை மண்ணாக்கிப்

பதிலுக்கு மானிடத்தின்
பண்பு மிகுந்தவொரு

தொழிலாளர் சர்வாதி காரத்தைத்
தோற்றுவித்தார்.

எனக்கும் அவருக்கும்
இணைந்தபல லட்சியங்கள்

கணக்கற்ற துண்டுண்டு.
என்றாலும்,
அவரோடு

நெருக்கமுறப் பழகாத
நானே, பரவசத்தால்

உருக்கமுற்று, அவர்மூச்சில்
ஒருமூச்சை மீட்பதற்காய்

என்னுயிரைப் பலிகொடுப்பேன்.
ஏனும், நான்மட்டும்?

ஆலையினில்,
சுரங்கத்தில்,
அகல்வயலில்,
கிராமத்தில்

வேலைசெயும் உம்மையெலாம்
அழைப்பதற்கு வேண்டியொரு
வாயசைந்தால் போதாதோ?
வந்துவிட மாட்டீரோ?
தூயனவன் உயிர்மீட்கத்
துணியா திருப்பீரோ?
தன்னுணர்வை மறக்கடிக்கும்
தாளாத சோகத்தால்
முன்னடந்து செலும் யானோ,
டிராமோடு மோதாமல்
பின்னடைந்து,
உள்ளுணர்வால் தடம்விட்டுப் பெயர்ந்துவந்து
என்னுயிரைக் காக்கின்றேன்.
இருந்தாலும்,
மிகப்பெரிய
சாவையெண்ணி அழுபவர்கள்
தம்மிடையே, என்சிறிய
சாவுக்காய் இந்நேரம்
யார்தான் சஞ்சலிப்பார்?
பழங்கால ரஷ்யாவின்
நாடோடிப் பட்டாளம்
வழிமீண்டு திரும்பவுமே வந்ததுபோல்,
கொடியற்றும்,
கொடிசுமந்தும் நாட்டுமக்கட்
குலமெல்லாம் கூட்டமிட்டுப்
படைபடையாய் வருகின்றார்...
தொடர்ந்துவந்த மக்களெலாம்
தூண்கள்மிகும் மண்டபத்தை
அடைந்து நிரம்பியதால்
மண்டபமே அதிர்கிறது!

இதற்கென்ன காரணமாம்?
ஏனும்?
எதற்காக?

தந்திச் செய்தியெலாம்
சவஅடக்க மேளத்தின்

சந்தம்போல் கரகரத்துத்
தானெலிக்க...

கன்றிச் சிவந்திருக்கும்
கொடிகளதன் கண்ணிமையில்

நின்றிருந்த பனிக்கண்ணீர்
நிலம்நோக்கி வீழ்கிறது.

மானிடர்நம் அனைவரிலும்
மானுடத்தில் மிக்கவராய்த்

தான்விளங்கி வாழ்ந்திட்ட
தகைசான்ற மனிதரிவர்

எவணிருந்து வந்திட்டார்?
இவர்யாரோ?
இவர் என்ன

தவம் செய்தார்?...

## 4

மானிடர்தம் கண்களின்முன்
உல்யானேவ்[3] இவ்வுலகில்

தான்வாழ்ந்த வரலாற்றுச்
சுருக்கத்தை நாமறிவோம்.

ஆனாலும்,
தோழர் லெனின் அகண்டபெரும் வரலாற்றை

மாநிலத்தில் நவநவமாய்
மறுபடியும் எடுத்தெழுதத்

தான்வேண்டும்!...

இற்றைக்கு இருநூறு
ஆண்டுகட்கு முற்பட்ட
சற்றேறக் குறைவான
சமயத்தே, லெனின்குறித்த
விவரம் முதன்முதலாய்த்
தெரிய வருகிறது...

## 5

கேட்டாயா?
லொடலொடத்துக்
கிடுகிடுத்து,
நூற்றுண்டாய்

ஓட்டுகின்ற நீராவி
முதல்ரயிலின் ஓசையினை?

ஆட்டங்கள் கண்டுபல
நூற்றுண்டாய் அலறிவரும்

பாட்டனவன்!
ஜௌஜான்க்கும் பிராம்லிக்கும் ± முப்பாட்டன்!

முடிசூடா மன்னர்பிரான்
மூலதனம் என்னுமவன்,

அடிசாயப் பிரபுத்துவ
ஆட்சியினைக் கவிழ்த்திட்டான்.

பட்டணத்தைச் சூறையிட்டான்;
பகற்கொள்ளை அடித்திட்டான்;

தட்டிப் பறித்திட்ட
தங்கத்தைப் பாங்கிகளின்

பானை வயிற்றுக்குள்
திணித்தான்; பருக்கவைத்தான்

ஆனாலும்—

கூனல் விழுந்துடலம்
குறுகி மெலிந்தவராய்த்

தான்நின்ற தொழிலாளர்
தம்மணியில் திரண்டுவந்தார்.

புகைகக்கும் கூண்டுகளைப்
பூண்டோடு பேர்த்தெறியும்

வகை காண்போம்,
அவற்றையெலாம் வானுயர விட்டெறிவோம்

என்றவர்கள் அப்போதே
அச்சுறுத்தி எச்சரித்தார்:

''வளமார்ந்த பொன்திரட்ட
வழிபார்த்து, நீரெம்மைத்

தளமாக்கிக் கொடுமைசெய்து
தருக்குகின்றீர்.
என்றாலும்,

நினைவில் வைத்திருப்பீர்;
அவன்விரைவில் நெருங்குகிறான்!

மனிதனவன்,
வீரனவன்,
பழிவாங்கும் மறலியவன்,

போர்விளைக்கும் சூரனவன்
பிறந்துவரப் போகின்றான்!''

எரிபுகையும் கருமுகிலும்
ஏற்கெனவே ஒன்றாகி

வரிசையிட்டுப் படைக்குலம்போல்
அணிதிரண்டு வருகிறதால்.

கடும்புயலின் அறிகுறிகள்
காணுகின்ற வேளைவரின்,

நெடுவிசும்பும் இரண்டுபடும்—
நெருப்புப் புகைச்சுருள்கள்

முகிற்குலத்தின் மூச்சடைக்க
மூண்டெழுந்து மேலேறும்.

வகைபலவாய்ச் சரக்கெல்லாம்
குவிந்திருக்கும் மலைநடுவே

வறியவர்கள் பெருங்கூட்டம்!
வழுக்கைத் தலைபடைத்த

மிருகமெனும் முதலாளி
வெறுங்கணக்கைப் பார்த்துவிட்டு

"நெருக்கடி!"என் றலறுகின்றான்.
"வேலையில்லை!" என, நிலையில்

சுருக்கமுடன் போர்டெழுதித்
தொங்கவிட்டு விடுகின்றான்.

ஈக்கள் மொய்த்தரிக்கும்
இனியபல மிட்டாய்கள்

போக்கற்றுப் போய்க் குப்பைத்
தொட்டிகளில் புதையுண்ணும்.

கிடங்குகளில் தானியங்கள்
கெட்டழிந்து பூஞ்சைபற்றி

முடங்கிக் கிடந்திடுமால்.
எலியசேவ்[5] உணவுமண்டிக்

கடைமுன்னால் ஜன்னல்களைக்
கடந்தாங்கே, வேலையற்றோர்

நடைதளர்ந்து, வயிறுலர்ந்து
நாதியற்றுச் செல்கின்றார்.

சேரிகளில், குடிசைகளில்,
சிசுக்கள் சிணுங்கியழும்

பேரொலியை மிஞ்சியொரு
பேச்சு மொறுமொறுக்கும்:

"வாராய் அதிவிரைவில்!
வாழ்வுக்கு வழிகாட்டும்,

ஆறுப் பழிதுடைக்கும்
அண்ணலே நீ வந்திடுவாய்!

போரெனிலும் போரிடுவோம்;
புடைபெயர்ந்து, எங்கெங்கே
நீரழைத்துச் சென்ருலும்
நிழல்போலே உடன்வருவோம்!''

* * *

காலனிகள் இருக்குமிடம்
கண்டறியும் ஒட்டகங்காள்!
காலனைப்போல் உயிர்குடிக்கும்
கப்பற் படையினங்காள்!
பாலைவனம் வழியாகப்
படைதிரண்டு சென்றிடுவீர்!
ஓலமிடும் கடற்பரப்பின்
நுரைகிழித்து ஓட்டிடுவீர்!
மேகரண நோயால்,
விவிலியத்தால்,
சவுக்குகளால்
நாகரிகப் படுத்திடுவீர்!...
நாடுகளைச் சுரண்டுகின்ற
பாதகரே! உம்மூச்சால்
பாலைவனச் சோலைநிழல்
மீதுலவும் காற்றெல்லாம்
விஷமாகி விட்டதுவே!
ஈச்சமரத் தோப்பொன்றின்
இடைநடுவே, சவுக்கடியால்
மூச்சடைக்கும் நீக்ரோவன்
மனம்கொதித்து, மொழிகின்ருன்:
"நதியே! என்னருமை
நைல்நதியே! ஒருநாள்நீ
முதலையெனச் சீற்றமுற்று
மூண்டெழுந்து பொங்கிடுவாய்!

இரவினிலே தோற்றுமென்றன்
இருட்டுநிறந் தனைமிஞ்சும்
கருமையொடு சினந்தெழுவாய்!
கனலுமிழ்வாய்! என்னுடம்பின்
குருதியைப்போல் செந்தழலைக்
கொப்புளித்துக் குமுறிடுவாய்!
பெருகிவரும் தீப்பிழம்பில்
தொங்கி பெருத்திருக்கும்
வெள்ளையரும் கறுப்பர்களும்
வேகட்டும்!
வெடிக்கட்டும்!

கொள்ளையர்கள் வயிறெல்லாம்
வறுபகட்டுக் கொதிக்கட்டும்!
வேட்டையிலே கிடைத்திட்ட
யானைகளின் தந்தங்கள்
ஈட்டியைப்போல் அவர்வயிற்றில்,
இருதயத்தில் பாயட்டும்!
நான்சிந்தும் குருதியெலாம்
நாளை வருபவர்கள்
தான்வாழச் சிந்தட்டும்!
தகிக்கின்ற சூரியன்போல்
முகம் சிவந்து, பழிவாங்க
முனைபவனே! விரைவில் வா!
பகைமுடித்து, நீதியினைப்
பாலித்து எமைக்காக்க
வா விரைவில்! கூற்றுவனும்
என்னருகில் வந்துவிட்டான்!
சாவு வரும் வேளையிலே
நான்மொழிந்த சாபத்தை
மறக்காதே!
என்னருமை நைல்நதியே, மறக்காதே!
இறக்கின்றேன்,
இறக்கின்றேன்,
என்னருமை நைல்நதியே!"

## 6

உறைபனிசூழ் உருசியமாம்
நாடுமுதல், உஷ்ணத்தால்
கருகுகின்ற நாடுவரை
எந்திரங்கள் கணகணத்து.
மொறுமொறுக்கும்; முனகலிடும்;
வியர்வைபொழி ஆலையெலாம்
வெறிபிடித்து லாபத்தைத்
தேடிமிக விரைந்தோடும்.
இவனோவா—வோஸ்னெசன்ஸ்க்[6]
என்கின்ற பஞ்சாலைச்
சுவரெல்லாம் அதிர்ந்துபடப்
பாட்டொன்று கேட்டதுவே:

"ஆலையே! என் ஆலையே!
நூலை நூற்கும் பஞ்சறைக்கும்
ஆலையே! என் ஆலையே!
மேலுமொரு ஸ்டெங்கா ராசின்[7]
மீண்டும்வந்து குரல்கொடுக்கும்
காலம்வரப் போகுதே!"

## 7

இன்றெமது புத்திரர்கள்,
"போலீசார் என்றால் யார்?"
என்றெம்மைக் கேட்பதுபோல்,
எம்பேரப் பிள்ளைகளும்
"முதலாளி என்பதற்குப்
பொருள் என்ன?" எனக் கேட்பார்.

அதனாலே—
என்பேரப் பிள்ளைகட்காய், அந்நாளின்
முதலாளித் துவமதனைப்
படம்பிடிக்க முனைகின்றேன்.
முதலாளித் துவம்உலகில்
வாலிபனாய் இருந்திட்ட
வயதில், அவன் அத்தனைக்கு
மோசமில்லை; சுறுசுறுப்பாய்
இயங்குகின்ற பயலாய்த்தான்
அவனிருந்தான்; வேலைசெயத்
தயங்கிடவும் இல்லைஅவன்;
தன்வெள்ளை மேலாடை
நயங்கெட்டுக் கறைபடியும்
என்றஞ்சி நாணவில்லை.
நிலப்பிரபுச் சமுதாயப
பிடிப்பால், நெருக்குற்றுக்
கலங்கிவிட்ட அவ்விளைஞன்
கட்டறுக்க—
நாமெல்லாம்
இந்நாளில் செய்வதுபோல்—
அந்நாளில் எழுச்சியுற்று
முன்னேற, புரட்சிசெய
முனைந்திட்டான்.
"லா மார்சேல்ஸ்"
தன்னையுமே பாடுதற்குத்
தானும்அவன் முன்வந்தான்.
இன்னுமவன்—
சிந்தித்தான்;
சிந்தித்து, சிறப்பாக வேலைசெயும்
எந்திரங்கள் பற்பலவும்
இயற்றி இயக்குவித்தான்;

மனிதர்தமை எந்திரத்தின்
வலிமைக்குத் தலைவணங்கிப்
பணிபுரிய வைத்திட்டான்;
இதனாலே படைபோன்று
உலகத்தின் பரப்பெல்லாம்
உழைப்பாளர் பெருங்கூட்டம்
அலைபோலப் பரவியதால்.
அத்தோடு விட்டானா?
மலைபோன்ற ராஜ்யங்கள்,
மகாப்பிரபு மாநிலங்கள்
பலவற்றை,
அவர்தமது பருவயிர மணிமுடிகள்,
ஒளிசிதறும் அணிமணிகள்
அனைத்தோடும் ஒரே வாயில்
பளிச்சென்று விழுங்கிட்டான்;
பருத்தான்;
சதைபோட்டான்.
விவிலியத்தில் வருகின்ற
மாட்டைப்போல், கொழுப்பேறித்
தவித்திட்டான்; உதடுகளை
நாவாலே தடவிட்டான்!
நாக்கா?—
பாராளு மன்றம்தான் அவன்நாக்கு!
என்றாலும்—
தாக்குப் பிடிப்பதற்குத்
தானியலாத் தன்மையிலே
வருடங்கள் செலச்செல்ல
உருக்கொத்த அவன்வலிமை
வறண்டுவர,
உண்டுகளித் துறங்கிவந்த வாழ்வதனால்

ஊதிப் புடைத்திட்டான்;
உள்ளத்தில் அவன்தினமும்
காதலிக்கும் பேரேட்டுக்
கணக்குப் புத்தகம்போல்
பருத்தான்; கனத்திட்டான்.
பாருலகம் முன்னென்றும்
அறியாத விதத்தில்பல
அரண்மனைகள் கட்டுவித்தான்.
ஓவியரும் சிற்பிகளும்
அவனுள்ளம் உவகைகொளும்
பாவனையில் தத்தமது
பழகுகலைக் கைத்திறனால்
மாளிகையை அலங்கரித்தார்.
மற்றுமவன் தனைச்சூழ்ந்து
பாழடைந்த பலமுகங்கள்
பணிந்துநிற்க,
போலீசும்
அவனருகே நின்றுங்கே
அமைதியினைக் காத்துநின்றார்.
அவனெனிலோ—
பூவினங்கள் மலிந்திருக்கும்
புல்வெளியில் மேய்ந்துவரும்
ஆவினம்போல், பாடல்களை,
அற்புதமாம் வண்ணத்தை
அறிந்துணர மாட்டாத
ஆத்மாவாய்த் தானிருந்தான்.
அறநெறிகள்,
அழகியல்கள்,
இன்னபிற அம்சமெலாம்
வெறுமனே அவன்வீட்டு
வேலைக் காரிகள்தாம்.

இறுதியிலே—
அவன், மக்கள் இரத்தத்தை, வியர்வையினைப்
பருகிப் பருகிநிதம்
பசியாறி, களித்துறங்கி,
ஒன்றுக்கும் உதவாமல்
ஊதிப் புடைத்துவிட்டான்;
தின்று செழித்துமிகத்
திணறிப்போய், தன்வீட்டு
மஞ்சத்தில் படுப்பதுபோல்,
வரலாற்றின் பாதையிலே
பஞ்சுப் பொதிபோலே
மல்லாந்து படுத்திட்டான்.
பாதையினை வழிமறித்துப்
படுத்துக் கிடந்த அவன்
மீதேறிச் செல்வதற்கும்,
வழிவிலகிப் போவதற்கும்
மாட்டாத காரணத்தால்—
வழிமேற் கிடந்தவனை
வேட்டுவைத்துத் தகர்ப்பதன்றி
வேறுவழி ஏதுமில்லை!

## 8

இங்கேநான் பாடிவரும்
இக்கவிதை தனைக்கண்டு
பொங்கிவரும் சீற்றத்தால்
புழுங்கி, விமர்சகர்கள்
கையில் சவுக்கெடுப்பார்;
கவிஞரெலாம் வெறிகொண்டு
மெய்குலுங்க என்மீது
சீறி விழுந்திடுவார்;

"கவியா இதுவெல்லாம்?
கடைந்தெடுத்த பிரசாரம்!

சுவையுண்டா?
உணர்வுண்டா?
சொற்சால அலங்காரம்!"

—என்றெல்லாம் பழித்திடுவார்
என்பதையும் யானறிவேன்.

என்றாலும்—
"முதலாளித் துவ"மென்று இயம்புங்கால்,

அச்சொல்லில் அத்தனைக்கு
அழகில்லை;
"குயில்" என்று

உச்சரித்தால் தேன்சொட்டும்
என்பதுவும் வாஸ்தவம்தான்.

ஆனாலும்,
மறுபடியும் மறுபடியும் அதைப்பற்றிப்

பேசு பிடித்தெழுதப்
பின்வாங்க மாட்டேன்யான்.

கோஷங்கள் போற்கவிதை
குலவையிட்டால்,
பொய்மையதன்

வேஷங்கள் கலைந்தோடும்!
உண்மை வெளியாகும்!

கவிபாட நான்என்றும்
கருத்துக்குத் தடுமாறித்

தவித்ததில்லை;
பொருளுக்குத் தட்டழிந்து நின்றதில்லை—

என்பதையும் நீரறிவீர்.
என்றாலும்—
காதல்மொழி

இன்பத்தைப் பாடுதற்கோ
இதுஉரிய நேரமல்ல.

இடிபோன்று முழக்கமிடும்
என்கவிதைத் திறத்தையெலாம்,
கொடிதூக்கி, நீதிக்காய்க்
குலவையிட்டுப் போராடும்
பாட்டாளி மகனுக்கே
படைக்கலமாய்ப் படைக்கின்றேன்.

''பாட்டாளி'' எனும்சொல்லோ,
கம்யூ னிசம்என்று
கேட்டாலே நெஞ்சத்தில்
கிலியடித்து நடுங்குகின்ற
கூட்டத்தார் தமக்கெல்லாம்
கேட்பதற்கே கூசுகின்ற
நாராசம் போலொலிக்கும்!
நமக்கோ—
அச் சொல்லே
பேரிசையாம்!
செத்தாரும் பிழைத்தெழுந்து, தோள்புடைத்துப்
போர்புரியச் செய்யுமொரு
புனிதச்சொல் மந்திரமாம்!

* * *

ஏழடுக்கு மாடியெலாம்
நடுநடுங்கி எதிரொலிக்கக்
கீழடுக்கின் கீழிருந்து
பெருங்கூச்சல் கிளர்ந்தெழுமால்!
''சேரிகளின் இருள்கவிந்த
சிறுகுடிவில் வாழும்யாம்
வீறிட் டெழுந்திடுவோம்;
விரிநீல விண்பரப்பும்
பிளப்போம்; சுதந்திரமாய்ப்
பிரவேசம் செய்திடுவோம்.

தலையறுக்க,
பாட்டாளி வர்க்கத்தைத் தான்திரட்ட

ஒருதலைவன்,
தொழிலாளி வயிற்றில் உதித்த மகன்

வருகை புரிந்திடுவான்;
வாழ்வகையைக் காட்டிடுவான்.''

முலதன வர்க்கத்தின்
முடிவில்லா வேட்கைக்கு

ஞாலமிது ஏற்கெனவே
மிகச்சிறுத்துப் போனதனால்,

டாலடிக்கும்,
பலகோடி டாலர்பெறும் பருவயிரக்

கோலமணி மோதிரங்கள்
தரித்த கொழுங்கரத்தால்,

படுநாசம் விளைத்தேனும்
லாபத்தைப் பார்ப்பதற்காய்

அடுத்தவர்தம் நாட்டையவர்
அபகரிக்க முனைகின்றார்.

பகற்கொள்ளை வெறிபிடித்து,
இரும்புப் படைக்கலங்கள்

தொகைபலவும் எதிரொலித்து
மோதப்போர் தொடங்குகின்றார்.

"கொல்லுங்கள்!"
என்றே கூச்சலிட்டு, பணம்படைத்த

புல்லரவர் ஆதிக்கப்
போட்டிப்போர் புரிகின்றார்.

வளமார்ந்த கிராமங்கள் ஒவ்வொன்றும்—
வல்லுயிரைக்

களமதனில் இழந்தோர்க்குக்
கல்லறையாய் மாறிடுமால்.

கால்கையை இழந்தவர்க்கு,
கம்புக்கால் தனைப்படைக்கும்
ஆலைகளாய் நகரமெலாம் ஆகிடுமால்.
அதே சமயம்—
வெம்போரை விளைவித்த
வெறியர்களோ, விருந்தாடத்
தம்மேஜை முன்னமர்வார்;
தாம்பெற்ற வெற்றியினைக்
கூறிட்டுத் தின்பதற்காய்க்
கூடிடுவார்.
ஆனாலும்—
போரில் மாண்டுபட்டோர்
புதையுண்ட கல்லறைக்குள்
வெள்ளெலும்பு மொறுமொறுக்கும்;
வீழ்ந்துபட்டோர் தம்முடலம்
உள்ளிருந்து எழுப்புகின்ற
ஒலியதனைக் கேளீரோ:
"பாவிகளே! உம்மையெலாம்
படைமுகத்தில் யாம்ஒருநாள்
காவுகொண்டு குலவையிடும்
காலம்வரும்!
நீரிழைத்த
புன்செயலை, குற்றத்தைக்
காலம் பொறுத்தருளி
மன்னிக்கப் போவதில்லை!
அந்நாளில், மனிதர்குலத்
தலைவனென வருமொருவன்
தருக்கர்உந்தம் சதிகளுக்கே
உலைவைப்பான்;
போரனைத்தும் ஒழியவொரு போர்புரிவான்!'
கண்ணீரும் காசினியில்
காட்டாறாய் வழிந்தோட

செந்நீரும் கொழுகொழுத்த
சேருய்ப் பெருக்கெடுக்கக்
கண்டு, சிலர்
நல்லுலகக் கற்பனையை நனவாக்கிக்
கொண்டுவரப் பகற்கனவு
கண்டுவர லானுர்கள்.
என்ருலும் —
அசையாத எதார்த்தமெனும் கற்பாறைக்
குன்றின்மேல்,
தர்மசிந்தை கொண்டிருந்த அறிஞரவர்
சிந்தனைகள் மோதியதும்
சிதறுண்டு போயினகாண்!
கொந்தும் வறுமையினில்
வெந்துருகும் கோடிமக்கள்
தந்துயரைத் தவிர்ப்பதற்கு,
தர்மசிந்தை எனும்சிறிய
சந்துவழி காட்டிடுமோ?
முன்னேற்றம் சாத்தியமோ?
இதற்கெல்லாம் காரணமாய்
இருந்த முதலாளியவன்
முதற்கொண்டு நிலைமையினைச்
சீராக்க முடியவில்லை.
அந்தமுதலாளியவன்
ஆளுகைக்கு ஆட்பட்ட
எந்திரமும் வெறிகொண்டு
இஷ்டம்போல் இயங்கியதே!
ஆதலினுல்,
அவன்வகுத்த சமுதாய அமைப்பதுவும்
மோதுண்டு,
நெருக்கடியால்,
வேலை நிறுத்தத்தால்,

பூகம்பம் கண்டதுபோல்
அடியிற் பொலபொலத்துச்

சாகரத்தின் அலேபோலத்
தள்ளாட்டம் கண்டதுகாண்!

தங்கத்தால் விளேந்த இந்த
சர்க்கஸ் விளேயாட்டு

எங்கேபோய் முடிந்திடுமோ?
எவர்மேல் குறைகூற?

எவரோடு நாம்சேர?
எவரோடு நாம்செல்ல?

என்றெல்லாம்—

கவலேகொண்டு,
கோடிக்கை கால்தலேகள் கொண்டதொரு

வர்க்கம்தன் மூளேயினே
வாட்டித் தனக்குள்ளே

தர்க்கித்து, வழிகாணத்
தவித்து நின்றதுகாண்!

* * *

மூலதனத் தின் வாழ்க்கை
முறிபட்டு,
அரிபட்டுக்

காலத்தால் பழுதுற்றுக்
கரைந்துவரும் நாளேயிலே,

கார்ல் என்னும் மானிடனே,
லெனினுக்கு மூத்தவராம்

மார்க்ஸ் தன்னேக்-காலமது
பெற்றெடுத்து வழங்கியதால்.

கார்ல் மார்க்ஸ்!
அவர்தம் சித்திரத்தைக் காண்கின்றேன்:

நேர்கொண்ட கண்ணேக்கு
நிமிர்ந்திருக்க, நரைபடிந்த

தாடியுடன் தோற்றுமந்தத்
தனிமுகத்தைக் காண்கின்றேன்.

வேடிக்கை!
அவர்தமது வாழ்வுக்கும் காட்சிக்கும்

வேற்றுமைதான் எவ்வளவு?
மார்க்ஸ்அவர்தம் திருவுருவத்

தோற்றத்தை,
வெண்சலவைக் கல்லினிலும்,
சுட்டெடுத்த

சுண்ணும்புக் கட்டியிலும்
வடித்தெடுத்த சிற்பத்தில்,

துயரினிலும் கவலையிலும்
தோய்ந்து கரைசேர்ந்த

வயதான கிழவரையே
மக்களெலாம் காண்கின்றுர்.

ஆனுலும்—
தொழிலாளர்
ஆர்வத்தோ டணிதிரண்டோர்

சேனையெனப் புரட்சிகர
மார்க்கத்தில் செல்வதற்காய்

முதலடியை எடுத்துவைத்த முன்னுளில்,
மார்க்ஸ்அவர்தம்

இதயம்தான் அளப்பரிய
உணர்வின் எழுச்சியினுல்

குதியாட்டம் போட்டதனை
எடுத்துரைக்கக் கூடிடுமோ?

தொழிலாளர் பட்டறைகள்
தோறும்தாம் சென்றுங்கே

உழைத்துக் கரமெல்லாம்
உரமேறிப் போனவர்போல்,

உற்பத்தித் துறையதனில்
'உபரி மதிப்' பென்னும்

அற்புதமாம் உண்மையினை
அவர்கண்டு கூறிவிட்டார்.

இம்மதிப்பைக் களவாடி
ஏய்த்துப் பிழைப்பவரை

அம்மாடி! கைப்பிடியாய்
அவர்பிடித்துக் காட்டிவிட்டார்!

ஏனையவர் எல்லோரும்
இன்னதுதான் செய்வதெனத்

தானறிய மாட்டாது,
தலைகவிழ்ந்து,
முதலாளி

தொந்திக்கு மேல், அவனைத்
தலைதூக்கிப் பார்ப்பதற்கும்

சிந்தை துணியாது
சிந்தா குலமுற்று

நடுநடுங்கிக் கொண்டிருந்த நாளையிலே—
மார்க்ஸ்மட்டும்,

மதர்த்துத் திமிர்பிடித்து
மதங்கொண்ட காளையென

முதிர்ந்துவிட்ட மூலதன
முதலையினைச் சாகடிக்க,

பாட்டாளி வர்க்கத்தை
வர்க்கப்போர்ப் பாதையினில்

கூட்டி வழிநடத்தும்
குறிக்கோளை ஏற்றுவிட்டார்.

சந்தர்ப்ப வசத்தாலே
சம்பவிக்கும் அலைவீச்சே

நந்தமரை வறுமையெனும்
நரகினின்று விடுவிக்கும்

எனக்கருதும் தெளிவில்லாக்
கருத்துகளில் ஈடுபட்டு

மனமிழந்து நின்றிருந்தோம்.
அவ்வேளை மார்க்ஸ்அவரே

வரலாற்றின் ஆழமிகும்
நியதிகளை வடித்தெடுத்து

உரைசெய்தார்;
பாட்டாளி வர்க்கமதே உலகோட்டும்

தலைவனெனும் உண்மையினைச்
சாற்றிவிட்டார்.
மார்க்ஸ்அவர்தம்

புத்தகங்கள்,
அச்செழுத்தும்
புள்ளி விவரணமும்

மெத்தக் குடிபுகுந்த
வெறும்அச்சுப் பிரதிகளோ?

இல்லையில்லை:
அவர்தமது எழுத்தெல்லாம்,
நூல்களெலாம்

வெல்லரிய உறுதியொடும்,
வீறோடும், சீரோடும்,

தோள்புடைத்துத் தலைநிமிர்ந்து,
தொழிலாளர் கூட்டத்தைச்

சூள்உரைத்து அணிவகுத்துச்
செல்லவைத்த சூட்சுமம்காண்!

''முதலாளி வர்க்கத்தை
மோதுங்கள்! போரிட்டுப்

புதுவாழ்வு காணுங்கள்!
புத்தகத்தில் காண்கின்ற

கருத்துகட்குக் கண்கண்ட
நடைமுறையே கட்டளைக்கல்!

ஒருத்தர்— நடைமுறைக்கு
ஒருவீரர்— ஓர் நாளில்

உதித்தெழுந்து வந்திடுவார்!
உம்மையெலாம், அவ்வீரர்

புத்தகங்கள் தனிலிருந்து
போர்க்களத்தின் திசைநோக்கி

வைத்த அடி பிசகாமல்
வழிகாட்டிச் சென்றிடுவார்!''

என்றவர்தாம் வழிகாட்டி
எடுத்துரைத்தார்.
இவ்வாறு

அன்றவர்தம் கரம்நடுங்க
அந்திமத்து வாசகத்தை

எழுதுகின்ற வேளையிலே—
யானறிவேன்—மார்க்ஸ்அவர்தாம்

பாரீசுக் கம்யூனின் பதாகையது,
கிரெம்ளினின்மேல்

ஏறிப் பறப்பதனை
ஏறிட்டுப் பார்த்துவிட்டார்!

பழம்போல் வருடங்கள்
பழுத்துக் கனிந்து வர,

இளம்பிள்ளை யாயிருந்த
தொழிலாளி இனமதுவும்

வளர்ந்தோங்கிப் பெரிதாகி
வாலிபனாய் மாறியதால்.

கிளர்ந்தெழுந்த தொழிலாளர்
கிளர்ச்சி பல நாள்தோறும்

அலைபோலே பொங்கியெழ,
மூல தனம்அதனின்

மலைபோன்ற கற்கோட்டை
மதிற்சுவர்கள் கலகலத்து

அதிர்ந்தனகாண்!
மானிடர்தம் பரிணாம ஆவேசம்

முதிர்ந்துவர முதிர்ந்துவர,
மொறுமொறுத்த சிறுகாற்றும்

மூண்டெழுந்த புயற்காற்ருய்
முழக்கமிட்டுச் சீறியதே.

ஆண்டு பலப்பலவாய்
அதிகரித்த ஆவேசம்

கோவமிகும் கலகமெனக்
கொதித்தெழுந்து,
செந்நெருப்பைத்

தூவும் புரட்சிகளாய்
உருமாறத் தொடங்கியதே!

முதலாளித் துவமதனின்
வழிமுறைகள் முழுவதுமே

இதயமிலா,
இரக்கமிலா ஈனச் சிறுமைகளே.

தையர்சும், கல்லிபெட்டும்[8]
தடிமாட்டுத் தனமாக

நையப் புடைத்திட்ட நாளதனில்,
பாரீசில்

காவுப் பலியான
கம்யூனர்டு வீரர்கள்தம்

ஆவியெலாம் பாரீசுக்
கல்லறையின்[9] அடியிருந்து,

"தோழர்களே! பாருங்கள்.
சொல்லுவதைக் கேளுங்கள்!

வீழ்ந்துபட்ட எமைக்கண்டும்
கற்றறிய மறவாதீர்.

தமக்குள்ளே ஒன்றுபடாத்
தன்னந் தனியர்களாய்

சமர்புரிவோர்க் கெந்நாளும்
சஞ்சலம்தான்! மறவாதீர்.

தொழிலாளி வர்க்கமெலாம்
தோளோடு தோளிணைந்தால்
அழிவில்லை.
உம்கரங்கள் அத்தனையும் ஒன்றாகிக்
கதா யுதம்போன்றோர்
கட்சியெனத் திரண்டிட்டால்
அதமாவான் உம் எதிரி!''
என்றாங்கே அறைகூவும்.
"தலைவர்கள்யாம்!''
என்றுபறை சாற்றிவரும் பேர்வழிகள்
சிலருண்டு.
சமயம்வரின்
திருப்பிநமைத் தாக்கிடுவார்.
வார்த்தைகளால் ஏமாற்றும்
வஞ்சரிவர்,
பசுத்தோலைப்
போர்த்திவரும் புலியிவர்கள்
புன்மைகளைக் கண்டறிவீர்.
தலைவரென நமக்குவரும்
தகையாளர், ரொட்டியினும்
எளியவராய்,
ரயில்செல்லும் இருப்புப் பாதையைப்போல்
நேர்முகமாய்ச் செல்பவராய்,
நெருப்பெனினும் புகுந்துசெல
ஓர்பொழுதும் தயங்காத
உத்தமராய்த் தானிருப்பார்.

* * *

வர்க்கங்கள்,
கருத்துக்கள்,
வழக்குமொழி,
வாழ்நிலங்கள்
பற்பலவும் மாறிவர,
பாருலகும் பசும்பொன்னும்

சக்கரத்து அச்சாணி
தனிற்சுழன்று வந்ததுவே.

அக்காலம்—

முரண்பாடு மிகமலிந்த
முதலாளித் துவம்அதுவோ

திரண்டுருண்ட பெருமுள்ளம்
பன்றியொன்றின் தேகமெலாம்

குத்திட்டு நிற்கின்ற
முட்களைப்போல், துப்பாக்கிக்

கத்திகளைச் சிலிர்க்கவைத்துக்
காட்சி யளித்ததுகாண்.

விட்டுவிட்டுத் தெரிகின்ற
கலங்கரையின் விளக்கம்போல்

வட்டமிட்டு,
ஐரோப்பா மண்ணில்கம் யூனிசமோர்

அலகையெனத் திரிந்துவந்த
அந்நாளில்—
சிம்பர்ஸ்க்காம்

தலமதனில் லெனின்என்னும்
ஒருபையன் தான்பிறந்தான்.

## 9

எனக்குத் தெரியும் ஒரு தொழிலாளி—
எழுத்தறிவைத்

தனக்குத்தான் கற்றறியாத்
தற்குறிதான்;
என்றாலும்

லெனினவர்தம் பேச்சொன்றைக்
கேட்டிருந்தான்.
அதனாலே

நனிசிறக்கும் உண்மையெலாம்
நன்றாகத் தெரிந்திருந்தான்.

எனக்கு சைபிரிய
உழவர்கள்தம் கதையொன்றும்

நினைவுக்கு வருகிறது:
நிலத்தை அவர் பறித்தார்;

பங்கிட்டார்;
பாடுபட்டார்;
பயிர்விளைத்தார்; பசிபோக்கும்

தங்கச் சுரங்கமெனத்
தான்மாறச் செய்துவிட்டார்.

லெனின்பற்றி அவர்களெலாம்
ஏதும் அறிந்ததிலை;

எனினும், அவர்களெலாம்
லெனினிஸ்டாய்த் தானிருந்தார்.

மலைகளுக்கும் சென்றிருந்தேன்—
மண்டிவளர் புதர்கள் அங்கு

வளரவில்லை; முகில்கள்மட்டும்
மலைமுகட்டில் தவழ்ந்தனவே.

பலநூறு மைல்கடந்து
மலையேறிப் பார்க்குங்கால்

மலைமீது ஒற்றைக்கோர்
மனிதனைத்தான் நான்கண்டேன்.

மந்தைகளை மேய்க்குமந்த
மனிதன்தன் சட்டையினில்

சொந்தமொடு லெனினுருவ
பாட்ஜொன்றைத் தரித்திருந்தான்.

"குண்டூசி தனையுடையில்
குத்துவதோர் அதிசயமோ?

பெண்டுகளும் தம்மழகைப்
பெருக்கிக் காட்டவொரு

குண்டூசி தனைக்குத்திக்
கொள்வதும் வழக்கம்தான்''
எனச்சிலபேர் சொலக்கூடும்.
என்றாலும்,
அவன்மார்பில்

அணிந்திருந்த பாட்ஜதனில்
லெனின்மீது அவன்கொண்ட

இணையற்ற பெரும்பக்தி
குடிகொள்ளும் இதயத்தின்

தணலன்றோ சுடர்விட்டுத்
தகதகத்து ஜொலிக்கிறது.

பக்தியெனில்—
திருச்சபையின் பாரகர்கள் குருமார்கள்

யுக்தியினால் போதித்து
உருவேற்றும் பக்தியல்ல.

ஏனென்றால்—

எந்தவொரு கடவுளரும்
லெனினவரைத் தேர்ந்தெடுத்து

இந்தப் புவிதனக்கோர்
இரட்சகராய் அனுப்பவில்லை.

படிப்பாலும் உழைப்பாலும்
அவர்நித்தம் பாடுபட்டுப்

படிப்படியாய் முன்னேறி,
பாருலகின் பாடுபடும்

குடிமக்கள் தம்முளத்தில்
ஆசானாய்க் குடிகொண்டார்.

* * *

விண்ணிற் பறந்துசெலும்
விமானத் திருந்து ரஷ்ய

மண்ணிதனைப் பார்த்திட்டால்—

எண்ணற்ற பிரம்புகளால்,
எழுபுரி கொண்ட தொரு

திண்ணமிகும் சாட்டையினுல்
திரும்பத் திரும்ப அடி

கொடுத்ததனுல் மேனியெலாம்
கறுத்துக் கோடிட்டுத்

தடித்ததுபோல் பலநதிகள்
தடம்பதித்துத் தாளுேடும்.

நிலப்பிரபு வர்க்கத்தார்
நித்தநித்தம் மக்கள்தமைக்

குலேயுயிராய்க் குற்றுயிராய்
அடித்துதைத்த கொடுமையினுல்

விழுந்திட்ட தழும்புகளோ
நதிகளேயும் விடக் கறுப்பாய்

அழுந்திக் காட்சிதரும்.
அக்கால ரஷ்யாவை

எத்திசையில் நின்றே நீர்
எவ்விதமாய்ப் பார்த்தாலும்

அத்திசைகள் எங்கணுமே—
வானே அளந்துநிற்கும்

மலேகளேயும்,
சிறைகளேயும்,
சுரங்கத்தின் பளுதூக்கி

நிலேகளேயும் காண்பீர்கள்.
என்ருலும்,
நித்த நித்தம்

ஆலேகளின் பட்டறையில்
அரும்பாடு பட்டுழைத்து

வேலேசெய்த தொழிலாளர்
வாழ்வதுவோ,
வெங்கொடுமைச்

சிறைகளேயும், பதுங்குகுழிச்
சேற்றுக்குள் போர்புரியும்

முறையினையும் விடக்கொடுமை
மிஞ்சியதாய் இருந்ததுகாண்.

அழகினிலும் அறிவினிலும்
செழித்தோங்கி, அருஞ்செல்வ

வளமிகுந்த தேசங்கள்
வையகத்தில் உண்டென்று

அறிவேன்யான்.
என்றாலும்—
இத்தகைய அளப்பரிய

பெருந்துன்பில் உழன்றுவந்த
பிறிதோர் தேசத்தை

என் கண்கள் கண்டதில்லை.
இருந்தாலும்,
வேதனையை,

வன்கொடிய அவமான
வாதனையை என்றென்றும்

பொறுத்திருக்க முடிந்திடுமோ?
பொறுமைக்கும் எல்லையுண்டு.

''உறுத்தெழுவீர்!
விடுதலையை, உழுநிலத்தை நாம்பெறவே

போரிடுவீர்!''
எனநாளும் புடைபுடைத்து வரும்கோஷம்

சீறியெழ,
வாழ்வதனின் சிறுமைகளைப் போக்குதற்காய்

வீறுகொண்ட தனிநபர்கள்
கலகக் கொடிதூக்கி,

வெடிகுண்டால்,
துப்பாக்கி வேட்டால்,
நாடாண்ட

முடிமன்னன் ஜாரவனை
முடித்துவிடத் துணிந்திட்டார்.

குண்டொன்றால் ஜார்தன்னைக்
கொன்றுவிட்டால்,
நாட்டினர்தம்

தொண்டடிமைப் புலைவாழ்க்கை
தொலைந்திடுமோ? மாறாக,

வெடிவைக்கத் திட்டமிட்ட
வீரர்கள்தான் ஜார்கையில்

பிடிபட்டார்.
அவர்களிலே அலெக்ஸாந்தர் எனும்பெயரோன்—

லெனினவர்தம் தமையனவன்—
தானும் இருந்திட்டான்.

தனிமனிதன் ஒரு ஜாரைச்
சாகடித்து விட்டக்கால்,

அடுத்துவரும் ஜார்மன்னன்
அவனையுமே மிஞ்சுகின்ற

கொடுமைகளைப் புரிவதையே
குறிக்கோளாய்க் கொண்டிடுவான்.

ஆதலினால்—
ஸ்லிஸ்ஸல்டர்க்[10] சிறைக்குள்ளே
அலெக்சாந்தர்

பாதிநடு ராத்திரியில்
தூக்கில் பலியானான்.

இதுகண்டு,
பதினேழு வயதாகி இருந்த லெனின்

கொதிப்படைந்தார்;
சபதமொழி கூறுமொரு வீரனைப்போல்

பதிலுரைத்தார்:

"அண்ணே! நீ மடிந்தாய்.
ஆனாலும், உனைப்போல்யாம்

உண்மைக்காய்ப் போரிடுவோம்.
உறுதியிது.
என்றாலும்,

என்வழியோ வேறுவழி;
இனிநாங்கள் போர்புரியப்

பின்பற்றும் வழி, வெற்றி
பெறுவதற்கும் தவருது!"

## 10

தலைவரவர்—
எனப்படுவோர் தமைநீங்கள் முச்சந்திச்

சிலைகளிலே பார்த்திருப்பீர்;
"எல்லாம் தெரிந்தவன்நான்.

எதற்கும் வழிசொல்வேன்"
என்றுரைக்கும் பாவனையில்

மதர்த்தாடும் மயில்போன்று
மமதையொடு பிலுக்கிடுவார்.

எத்துசித்து வேலைசெய்து
ஏய்த்துப் பிழைத்துவரும்

இத்தகைய பம்மாத்தை
லெனின் என்றும் செய்ததில்லை.

வினைத்தூய்மை,
நல்லெளிமை,
விடாமுயற்சி
எனுங்குணங்கள்

அனைத்தும்தான் அவர்வாழ்வின்
அரும்பண்பாய் விளங்கினகாண்.

ஆலையிலும்,
சுரங்கத்தின் அடியினிலும் உழைப்போர்தம்

கூலியினை உயர்த்துதற்கும்,
கொடுமைசெயும் மேஸ்திரியின்

கொட்டத்தை ஒடுக்குதற்கும்,
கூலிதனைக் குறைக்கின்ற

வெட்டதனை,
அபராதம் விதிப்பதனை எதிர்ப்பதற்கும்

தொழிலாளர் தம்மோடு
தோளிணைந்து போராடும்

வழிகளிலே லெனின் தமது
வாழ்வை அர்ப்பணித்தார்.

என்றாலும்,
போராட்டம் இத்தகைய பற்பலவாம்

அன்றாடப் பிரச்சினைக்காய்
ஆர்ப்பரித்து, அத்தோடு

நின்றிடுமோ?
இல்லையில்லை. நிலையான குறிக்கோளும்

ஒன்றுண்டு.
சோஷலிச லட்சியமே நம்குறிக்கோள்.

முதலாளித் துவம்நமது
முழு எதிரி;
துப்பாக்கி

அதனைத் தொலைப்பதற்கோர் ஆயுதமாம்.
துடைப்பம் அல்ல!

—இந்தவொரு போராட்ட
லட்சியத்தை, தொழிலாளர்

சிந்தையிலும் அறிவினிலும்
சென்றுகுடி யேறும்வண்ணம்

மறுபடியும் மறுபடியும்
லெனினவர்தாம் வலியுறுத்தி

உருவேற்றி வந்திட்டார்.

போதமிதை நன்றாகப்
புரிந்துகொண்டோர், வருநாளில்

மீதமுள்ள போர்களுக்கும்
எடுத்திதனை விளம்பிடுவார்.

இவ்வாறாய்—

நேற்றைக்கு வெகுசிலராய்
நின்றவர்கள், இன்றைக்கு

நூற்றுக் கணக்காவார்;
நாளைக்கோ அவர்களெலாம்

பல்லா யிரக்கணக்கில்
பல்கிப் பெருகியுல

கெல்லாம் உழைத்துவரும்
தொழிலாளர் யாவரையும்

சேர்ப்பார்; அணிதிரண்டு
சேனையெனத் தான்மாறி

ஆர்த்தெழுவார்;
பகிரங்க ஆர்ப்பாட்டம் தனைத்தொடங்கி

இடிபோல் முழங்கிடுவார்;
எங்கணுமே கோரிக்கைக்

கொடிதூக்கி உரிமைக்காய்க்
குலவையிட்டுப் போர்புரிவார்.

இனியும் எங்களை நீர்
இளம் ஆட்டுக் குட்டிகளாய்

நினையாதீர் எனமுழங்கி
நிமிருமவர் ஆவேசம்,

மேதைலெனின் கட்டுரைகள்
பிறப்பிக்கும் மின்னலொளி

மோதுகின்ற கார்முகிலாய்
மூண்டெழுந்து தான்திரளும்;

எழுச்சியுற்ற மக்களின்மேல்
லெனினவர்தம் பிரசுரங்கள்

பளிச்சிடுமோர் ஞானவொளிப்
பருவமழை போற்பொழியும்.

அறிஞர்லெனின் வழங்கியதோர்
அறிவொளியை அள்ளியள்ளிப்

பருகிவிட்ட வர்க்கமது
பன்னூறு ஆண்டுகளாய்

இறுகிக் கவிந்திருந்த
இருள்விரட்டி, போதமெனும்
திருவொளியால் தங்களது
சிந்தையெலாம் தெளிந்திட்டார்.
தொழிலாளி வர்க்கத்தின்
துணையோடும், வீறுகொண்டு
எழுந்திட்ட மக்களர்தம்
வலிமையொடும் லெனினும்தான்
வளர்ந்திட்டார்.
இவ்வாறு—
இளம்வயதில் லெனினவர்தாம்
எடுத்ததொரு சபதத்தை,
வளஞ்செறிந்த கூட்டுறவால்
வளர்ந்துவந்த தொழிலாளர்
துணைநின்று நனவாக்கத்
துணிந்திட்டார்.
என்றாலும்,
பணியிதனில் தனித்தனியாய்ப்
பங்கெடுக்க முனையாமல்
தொழிலாளர் விடுதலைக்கோர்
சங்கமொன்றைத்[11] தோற்றுவித்துப்
பழிதீர்க்கத் தான்முனைந்தார்.
லெனினிசமும் படிப்படியாய்
அகன்றாழ்ந்து பரவியது.
அன்னவரின் சீடர்கள்தம்
தொகையும் பலப்பலவாம்
சாதனைகள் புரிந்திட்டார்.
முடிவற்ற விளதிமிர்க்கா[12]
பாதையதன் மீதிலெலாம்
படிந்திருந்த தூசியினில்,
பனிச்சேற்றின் ஊடிருந்து

துளித்துவந்த செங்குருதித்
துளிகளதில்,
தலைமறைவாய்

ஒளித்திருந்து வேலைசெய்யும்
இயக்கம்உருக் காட்டியதே.

இற்றைக்கோ இப்பழைய
உலகத்தை நம்வழியில்

சுற்றிவரச் செய்கின்ருேம்.
என்ருலும், கிரெம்ளினிலே

வீற்றிருந்து சூடான
விவாதங்கள் புரிந்து பணி

ஆற்றுகின்ற வேளையிலும்,
அந்நாளில்—
கைகாலில்

விலங்கிட்டுப் புரட்சிகர
வீரர்களைத் தெருவழியே

விலங்குகள்போல் கொண்டுசென்ற
வேளையிலே, வேதனையால்

கலங்கி அவர் முனகிக்
கதறியதோர் அக்குரலைப்

பலரும் திடீரென்று
சிந்தித்துப் பார்த்திடுவார்.

சின்ளுட்கு முன்னிருந்த
நிலைமையினைச் சற்றேநீர்

எண்ணமிட்டுப் பார்த்திட்டால்—

அந்நாளில் உங்களிலே
யார்தான் சிறைக்கூட

இன்னலுக்கு ஆளாகா
திருந்திட்டீர்? நமையழுத்தும்

சிறைச்சுவரைத் தலையாலே
மோதிச் சிதறடிக்க

உறுத்தெழுந்தோம்;
அப்போது சிந்திவிட்ட உதிரத்தை
மறைப்பதற்காய் அதன்மீது
மணல்பரப்பி, அக்கறையைத்
துடைத்தார்கள் அல்லால்நம்
துணிவை, உறுதியினை
உடைத்தெறிய அன்னவரால்
ஒருக்காலும் முடிந்ததில்லை.

"நீர்பிறந்த நாட்டுக்கு
நீர்சேவை யாற்றியது
நெடுங்கால மில்லை; எனினும்
நேர்மைமிகும் சேவையது..."

சோகசக்தி மிக்கவிந்தப்
பாடல்தனிற் சுடர்விடுக்கும்
வேகசக்தி மீதுலெனின்
எப்போது விருப்புற்ருர்?

* * *

உழவர்குலம்
தங்களுக்கே உரியதொரு நெறிவகுத்துக்
கலகமின்றிச்
சிக்கலின்றி சோஷலிசம் கண்டிடுவார்
என்றுரைத்த தோர்கூட்டம்.
என்ருலும்,
உண்மை என்ன?

இன்றைக்கோ ரஷ்யாவில்
எண்ணற்ற தொழிற்சாலைக்
கூண்டுபல வானேக்கிக்
குத்திட்டு நிற்கிறதே!
நீண்டகரும் புகைச்சுருள்கள்
நகரெங்கும் படர்கிறதே!
பசியடங்க உணவாக்கி
நமக்குப் படைப்பதற்கோ

விசும்பதனில் தெய்வமெதும்
வீற்றிருக்கக் காணவில்லை.

பாட்டாளி வர்க்கமொன்றே
விவசாயப் படைசனங்கள்

கூட்டத்தின் தலைவனெனக்
கொடிதூக்கிச் செலவேண்டும்.

மூலதனம் பிணமாகி
வீழ்ந்தால்தான்,
ருஷ்யாவும்

காலெடுத்து முன்னேறும் காலம்வரும்;
அத்தோடு

உழைக்கின்ற வர்க்கத்தை ஒன்றாக்கி,
லெனினவர்தாம்

அழைத்தேகிச் சென்றால்தான்
அக்காலம் கைகூடும்.

வாய்ச்சவடால் அடிக்கின்ற
மிதவாதக் கோஷ்டியினர்,

பேச்சளவில் நிற்கின்ற
எஸ். ஆர்.கள்[13] பேரளவில்

வாக்குறுதி தனைவாரி வழங்கிடுவார்.
கவனித்து

நோக்குங்கால்,
தொழிலாளர் முதுகினிலே நுகக்காலை

ஏற்றுதற்கும் இவர்கூசார்.
இத்தகையோர் நாள்தோறும்

நூற்றுவந்த சரடுகளை,
லெனினவரோ நொடிப்பொழுதில்

சட்டென்று அறுத்தெறிந்தார்;
சான்றுகளின் பேரொளியால்

கட்டவிழ்த்து,
அவரையெலாம் திகம்பரமாய்க் காட்டிவிட்டார்.

"சுதந்தர்யம்",
"சோதரத்வம்"
என்றினைய பற்பல சொற்

பதம்பயின்ற அன்னவர்தம்
பம்மாத்தை அவர் தொலைத்தார்.

மார்க்சீயப் போர்க்கவசம் மார்பணிந்து,
உரிமைக்காய்ப்

போர்க்கோலம் பூண்டெழுந்த
போல்ஷிவிக்குக் கட்சியெனும்

ஒருகட்சி—
ஓரேகட்சி—
உலகில் உதித்தது காண்.

இரயிலினிலோ, காரினிலோ
இந்நாளில் நீங்களெலாம்

ஏறி யமர்ந்தவராய்
எங்கெங்கே சென்றாலும்,

ஆர். சி. பி. எனும் எழுத்தை,
அதனருகே 'பி' என்று[14]

அடைப்புக் குறியிட்டு
அணிசேர்ந்த ஓரெழுத்தைத்

தடையற்றுக் காண்பதற்கே
தவறிவிட மாட்டீர்கள்.

இந்நாளில்,
வானியலார்
இரத்தச் சிவப்பாக

மின்னுசெவ்வாய் மீனதனைக்
கண்டறிய விழைகின்றார்.

தொலைநோக்கிக் கோபுரங்கள்
தூவெளியின் மீனினத்தை

வலைபோட்டு இனங்காணும்
மகத்துவமும் காண்கின்றோம்.

ஆனலும்,
கொடியொன்றில் அல்லதுவோர் காகிதத்தில்
தானிலங்கித் தோன்றுமந்தத்
தனியெழுத்தே,
பன்மடங்காய்ச்
செக்கச் சிவப்பேறி,
ஜெகத்தினர்முன் வானேங்கும்
சொக்கப் பனைபோலே
ஜொலிஜொலித்துக் காட்சிதரும்.

* * *

அழகொழுகும் மணிச்சொற்கள் ஆனலும்,
நாட்பட்ட
புழக்கத்தால்,
பரிமாற்றம் புரிவதனல்,
நைந்திற்றுக்
கிழிந்திட்ட கந்தலெனக்
கெட்டழிந்து,
வலுவெல்லாம்
இழந்து விடுவதுண்டு.
என்றலும், இன்றைக்கோ
உன்னதமாய் மேலோங்கி
ஒலிக்கின்ற ஒருசொல்லில்—
தன்னிகரே இல்லாத தனிச்சொல்லில்—
"கட்சி"யெனும்
பொன்னன சொல்லதனில்,
புத்தம் புதியவொளி
தன்னை உருவேற்றித்
தான்முடிக்க விரும்புகிறேன்.

**தனிமனிதன்**—
தனியொருவன் தானய் வாழ்ந்துவரும்
மனிதனவன்—
வாழ்க்கையினில் யாதாய் விளங்கிடுவான்?

ஊசிவிழும் போதெழும்பும் ஒலிகூட,
தனியொருவன்
பேசுகின்ற குரலதனுல்
பிறந்து விடுவதில்லை.

பேசிடினும்,
அவன்பேசும் பேச்சைக் கேட்பவரார்?

ஆசை மனைவியவள்—
அவளும்தான் கடைவழிக்குப்
போகாது,
ஒருவேளை புருஷன் அருகிருந்தால்,—
ஆகாவென் றவன்பேச்சை
அகமகிழ்ந்து கேட்டிடலாம்.

என்ருலும்—
கட்சியொன்று எழுப்புகின்ற ஒலியதுவோ,
குன்றி மெலிந்தொலிக்கும்
குரல்பலவும் ஒன்ருகித்
திரட்சியுற்று,
ஒரேகுரலாய்த் திமிர்ந்தெழுந்து,
வீசிடுமோர்
புரட்சிப் பெரும்புயலின்
இடிமுழக்கம் போலொலிக்கும்.

இடிமுழக்கம் அதுகேட்டால்,
எதிரியரின் கோட்டையெல்லாம்
வெடிமுழக்கம் செய்கின்ற
பீரங்கி-வேட்டதனைக்
கேட்டுக் கிறுகிறுத்துக்
கிழிந்துபடும் செவித்துளைபோல்
ஆட்டங்கள் கண்டாங்கே
அதிரும்;
தகர்ந்துபடும்!

ஒருவன்மட்டும் நிலைகுலைவான்;
ஒழிந்தோம் எனவுணர்வான்;

ஒருவன்மட்டும் நிமிர்ந்துநிற்க
ஒண்ணுது தத்தளிப்பான்.

நோஞ்சான்கள் என்றாலும்,
நூற்றுக் கணக்கிலவர்

தாம்சேர்ந்தால்,
தனிமனிதன் தனைவீழ்த்த மாட்டாரோ?

அதைப்போன்றே—
நாமெல்லாம் கட்சியென அணிதிரண்டால்,

எதிரியரும் நம்முன்னே
சரணடைய ஏலாதோ?

கட்சியென்றால், என்ன அது?
கரங்களெலாம்
லட்சோப

லட்சமெனச் சேர்ந்தொன்றாய்
எழுந்ததொரு முஷ்டியது!

தனிமனிதன் என்றாலோ—
சீச்சீ! சாரமில்லை!

தனியொருவன்—
பிறரைவிடத் தனிவலிமை பெற்றவொரு

மனிதனவன் என்றாலும்,
மரமொன்றை வேரோடு

எடுத்தெறிந்து விடுவானே?
இத்தகையோன் பற்பலவாம்

அடுக்குகொண்ட மாளிகையை
அசைத்துவிடல் சாத்தியமோ?

கட்சியெனில்—
கரம்கருத்து, கண்களெலாம் எண்ணரிய

லட்சோப லட்சோபக்
கணக்கினிலே இணைந்தொன்றாய்ச்

சேர்ந்து செயலாற்றும்
சித்திரமே ஆகிடுமால்.

தேர்ந்து நாம்வகுத்த
திட்டங்கள் யாவினையும்,

ஒருவருக் கொருவரிங்கு
உதவி ஒத்துழைத்து

வருவதனால்,
கட்சியிலே வானோங்கச் செய்திடுவோம்.

தடமறிந்து நாம்செல்லும்
தனிவழியில், வழிகாட்டும்

கடமையினால் திசைகாட்டும்
கருவியதே நம்கட்சி.

முதுகெலும்பாய்ப் பாட்டாளி
வர்க்கத்தார் முழுமைக்கும்

புதுவலிமை தனையூட்டிப்
பொலிவதுவே நம்கட்சி.

எந்நாளும் தோற்காத,
இறவாத கொள்கையதன்

பொன்னான லட்சியத்தின்
பொருளடக்கம் நம்கட்சி,

அடிமையென நேற்றிருந்தேன்;
அகண்டபல சாம்ராஜ்யம்

முடிந்துபட,
இன்றைக்கு வரலாற்றை மாற்றுகின்றேன்.

வர்க்கப் படையதனின்
வலுவாய்,
தனிச்சிறப்பாய்,

தர்க்க அறிவியலாய்த்
தான்விளங்கும் நம்கட்சி.

லெனினும் கட்சியிதும்
இரட்டைச் சோதரர்கள்.

எனினும்,
வரலாறு என்னுமந்தத் தாயவட்கு

இருவரிலும் இனியவர் யார்?
பதிலிறுப்பார் யாருமுண்டோ?

ஒருவருக்கு ஒருவர்மிக
உற்றபெரும் உறவாகும்;

இருவரிலும் எவர்பெயரை இயம்பிடினும்,
மற்றுமுள்ள

ஒருவரையும் அப்பெயர்தான்
உணர்த்தாது போவதில்லை.

* * *

மாட்சிமிகு மணிமுடியின்
மகத்துவங்கள் மங்கவில்லை;

ஆட்சிசெயும் முதலாளிக்
கூட்டத்தார் அவரெல்லாம்

கார்காலக் காக்கைகள்போல்
நாளும் கறுத்திருண்டு

ஊர்கோலம் போவதுவும்
ஒருசிறிதும் குறையவில்லை.

ஆயிடினும்—
அதற்குள்ளே தொழிலாளர் அனைவரது

காய்சினத்துத் தீக்குழம்புக்
கனல்பொங்கத் தொடங்கியதே.

கண்திறந்த எரிமலையாம்
கட்சியதன் வழியாகச்

செந்நெருப்புக் குழம்பதுவும்
சீறிவெளிப் பட்டதுவே.

"மக்களர்தம் நண்ப"னென்று
வேடமிட்டுவந்த கப்போன்[15]

ஏக்குநூ ருனோ
ஜனவரி ஒன்பதன்று.

வெடிக்கின்ற துப்பாக்கி
வேட்டுக்கு இரையாகித்

துடித்துத் தரைமீது
சாய்ந்து துவண்டோமே.

முக்தெனில், துஷிமாவில்[16]
மூக்குடைந்து தோற்றுவந்த

ரத்தக் குளிப்போடு,
நாடாண்ட ஜார்மன்னர்

கருணையுள்ளம் பற்றியபல்
கட்டுக் கதைகளெலாம்

மரணமுற்று,
மண்ணோடு மண்ணாகப் போயினவே.

போதுமடா!
பேசுவதால் புண்ணியமோ,
நல்வினையோ

ஏதுமில்லை!
பிரஸ்ஸின்யா[17] ஆயுதத்தை எடுப்பதைப்பார்!

அரியணையும்,
அதைச்சார்ந்து அமர்ந்தமுத லாளிகளும்

சரிந்துவிழும் வேளைவந்து
சார்ந்ததுபோல் தோன்றுதடா!

எங்கும் லெனின்தோன்றி,
எழுச்சியுற்ற தொழிலாளர்

தங்களொடு எந்நாளும்
தானிருந்து போர்புரிந்தார்.

தெருமுனையில் அரண்வகுத்துத்
தெருத்தெருவாய்த் தொழிலாளர்

செருவிளைத்து, பெரும்புரட்சி
செய்திட்ட அந்நாளில்,

மேதைலெனின் அவர்களுக்கு
வீறும், உத்வேக

போதனையும் தவறாது
புகட்டி ஊக்கிவந்தார்.

என்றாலும்,
சூழ்ச்சியொன்று அதிவிரைவில் எழும்பியது:

கன்றிச் சிவந்திட்ட
கன்னியர்தம் கன்னம்போல்

செந்நிறத்துத் தோரணங்கள்
சிரித்து மலர்ந்தனகாண்.

மன்னர்பிரான் ஜார்தமது
மாளிகையின் உப்பரிகை

தன்னிலிருந் தேதமது
அறிக்கையினை[18] வாசித்தார்.

பின்னாலோ—

கோலா கலமாகச்
"சுதந்திரத்தை" ஒருவார

காலம் அனுபவித்துக்
களித்து மகிழ்ந்தபின்னர்,

குலவைகளின்,
குதூகலிப்பின்,
கூத்தாட்டின்,
பாட்டொலியின்

அலையடங்கு முன்னங்கே
பீரங்கி அலறியதே.

தொழிலாளர் செந்நீரில்
துபசோவ்[19] எனுங்கொடிய

தளபதியும் குளித்தெழுந்து
தருக்கேறி நின்றானே.

செக்காவின்[20] ரத்தவெறிச்
செயல்பற்றி,
வாயில்நுரை

கக்கப் பழிதூற்றும்
கடைகெட்ட வெள்ளையர்மேல்

துப்புங்கள்!
அந்நாளில் தொழிலாளர் தம்மையெலாம்

கைப்புறமாய்க் கட்டிவைத்துக்
கசையடியால் அவரையெலாம்
எவ்விதமாய்க் கொன்ருர்கள்,
எத்தனை பல் லாயிரம்பேர்
இவ்விதமாய்ச் செத்தார்கள்
என்பதனை அவரறியார்.
வெறிபிடித்து பிற்போக்குக்
கூட்டத்தார் விளையாட
அறிவாளிக் குழுவினரோ
அஞ்சி அடங்கிவிட்டார்.
வீட்டுக்குள் விளக்கேற்றி வீற்றிருந்து,
இறைவன்மேல்
நாட்டமுற்று,
ஊதுபத்தி நறுமணத்தில் கடவுளரைத்
தேடிக் காணுமொரு
திருப்பணியில், கண்ணிரண்டும்
மூடிவிட்டார்![21]
அந்நாளில், முதுதோழர் பிளக்ஞேவும்[22]
கூட, போல்ஷ்விக்கைக்
குறைகூறத் துணிந்திட்டார்.
"கேடெல்லாம் போல்ஷ்விக்கர்
கெடுமதியால் வந்ததுதான்;
இந்நேரம் ஆயுதத்தை
ஏந்திப்போர் புரிவதற்குப்
பொன்ஞன நேரமல்ல.
புரட்சியினைத் தவிர்த்திருந்தால்,
செங்குருதிப் பெருவெள்ளம்
சிந்திப் பெருகியதோர்
வெங்கொடுமை நேர்ந்திருக்க
விதியில்லை" என்றுரைத்தார்.
இவ்வுரையைக் கேட்டலெனின்
எந்நாளும் அவர்க்குரிய

செவ்விமிகும் துணிவாற்றல்
சிறந்தோங்கப் பதிலளித்தார்.

" ஆயிரமாம் முறைசொல்வேன்.
அன்றுடம் சொல்லிடுவேன்.

ஆயுதத்தை ஏந்தியதில்
அணுவளவும் தவறில்லை.

எடுத்துவிட்ட ஆயுதத்தால்
இன்னும் பலமாக

அடித்திருந்தால்,
தோற்றிருக்கும் அவசியம்நேர்ந் திருக்காது.

மீண்டும் தொழிலாளர்
வர்க்கமெலாம் ஒன்றுபட்டு

மூண்டெழுந்து போர்புரிய
முனையுமொரு பெரும்புரட்சிக்

காலம் வரவிருக்கும்
காட்சியினைக் காண்கின்றேன்.

ஓலமிடும் தற்காப்புக்
கோஷத்தை ஒழித்துவிட்டு,

தாக்குதலைக் தொடுப்பதற்கு
மக்கள்தமைத் தயாராக்கி

ஊக்குகின்ற கோஷமொன்றே
உருவாக வேண்டும்" என்றார்.

பொங்கிக் கிளர்ந்தெழுந்து
புரட்சிசெய்த தொழிலாளர்

தம்குலத்தை ரத்தவெள்ளத்
தடாகத்தில் மூழ்கடித்த

பேய்க்கனவு போய்மறையும்;
பின்னே வரவிருக்கும்

காய்சினத்துப் புரட்சிகட்கும்,
கலகப் புயல்களுக்கும்,

அக்கனவின் அனுபவமே
ஆரம்பப் பாடமெனத்

தக்கவிதம் திகழ்ந்து
அவரையெலாம் தயாராக்கும்!

* * *

வீரர்லெனின் சிறையையெலாம்
மீட்டும்கல் லூரிகளாய்

மாறிவிடச் செய்கின்றார்;
வரப்போகும் போரினுக்காய்

நமக்கறிவு புகட்டுகின்றார்;
நமக்கறிவு புகட்டுங்கால்

தமக்கும் அனுபவத்தால்
அறிவுபெற்றுத் தழைக்கின்றார்.

தலைமை தாங்குதற்குத்
தக்க நபர் இல்லாது

கலைவுற்றுப் போயிருந்த
கட்சியினைத் திரட்டிவந்தார்.

வேலை நிறுத்தங்கள்
ஆண்டுதோறும் வெடித்தோங்கி

மேலும் அதிகரித்து
விரிவடைந்து வந்தனகாண்.

சிறுநெருப்புப் பொறிபறந்தால் போதும்;
சினந்தெழுந்து

எரிநெருப்பாய் மக்களெலாம்
எழுச்சியுற்றுப் பொங்கிடுவார்.

ஆனாலும் பதினாலாம் ஆண்டுவர,
அவ்வாண்டில்

மேனிமிர்ந்த வேதனையின்
வெள்ளத்தில், இந்நெருப்பு

அணைந்தடங்கிப் போனதுகாண்.
அந்நாளில்,
ராணுவத்தில்

பணிபுரிந்த அனுபவத்தைப்
பல்லாண்டு பெற்றிருந்த

முதியவர்கள் மீசையினை
முறுக்கி, புன்னகைத்துக்

கதைகதையாய்ப் பழங்கதையைக்
கட்டவிழ்த்து விட்டனரே.

என்றாலும்,
பொல்தவாவில் பிளெவ்னாவில்[23] இயற்றியதோர்

குன்றாத பேர்படைத்த
கோரமிகு யுத்தமெலாம்,

மானிடரைக் கொன்றவர்தம்
மாமிசத்தைச் சந்தையிலே

மீனினைப்போல் ஏலம்விடும்
வெங்கொடிய புன்செயலாய்

அன்றைத் தினத்தினிலே
அகில உலகனைத்தும்

சென்று பரந்தயுத்தச்
சீரழிவுக் கீடாமோ?

இழிகுணத்தின் பிண்டமெனும்
ஏகாதி பத்தியமோ

பழிக்குணத்தால் பொய்ப்பற்கள்
பளிச்சென்று வெளித்தெரியச்

சீறிச் சினந்துருமி,
செங்குருதிப் பெருங்கடலில்

ஊறித் திளைத்தாங்கே
ஒவ்வொன்றாய் நாடுகளை

அடுத்தடுத்து ஏப்பம்விட்டு
ஆணவத்தால் மகிழ்ந்ததுவே.

அடுத்ததற்குத் துதிபாடும்
ஆமாஞ் சாமிகளும்,

சுகவாசம் செய்கின்ற
சமுதாய— பக்தர்களும்,

சகவாச தோஷத்தால்
சரணடைந்து, கை தூக்கி,

''பாடுபடும் தொழிலாளி!
பதருதே! விட்டுவிடு.

நாடுகட்குள் சண்டை
நடக்கட்டும்!'' என்றுங்கே,

கேட்டுக் கேட்டுநிதம்
கிறுகிறுத்துப் போகும்வண்ணம்

காட்டுக் குரங்குகள்போல்
கூச்சலிட்டுக் கத்திவந்தார்.

பாருலகின் துருப்பிடித்த
இரும்புப் படையலின்மேல்

போரினிலே வீழ்ந்துபட்டுப்
பொடிந்திட்ட மானிடர்தம்

சதையும் துண்டெலும்பும்
கலந்து சங்கமித்துச்

சிதைபோலும் நாள்தோறும்
மேலுயர்ந்து சென்றனவே.

இத்தகைய வெறிக்கூட்டம்
இத்தனைக்கும் மத்தியிலே

சித்தத் தெளிவோடு
ஜிம்மர்வால்டு[24] இருந்ததுகாண்.

நிமிர்ந்தோங்கும் நெருப்பெனதயும்
மிஞ்சுகின்ற பெருநெருப்பாய்.

திமிர்ந்தோங்கும் சிந்தனைகள்
தெறித்துவிழும் ஒருபேச்சாய்,

விம்முகின்ற பீரங்கி
வேட்டின் முழக்கொலியும்

பம்மி அடங்கிவிடும்
பலத்த பெருங்குரலாய்,

உலகத்தின் கூச்சலையும்
உள்ளடக்கி வளர்ந்தோங்கி

இலகும் விதத்தினிலே
லெனின் ஆங்கே முழக்கமிட்ட

ஒருரையை, பேருரையை
உலகமென்றும் மறவாது!

ஓர்புறத்தில் வெற்றியினைப்
பெற்றிடுமோர் உள்ளத்தால்

போர் முகத்தில் கோடானு
கோடிப்பேர் போர்புரிய,

கூர்வாளை,
பீரங்கிக் குண்டுகளை,
சாகடிக்கும்

போர்வெறியை எதிர்த்தாங்கே
போர்புரியத் துணிந்திட்ட

ஓர் எளிய மானுடர்மற்
றோர்புறத்தில் நின்றிருந்தார்.

"வீரர்களே!
முதலாளி உம்மையெலாம் விலைசாட்டிப்

பேரங்கள் செய்கின்றான்.
உம்மையெலாம் பிணமாக்கும்

எண்ணத்தால்,
இதற்குமுனம் எத்தனையோ போரில்உமை

மண்ணாக்கி,
பலியாட்டு மந்தைக் கிடாவாக்கிக்

களித்ததுபோல்,
இன்றும்உமைக் காட்டிக் கொடுத்துவிட்டுக்

கொழுத்து வளர்வதற்காய்க்
கொடிகட்டித் திரிகின்ருன்!

போதுமிது!
சற்றேநான் புகலுவதைக் கேளுங்கள்.

மோதிநிற்கும் நாடுகளால்
மூண்டிருக்கும் இப்போரை

உள்நாட்டுப் போராக
உடனடியாய் மாற்றுங்கள்.

இந்நாளில் மக்கள்நாம்
எதைக்கோரி நிற்கின்ருேம்?

சாக்காட்டை,
பொருளிழப்பை,
சண்டையினை,
புண்படுமோர்

நோக்காட்டைப் போக்குவதே
நம்மனைவர் நோக்கமன்ருே?

ஆனதனுல், உலகாளும்
ஆணவத்தார் தமக்கெதிராய்த்

தானெழுந்து, புனிதப்போர்ப்
பதாகையினைத் தாங்குங்கள்!''

இவ்வாறு துணிந்தாங்கே
இயம்பிநின்ற லெனின்அவரைச்

செவ்வானம் படர்ந்தாற்போல்
தீயுமிழும் பீரங்கி

மூக்கைச் சிந்துகின்ற முறையேபோல்,
மூச்சுவிட்டுப்

போக்கிப் பொசுக்கிவிடும்
என்பதுபோல் தோற்றியதால்.

இந்தநிலை நேர்ந்திருந்தால்
யார்அவரைக் கண்டிருப்பார்?

அந்தப் பெரும்பெயரை
யார்நினைவு வைத்திருப்பார்?

நாடுகளோ ஒன்றையொன்று
நாயாய்ப் பாய்ந்தெதிர்த்து

''ஏடா! பணிந்துவிடு!''
என்றுறுமி நின்றனவே.

பல்லாண்டு பல்லாண்டு
பல்லாண்டே யானாலும்

நில்லாது போர் என்று
நினைத்திடவும் தோன்றியதே.

என்றாலும்,
போர்ஒருநாள் நின்றதுகாண். இப்போரில்

வென்றவர்கள் யாரென்று
விளம்புதற்கும் இடமுண்டோ?

உண்டென்றால், அவ்வெற்றி
ஒருவருக்கே உரித்தாகும்;

எண்டிசையும் புகழ்மணக்க
லெனின்பெற்ற வெற்றியது!

இத்தனைநாள் தெய்வம்போல்
பொறுத்திருந்தோம்.
ஏகாதி

பத்தியமே! எம்பொறையைப்
பறந்தோடச் செய்துவிட்டாய்.

பேரிடிபோல் வெடித்தெழுந்த
ரஷ்யாவின் பெருங்கிளர்ச்சி

தாரிஸ்முதல் ஆர்க்கேஞ்சல்
வரையிலுனைத் தாக்கியதே.

கூடையிலே பிடித்தடைக்க
சாம்ராஜ்யம் கோழியல்ல;

ஜோடித் தலையிரண்டும்,
சுருண்ட பெரும் அலகும்,

குன்றாத வல்லூரமும்
கொண்டமலைக் கழுகதுவால்'

என்ருலும—
சக்கையினைத் துப்பி எறிந்தாற்போல்,

அந்தப் பரம்பரையை,

அரசப் பெரும்பவிசை,

சந்ததமும் அனுபவித்த
சட்ட உரிமைகளை

முட்டோடு பேர்த்தெறிந்து முடித்திட்டோம்.
என்ருலும்,

வாட்டும் பசிப்பிணியால்
வாடி மெலிவுற்று,

புண்ணுடம்பில் செங்குருதிப் பொருக்காட,
உழைச்சேற்று

மண்ணிருந்து கரையேறி
வெளிவந்த நாடு, தன்னை

மீட்டும்முத லாளிகட்கே
விற்றுமுத லாக்கிடுமோ?

நாட்டை சோவியத்தாம்
நல்வழியில் போக்கிடுமோ?

"ஜாராட்சி விலங்குகளை
மக்களெலாம் தறித்திட்டார்!

ஊராட்சி காண்பதற்கு
உறுத்தெழுந்து பொங்கிவிட்டார்!

எங்கும் ரஷ்யாவில்
பெருநெருப்பு எரிகிறது!

பொங்கும் அனல்வெள்ளம்
பொக்குளித்துப் பாய்கிறது!"

என்கின்ற செய்திகளை
ஸ்விஸ்நாட்டில் அந்நாளில்

தங்கி யிருந்தலெனின்
சஞ்சிகையில் படித்தறிந்தார்.

6

ஆனாலும்,
செய்தித்தாள் அதனில் வடிகட்டித்

தானளிக்கும் செய்திகளால்
உண்மைத் தகவல்களைச்

சேகரிக்க முடிந்திடுமோ?
இக்கணமே சிறைவிரித்து

வேகமுடன் அங்குசெல
விமானமொன்று இருந்திட்டால்—?

தாயகத்தே போர்புரியும்
தொழிலாளர் தம்மருகே

பாய்ந்தோடிச் சென்றேநான்
பக்கத் துணையிருந்தால்—?

என்றவொரு வேட்கையினால்
ஏங்கித் தவித்திருந்தார்.

என்றாலும்,
ஒருமட்டும் கட்சியிட்ட ஆணையின்மேல்

தலைவர் லெனின் ரயில்வண்டி
தனிலேறிப் புறப்பட்டார்.

கொலைகாரன் கெய்ஸருக்கு,[25]
ஜெர்மன் கூட்ஸ்ரயில்

வண்டியதில் தனதாட்சி
தனக்கும் வேட்டுவைக்கும்

குண்டொன்று செல்கிறது
எனக்கண்டு கொண்டிருந்தால்—!...

* * *

சிறுபொழுதே நீடிக்கும்
சிரிப்பினிலே பெத்ரோகிராட்

பிரஜையெலாம் குதூகலித்துப்
பேருவகை கொண்டிருந்தார்.

ஆனாலும், நெவ்ஸ்கியிலே[26]
அப்போதே, சதிபுரியும்

சேனுதி பதிகளெலாம்
செந்நிறத்து ரிபனேடும்,
பட்டாளத் தலங்காரப்
பகட்டான உடையோடும்
வட்டமிட்டுக் கும்பலென
வந்திட்டார்.
சில அடிகள்
எட்டிவைத்து முன்வந்தால்,
வஞ்சரவர் எல்லையினைத்
தொட்டிடுவார்:
அதன்பிறகு தொடங்கிவிடும் வெறியாட்டம்!
முதலாளிக் கும்பலதோ
முதுகெல்லாம் மயிர்சிலிர்த்துக்
குதுகுதுக்க, கைகளெலாம்
குறுகுறுக்க, வெறியாடித்
தீர்ப்பதற்குத் தயாராகித்
தினவெடுத்து நின்றதுவே.
பார்ப்பதற்கு, இதுமுதலில்
பரிகாசத்துக் குரியதொரு
சிறுசெயல்போல் தெரிந்தாலும்,
சீக்கிரமே மிகப்பெரிய
சுறுமீன்கள் நாட்டினையே
விழுங்கிவிடத் துணிந்தனவே.
அடுத்து, தார்தனெல்ஸ்கி[27],
அவர்பின்னே மணிமுடியை
எடுத்தணியத் துடித்தவராய்
இளவரசர் மிகைல் வந்தார்.
பிரதமரோ அநாயாசப்
பெருமிதத்தோ டாட்சியினைப்
புரிகின்றூர்:
தளபதிகள் ஒருவருமே புகைந்துறுமக்

காணவில்லை;
மாருக, காதினிக்கும் குரலெடுத்துக்
கானமழை பொழிகின்ருர்;
கரைகடந்த பரவசத்தால்
குதியாட்டம் போடுகின்ருர்!—
என்றவர்தாம் குதூகலித்து
மதிமயங்கிப் போயிருந்தார்.
ஏனென்ருல்,
பிப்ரவரி
மாதத்துப் புரட்சிதந்த
விடுதலையின் 'மகத்துவத்தை',
வேதனையை அனுபவிக்கும்
வேளையின்னும் வரவில்லை;
"உழைக்கின்ற பெருமக்காள்!
உம்மையெலாம் போர்முனைதான்
அழைக்கிறது!" என்றுசொலி
அவசரமாய் எம்மையெலாம்
தூண்டிவிடும் பேர்வழிகள்
பேச்சும் தொடங்கவில்லை.
ஈண்டிருந்த அற்பாயுள்
எழிற்காட்சிக் கோர்சிகர
கும்பமதை வைத்தாற்போல்,
மென்ஷிவிக்குக்[28] கும்பலுடன்
வம்பர்களும்,
சாவின்கோவ்[29] கும்பலதன் வஞ்சகரும்
காவல்நாய் போல்அவர்முன்
கட்டுண்டு, அவர்சொல்லும்
ஏவலுக்காய்க் காத்திருந்தார்.
இந்நிலையில் திடீரென்று
அகன்றநதி நேவாவுக்
கந்தப் புறத்திருந்து

நகருக்குள் பின்லந்து
நிலையம் தனிலிருந்தோர்
கவசக்கார் முன்னேறிக்
கனைகனைத்து வந்ததுகாண்.
சிவுசிவென்று மறுபடியும்
சினந்த பெருங்காற்று
சூறையெனப் புரட்சியினைச்
சுழன்றடிக்கச் செய்ததுகாண்!
வீறுகொண்ட போர்வீரர்
வித்தீனி[30] வீதியெல்லாம்
திரண்டெழுந்து,
"மேதைலெனின் திரும்பிவிட்டார்!"
எனமுழங்கிக்
கரம்தட்டி ஆர்ப்பரித்தார்!
வீரரவர் மத்தியிலே
வழிகாட்டும் தம்கரத்தை
நேருறவே நீட்டி,லெனின்
இவ்வாறு நேர்ந்துரைத்தார்:
"தோழர்களே!
பழசாகித் தொய்ந்து தொளதொளத்துப்
பாழ்பட்ட
சமூகஜன நாயகத்தின் அணிகளைநாம்
களைந்தெறிவோம்!
முதலாளிக் கயவர்களை,
அவர்தம்முன்
குழைந்து சலாம்போடும்
கோடாலிக் காம்புகளைப்
புழுதியிலே போக்கிடுவோம்!
பூவுலகம் முழுதுமுள்ள
உழுபவர்தம்,
உழைப்பவர்தம் உள்ளத்தின் குரலாய்நாம்

நாவலித்து முழங்கிடுவோம்!
நல்ல தருணமிது!

சோவியத்து ஆட்சிக்காய்த்
துப்பாக்கி ஏந்துகின்ற

போர் வெல்க!
சோஷலிசப் பொதுவுடைமை வாழ்வதனை

நேரமைக்கும் கட்சியதும்
நீடுழி வாழ்ந்திடுக!"

ஒருநாளும் அடைவதற்கு ஒண்ணாது
எனவுலகில்

கருதிவந்த சோஷலிசம்
கடல்போன்ற மக்களர்தம்

திருமுன்னர்,
அன்றுடச் செயல்முறையாய் உருமாறி,

வரலாற்றில் முதன்முறையாய்ப்
பிறப்பெடுத்து வந்ததுகாண்!

கடகடக்கும் தொழிற்சாலைக்
கப்பாலே, எல்லையில்லா

அடிவானில் கண்பறிக்கும்
அதிசயமாம் பெருஞ்சோதிச்

சுடராக அஃதெம்முன்
உதித்தெழுந்து தோன்றியதே.

ஆண்டைகளும்,
அடிமைகளும்,
மூலதன ஆதிக்கம்

பூண்டவரும்,
உழைத்துழைத்துப் புண்ணுகிப் போனவரும்

அற்றதொரு வருங்காலக்
கம்யூனுய், அஃதெம்முன்

உற்றுங்கே கதிர்வீசி
உதித்தெழுந்து வந்ததுகாண்!

தலையாட்டிப் பிறவிகள்தம்
தத்வார்த்தப் பொய்ச்சரட்டு
வலையையெலாம் அறுத்தெறியும் வாளினைப்போல்,
லெனினவர்தம்
அறைகூவும் வீரவுரை
அதிர்ந்து முழங்கிவர,
"உரையிதுவே சரியாகும்!
தோழர்லெனின் உரைத்தபடி
செயல்படவும் தருணமிதே!
செயல்படுவோம்!" என்றுங்கே
புயல்போலே கணந்தோறும்
மக்கள்குரல் பொங்கியதே.
நளினத் திருப்பாத
நர்த்தகிக்குப் பரிசாக
அளித்திட்ட ஷெஷின்ஸ்காயா[31]
அரண்மனையில்,
இன்றைக்கோ
இருப்புத் தகடடித்து
இணைத்துப் பூட்டியதோர்
செருப்புக்கள் தடம்பதித்து
முன்னேறிச் சென்றனவே.
அறிஞர்லெனின் உலைக்களத்து
அனலிற் பதப்பட்டு
உருக்கெனவே மாறுதற்காய்
ஆலைகளின் உழைப்பாளர்
திருக்கூட்டம் கடல்போலே
திரண்டு பெருகியிவண்
வருகின்றார்; இவ்வாறு
வாய்திறந்து பாடுகின்றார்:
"புல்லுருவி முதலாளிப்
புல்லர்களே! உங்களது

வல்லமைகள் அடிசாய்ந்து
மடியும்நாள் வந்ததுகாண்!"

கள்ளுண்ட மயக்கினிலே
களித்து நாடாண்ட

கொள்ளையரை,
புல்லுருவிக் கூட்டத்தார் தமைநோக்கி,

"ஏனும்? எதற்காக?"
என்றெல்லாம் ஏற்கெனவே

வானெட்டும் குரலெழுப்பி
மானத்தை வாங்கிவிட்டோம்.

ஆனாலும்,
அன்னவரோ
ஜூலையிலே[32] அணிவகுத்துப்

போனவரை,
புரட்சிக்கு ஒத்திகைகள் புரிந்தவரைத்

தோட்டாக்கள் தமைக்கொண்டு
சுட்டுத் தள்ளிவிட்டார்!

வேட்டை நாய்களென
வெறிகொண்டார்! பல்லிளித்தார்!

கொலைவெறியால் தம்கண்கள்
கொதித்துச் சிவப்பேற,

"கலகமிடும் அடிமைகளே!
எம்பலத்தைக் காட்டுகின்றோம்!"

என்றே முழக்கமிட்டார்.
"ஜினோவீவைச்[33] சிறையிலிடு!

கொன்றுவிடு லெனினவனை!"
என்றே கிரென்ஸ்கீயும்[34]

ஆணையிட்டான்.
அவன்கையில் அகப்பட்டுக் கொள்ளாது

தானிருக்கக் கட்சியது
தலைமறைவாய்ச் சென்றதுவே.

பெருமேதை லெனினவர்தாம்
பின்லாந்தில், ரஜ்லீவில்
சிறுகுடிசை ஒன்றினுள்ளே
சிலகாலம் மறைந்திருந்தார்.
சிறுகுடிசை என்றாலும்,
வலைவிரித்துத் தேடிவந்த
வெறிபிடித்த நாய்களுக்கு
வீரமகன் லெனின்தம்மைக்
காட்டிக் கொடுக்காது காத்ததுகாண்!
அதனாலே
நாட்டுக்குள் லெனின் இருந்தார்;
நம்மருகே அவரிருந்தார்!
கண்மறைவாய் வாழ்ந்தாலும்
கண்ணுறங்க நேரமுண்டோ?
மண்ணுலகில் காலமதும்,
வரலாறும் நின்றிடுமோ?
ஒலித்துவந்த கோஷங்கள்
ஒவ்வொன்றும் லெனின்குரல்தான்!
வழித்துணையாய் கைகாட்டி
வந்ததுவும் லெனின்கரம்தான்!
செழுநிலத்தில் தேடிவந்து
சிந்தியதோர் வித்தாங்கே
முளைத்தெழுந்து வளர்வதுபோல்
முதறிஞன் லெனின்புகலும்
வாசகங்கள் ஒவ்வொன்றும்
லட்சியத்தை வளர்ந்தோங்கித்
தேசுபெறச் செய்துவிடும்
சேதி அறியோமோ?

பாருங்கள்!
லெனினிஸ்டுப் பாட்டாளி மக்களொடு
சேர்ந்துநிற்கும் விவசாயத்
திருக்கூட்டம், சேனையென

அணிதிரண்டு நிற்கின்ற
அழகுதனைப் பாருங்கள்!

பணிமுடிக்கும் நாள்ஒன்றைப்
பக்குவமாய்த் தேர்ந்தெடுத்து,

வீதிகளில் அரணமைத்து,
வெம்போர் தொடுப்பதற்குத்

தேதியினைக் குறித்துவைத்து,
பெத்ரோகிராட் திருநகரத்

தொழிலாளர் தமையணுகித்
துணையாகி நின்றலெனின்

"எழுந்திடுவீர், தோழர்களே!
இனிப்பொறுக்க நேரமில்லை!

மூலதன நுகத்தடியும்,
மூண்டெழுந்த பசிப்பிணியும்,

காலனென வரும்போரும்,
களவாடும் தலையீடும்,

வரலாற்றுப் பாட்டியவள்
மேனியிலே, கண்ணுக்குத்

தெரியாத வடுக்களெனச்
சின்னாளில் மாறிவிடும்!"

என்றுரைத்தார்.
இப்புவியின் எதிர்காலம் தனக்கேநாம்

சென்றிந்த நாள்தன்னைத்
திரும்பிப் பார்த்திட்டால்,

பல்லாண்டு பல்லாண்டு
பல்லா யிரத்தாண்டாய்க்

கொல்லாமற் கொன்றுவந்த
கொத்தடிமை தனிலிருந்து,

வறுமைக்கும் பட்டினிக்கும் மத்தியிலும்,
புதியதொரு

தருமத்தை,
பொதுவுடைமைச் சகாப்தத்தை உருவாக்கும்
பாதையினை முதன்முதலில்
பாரகத்தே தோற்றுவித்த
மேதைலெனின் திருவுருவே
மேலோங்கித் தென்படுமால்.

வறுமைத் துயர்மலிந்த
வருடங்கள் இவையாவும்
இறந்தொழியும்; காலமெனும்
இருட்டில் ஆழ்ந்துவிடும்.
கூட்டுடைமைக் கம்யூனின் இளவேனில்,
குவலயத்தின்
வாட்டம் தனைப்போக்கி
வாழ்வளிக்கும்;
தெம்பூட்டும்!
செங்கிறஞ்சேர் அக்டோபர்
மலர்க்குலத்தின் சினைத்தாது
இந்நிலத்தில் ஆனந்த
வாழ்க்கையெனும் இன்கனியாய்ப்
பருத்துத் திரண்டுருண்டு
பலனளிக்கும்.
அந்நாளில்
திருத்தமுற லெனினவர்தாம்
தேர்ந்துரைத்த ஆணைகளைப்
படிப்பவர்கள்
பழுப்பேறும் பக்கங்கள் தமைப்புரட்டி
முடிப்பதற்குள்,
இதயத்தில் மூண்டெழுந்து பொங்கிடுமோர்
உணர்ச்சியினை,
என்றைக்கோ உலர்ந்துவிட்ட கண்ணீரும்
கணப்பொழுதில் கண்களிலே
கசிவதனைக் காண்பார்கள்.

இவ்வுலகில் யான்கண்ட,
யானே அனுபவித்த
அவ்வளவு நாட்களையும்
அலசிப் பார்த்தெனது
வாழ்வில் மிகமிகவும்
மகத்தான நாள் எதென்று
ஆழ்ந்தே நோக்குங்கால்—
ஐயமின்றி, திரிபின்றி
ஆயிரத்துத் தொளாயிரத்துப்
பதினேழாம் ஆண்டதனில்
வாய்த்திட்ட அக்டோபர்
இருபத்தி ஐந்தாம்நாள்
ஒன்றேயாம் என்றேநான்
மனமார உரைத்திடுவேன்.

அன்றைக்கு—
ஸ்மோல்னியிலே[35] அடங்காத பரபரப்பின்
துறுதுறுப்பு;
மாலுமிகள் தோள்களிலே புருக்களைப்போல்
குறுகுறுத்துத் தொங்குகின்ற
நாட்டுவெடிக் குண்டுபல;
பளிச்சென்று வெட்டுகின்ற
மின்னலைப்போல், பலப்பலவாய்
வெளிச்சமிடும் துப்பாக்கி
மீதுறையும் சனியன்கள்;
தோட்டாக்கள் சொருகிவைத்த
தோல்வார்கள் தம்மோடு
வேட்டைக்குத் தயாராக
விழிப்போடு காத்தவராய்
எந்திரத்துப் பாக்கிகளை
ஏந்திநிற்கும் போர்வீரர்.
சிந்தையிலே நோக்கமற்று
எவரும் திரியவில்லை;

துப்பாக்கி, வெடிகுண்டைத்
தொட்டறியா, சுட்டறியா
அப்பாவி யாரேனும்
அவர்களிடை இருக்கவில்லை.
"உன்னைத்தான் ஸ்டாலின்உனை
உடனே வரச்சொன்னார்!"
என்னுமொரு குரல்கேட்கும்.
"இதுதான் உத்தரவு:
தலைமைத் தபாலாபீஸ்
தனைநோக்கி உடனடியாய்
அலைபோலும் கவசக்கார்
அணிதிரண்டு சென்றிடுக!"
"தோழர் ட்ராட்ஸ்கியவர்[36]
சொல்லிவிட்ட செய்தியிதைக்
கேள்!" என்றோர் குரல்கேட்கும்;
கேட்டவனும் மறுகணமே
"சரி!"யென்று கிளம்பிடுவான்;
அம்மனிதன் சட்டையிலே
"அரோரா"[37] கப்பல் அதன்
அடையாளம் பொறித்திருக்கும்.
சேதிகளைக் கொண்டுசிலர்
தலைதெறிக்கச் சென்றிடுவார்;
வீதிகளில் நின்றுசிலர்
விவாதித்துக் கொண்டிருப்பார்;
துப்பாக்கிக் குதிரைகளைச்
சொடுக்கிநிற்பார் வேறுசிலர்;
எப்பாலும் அவரவர்தம்
கடமையினை ஏற்றிருப்பார்.
அப்போது—
லெனினவர்தாம்
அழுத்தல், படாடோபம்,

மப்பேறிப் போனதொரு
மமகாரம் ஏதுமின்றித்

துரிதமுடன்—
என்றாலும் துலங்கும்பே ரமைதியுடன்—

வருகை புரிந்திட்டார்.

ஏற்கெனவே போராட்டம்
தன்னுள், லெனினவரால்

ஈர்க்கப் பட்டிருந்த
இவரெல்லாம் இன்னும் அவர்

திருவுருவைப் படம்பார்த்துத்
தெரிந்துஇனம் கண்டதில்லை.

பரபரத்தும், குறுகுறுத்தும்,
பரிகாச மொழிபுகன்றும்,

வஞ்சினமாய்ச் சபதமொழி
வாரியிறைத்தும், அங்கு

சஞ்சரித்துக் கொண்டிருந்த
இத்தகைய சமயத்தில்,

எதிர்பார்த்துத் தவமிருந்த
எழுச்சிப் பெருங்காற்று

பதிபோட்டுப் பாய்ந்துவந்த

பருவத்தில்,
மேதைலெனின்

கைகள்தமைப் பின்புறமாய்க்
கட்டிப் பிடித்தவராய்

மெய்சோர்ந்து களைத்தவர்போல்
மெலநடந்து வந்துநின்றார்;

கூடிநின்ற மக்களர்தம்
கூட்டத்தைத் தம்கண்ணால்

ஊடுருவிப் பார்த்தார்;
நிலைமைதனை உணர்ந்தறிந்தார்.

ஒருசமயம் போர்வீரன்
ஒருவன்மேல் அவர்கண்கள்
சுருக்கென்று கத்தியைப்போல்
சுளீரென்று பாய்ந்ததனை,
இதயத்தைக் கிடுக்கியிட்டுப்
பற்றி இழுப்பதனை,
பதங்களுக்கும் சொற்களுக்கும்
அடியில் பதுங்கியுள்ள
ஆன்மாவைத் தொட்டுணர்ந்து
வெளிக்கொணரும் அறிவதனை

நான்கண்டேன்!

விவசாயி, போர்வீரர்
முதலானோர் வேதனையாய்த்
தவித்தெதனை எதிர்நோக்கித்
தானிருந்தார் என்பதனை,
பாட்டாளி மக்களொடு
கப்பற் படையினரும்
கூட்டமிட்டுக் காத்திருக்கும்
குறிப்பதனை,
அக்கண்கள்
தேர்ந்தும், தெளிந்தறிந்தும்,
திட்டவட்ட மாய்ப்புரிந்தும்,
ஓர்ந்தும் கொண்டதென்ற
உண்மையினை நானுணர்ந்தேன்.
மாலைக் கதிர்முளைக்கும்,
கங்குல் திரைபடர்ந்து
மாலைக் கதிர்மறையும்
மண்ணுலகின் கண்டங்கள்
அனைத்தினையும்,
மக்கள்குலம் அனைவரையும்,
அவர்தம்முள்

நினைத்தார்;
தம்நோக்கின் எல்லைக்குள் நிறுத்திவைத்தார்.

இரவெல்லாம் தம்மறிவால்
உலகையெலாம் எடைபோட்டு

நிறுத்தார்;
காலையிலோ நேர்ப்படவே கூறிவிட்டார்:

"எல்லோர்க்கும்,
யாவருக்கும்
இந்நேரம் கூறுகின்றோம்.

செல்வத்தின் அடிமைகளாய்ச்
சிண்டுபிடிச் சண்டையிலே

ஈடுபட்டுப் போர்புரியும்
ஈனருக்கும் கூறுகின்றோம்:

நாடிதனில் சோவியத்து
நல்லாட்சி கண்டிடுவோம்.

பசித்தவர்க்கு நல்லுணவும்,
பாடுபட்டு உழைத்தாலும்

நசித்துவந்த விவசாய
நற்குடிக்கு விளைநிலமும்,

போர்புரியும் வீரருக்கும்
பொதுமக்கள் அனைவருக்கும்

சீர்மலிந்த சமாதானம்
சித்திக்கச் செய்திடுவோம்!"

வீரர்லெனின் இவ்வாறு
விளம்பியதோர் உரைகேட்டுப்

போர்க்களத்தில் ஆறுகப்
பொழிந்துவந்த ரத்தத்தை

வயிறூரக் குடித்துவந்த
முதலாளி வர்க்கத்தார்

பயமடித்து வெறிபிடித்துப்
பாய்ந்தார்; கூச்சலிட்டார்!

"கோர்னிலோவ்! துகோனின்!
குச்கோவே![38] கிரென்ஸ்கீயே!

பார் இவர்கள் கூறுவதை!
இவர்மீது பாயுங்கள்!

படைகொண்டு இவர்க்கெல்லாம்
பாடம் புகட்டுங்கள்!

தொடங்கட்டும் அடக்குமுறை!"
என்றலறித் துடித்திட்டார்.

ஆனாலும்—
புரட்சிகர அரசாங்கம் அறிவித்த

ஆணைகளாம்[39] செந்தழலை
அவர்மீது எறிந்தவுடன்,

ஓர்வேட்டும் வெடிக்காமல்,
உடனடியாய்ப் பின்னணியும்

போர்முனையும் சரணடைந்து
புரட்சியினை ஏற்றனகாண்!

யாருக்கு யார்பாடம்
கற்பித்தார் என்பதனை

ஊரெல்லாம் உலகெல்லாம்
உள்ளபடி நன்கறியும்.

எழுத்தறிவு அற்றவர்கள்
இதயத்தும், ஆணையவை

அழுத்தமிகும் உருக்குறுதி
ஆண்மையினை உருவாக்கும்.

"ஏழையர்கள், தாழ்ந்தவர்கள்
இருப்பிடத்தில் சமாதானம்;

மாளிகைகள், அரண்மனைகள்
வாசலிலோ போர்! பெரும்போர்!"

எனவொலித்த கோஷமது
இடிமுழக்கம் போல்வளர்ந்து

கணகணத்து, எங்கெங்கும்
கடகடத்துப் பாய்ந்ததுவே.

குட்டித் தொழிற்சாலை,
கோபுரம்போல் வானோங்கி

எட்டும் தொழிற்சாலை
எங்கணுமே நாங்களெலாம்

திட்டமிட்டுப் போராடி,
தீயவரை நகரைவிட்டுப்

பொட்டுக் கடலையெனச்
சிதறடித்துப் போக்கிவிட்டோம்.

வெளியேயோ அக்டோபர்
வெய்யபெருங் காட்டுத்தீ

பழிதீர்த்து,
பிரபுத்வப் பண்ணைகளைச் சுட்டெரித்து,

வெற்றிப் பெருமிதத்தின்
வீறுநடைத் தடம் பதித்து,

பற்றிப் படர்ந்தெங்கும்
பசியாறி நின்றதுகாண்!

சாட்டைகொண்டு மக்கள்தமைச்
சணக்காடாய் அடிக்குமொரு

வேட்டைப் பெருங்களமாய்
இருந்துவந்த விரிநிலத்தை,

அந்நிலத்தின் காடு, மலை,
ஆறு, கடல்,
கழனி நிலம்,

கன்னிநிலம் அனைத்தினையும்
காய்த்துவிட்ட கரமொன்று

சட்டென்று கைப்பற்றித்
தன்னுடைமை ஆக்கியதே.

நெட்டுயிர்த்துக் கண்டுவந்த
நெடுங்காலக் கனவுதனை,

செங்குருதி நீராடித்
திளைத்திருந்த பெருநிலத்தை,

அங்கந்த வலியகரம்
ஆட்படுத்திக் கொண்டதுகாண்!

மூக்குக் கண்ணுடி முகத்தணிந்து,
நல்லுடைகள்

ஷோக்காகத் தரித்திருக்கும்
சொகுசுப் பேர்வழிகள்

மாச்சரியம் கொண்டே
வாய்நாறித் துப்பிவிட்டு,

ராச்சியங்கள் மிஞ்சிநிற்கும்
நாடுகட்கு ஓடிவிட்டார்.

தொலைந்தவரை நல்லதுதான்!
இனிமேலே தொழிலாளர்

நலம்பெறுமோர் விதந்தன்னில்
நாடுதனை ஆள்கின்ற

சாதனையை,
இந்நாட்டுச் சமையற் காரிகட்கும்

போதிப்போம்!
இவ்வுலகைப் பொன்னுலகாய் மாற்றிடுவோம்!

* * *

"வெம்போரை நிறுத்துங்கள்!
வெளியேறி வந்தண்ணன்

தம்பிகள்போல் எங்களுடன்
சங்கமித்து வாழுங்கள்!"

என்றே ஜெர்மனியர்
காதுகளில் எடுத்துரைத்தோம்;

எழுத்தாலும்,
அச்சிட்ட இதழாலும், யுத்தகளக்

குழிக்குள் படுத்தவணம்
கூச்சலிட்டும், குரல்கொடுத்தும்

நேரத்தை எதிர்நோக்கி
நிலைமைதனைச் சமாளித்தோம்;
போர்முனையோ பின்னணிக்குள்
பொத்தென்று சரிந்துவிழ,
சிறுதுளியாய்த் தொடங்கியது
சினந்தபெரு வெள்ளமெனப்
பெருகிவர,
எம்படகு பேரலையால் எற்றுண்டு
சாய்ந்து விடும்போலும்
சந்தர்ப்பம் தோன்றியது;
பாய்ந்துவரும் வில்ஹெம்மின்
பாதுகையோ நிக்கோலஸ்
பாதுகையை மிஞ்சியதோர்
பலம்படைத்த காரணத்தால்,
மோதி மிதித்துவிடும்!
நாடுதனை முற்றுகத்
தூள்பரப்பிச் சுடுகாடாய்ச்
சுட்டுப் பரப்பிவிடும்!
வேளைகெட்ட வேளையதில்—
விரைந்தோடும் வீரர்களை,
சிறுபிள்ளைத் தனமான
செயல்மிகுந்த எஸ்.ஆர்.கள்[40]
அறிவற்ற வார்த்தைகளை
அள்ளி வலைவீசிப்
பிடிப்பதற்கு வந்தார்கள்;
இரும்பணிந்த பேய்க்குலத்தை
அடிப்பதற்கும் ஒழிப்பதற்கும்,
அசகாய பராக்கிரம
இடிபாட்டுக் குவியலிலே
கிடந்தே எடுத்திட்ட
உடைபட்ட கத்திகளை
உருவிக் கொடுத்தார்கள்!

சேவற்போர் நடத்துமிந்த
சிறுபிள்ளை விளையாட்டைச்

சாவோடு விளையாடும்
சாகசமாய் லெனின்கருதி,

"மிகப்பெரிய பாரத்தை
மீட்டுமிங்கு தாங்குகின்ற

தகவும் பொறுப்புணர்வும்
கட்சிக்குத் தானுண்டு!

பெருத்த அவமதிப்பே என்ருலும்,
பிரெஸ்டதனை[41]

வருத்தத் துடன்ஏற்றுக்
கொள்வதுவே வாழ்வதற்கு

வழியாகும்;
மூச்செடுக்க வாய்ப்பிருந்தால்,
நிலமதனை

இழந்துவிட நேர்ந்தாலும்
எதிர்காலம் நமதாகும்!"

என்றுவழி கண்டுரைத்தார்!...

இழந்திடுவோம் சிறுநிலத்தை
என்ருலும், இத்தகைய

வழிபிறந்தால்,
நம்பலத்தை வலுவாக்கி, அவர்க்கெல்லாம்

குழிபறிக்கப் பின்னரொரு
சந்தர்ப்பம் கூடுமன்ருே?

ஆதலினுல்—

கருத்துறுதிப் பாட்டோடு
கட்டுறுதிப் பாடும்நமைத்

திருத்தமுறப் பயிற்றுவித்துச்
செயலாற்றச் செய்யட்டும்!

செஞ்சேனை அணிகளிலே
திரண்டிடுவீர்!
தொழிலாளர்

தஞ்சேனை பலத்தாலே
சோதனையைத் தகர்த்தெறிவீர்!

* * *

## 11

பத்துதலைக் கருநாகப்
பாம்பைப் படம்போட்டுச்
சித்திரிக்கும் சுவரொட்டிச்
சித்திரத்தை,[42]
வரலாற்று
நூலோர்கள் வியப்போடு
நோக்குங்கால்,
"இத்தகைய
காலசர்ப்பம் என்றேனும்
இருந்ததுண்டோ?
கற்பனையோ?"
என்றெண்ணி மயங்கிடுவார்...
என்றாலும், அத்தகைய
பெத்தப் பெரிதாகப்
பெருத்துக் கொழுத்தவொரு
பத்துதலைக் கருநாகப்
பாம்பே, நம்மையெல்லாம்
கொத்துதற்குப் பாய்ந்துவந்த
கோரத்தை நாமறிவோம்.

"வந்தது வரட்டும்! ஆபத்தை
நந்தம் துணிவால் முறியடிப்போம்!
சோவியத் ஆட்சி செழித்தோங்க
ஆவியை ஈந்தும் போரிடுவோம்."

முதலில்வந்த தெனிகின்னும்[43]
மூக்குடைந்து போய்விட்டான்.
சிதைந்துபட்ட கணைப்புகளைச்
செப்பனிடத் தொடங்கிவிட்டோம்.

அடுத்தாற்போல் படையெடுத்த
ராங்கெல்[44] பிரபவனும்,

கொடுத்தஅடி தாங்காமல்
குண்டோட்டம் ஓடிவிட்டான்.

பின்னர் கோல்சாக்கும்[45]
பெருத்தபடை பலத்தோடு

முன்னேறித் தாக்குதற்கு
முனைந்திட்டான்!
என்றாலும்,

பசிக்குணவு மரக்கிழங்காய்,
படுக்குமிடம் வெறுந்தரையாய்

வசித்துவந்த வேளையிலும்—
வளர்ந்தோங்கும் பேரலையாய்

செஞ்சேனை வீரர்படை
முன்னேறிச் சென்றதுகாண்!

வெஞ்சமரில் ஈடுபட்ட
வீரரவர் ஒவ்வொருவர்

தனக்குள்ளும் லெனின்வாழ்ந்தார்;
லெனின்காட்டும் தனியன்பை

மனத்துக்குள் வீரரெல்லாம்
நன்குணர்ந்து மதித்திருந்தார்.

பதினாறாயிரத்து
வெர்ஸ்ட்டுக்குப்[46] பரந்திருக்கும்

அதியகலப் போர்முனையில்
அணிதிரண்டு நின்றிருந்தார்.

அகலம்தான் இது! அதனின்
ஆழத்தை, நீளத்தைப்

புகலத்தான் அறிந்தவர்யார்?
போர்அதனில் வாசல்தொறும்

பதியிட்டுப் பகைவர்படை
பதுங்கி இருந்ததனால்,

உதிரத்தைத் தான்பொழிந்தும்,
உயிர்கள்பல பலிகொடுத்தும்,

வீடுதொறும்,
வாசல்தொறும்,
வெய்யபெருஞ் சமர்புரிந்தும்

நாடுதனைப் படிப்படியாய்
நம்வீரர் மீட்டுவந்தார்.

முடியரசு வாதிகளும்,
மூளைகெட்ட எஸ்.ஆரும்

அடிபட்ட பாம்பைப்போல்
ஆக்ரோஷம் கொண்டெழுந்து,

நாக்காலும்,
துப்பாக்கி ரவையாலும்,
வெறிநாய்போல்

தாக்கத் துணிந்தெம்மைச்
சாகடிக்க முயன்றார்கள்.

மிச்செல்சன் ஆலைக்கு[47]
வழியுமக்குத் தெரியாதா?

நிச்சயமாய் அவ்வழியை
நீரறிய வேண்டுமெனில்,

குண்டடியால் லெனின்பொழிந்த
குருதிச் சுவடுகளைக்

கண்டந்த வழியதனைக்
கண்டறிந்து கொண்டிடலாம்.

குறிபார்த்துத் துப்பாக்கிக்
குதிரையினை இழுப்பதற்குத்

தெரியாது தமைத்தாமே
திருப்பிச் சுடுகின்ற

பேர்வழிகள் தானெனினும்,
எஸ்.ஆர்.கள் பேச்சினிலோ

யார்தமக்கும் சளைக்காத
வல்லவர்காண்!
என்றாலும்,

தொற்றிவந்த நோய்நொடியும்,
பஞ்சமுமே தொடக்கிவைத்த

முற்றுகைக்கு முன்னாலே,
துப்பாக்கி முனைவிடுத்து

வீறிட்டுப் பாய்ந்துவந்த
குண்டுதந்த வேதனையோ

நூறிலொரு பங்கில்லை!—
என்றே நுவன்றிடலாம்.

பாருங்கள்!
ரொட்டிக்காய்ப் பறந்துவரும் ஈக்கூட்டம்

பாருங்கள்!
ஒருதுண்டு ரொட்டிக்காய்ப் பலநாட்கள்

கொல்லும் பனிக்குளிரில்,
க்யூவரிசை தனில்நாங்கள்

அல்லும் பகலும்நின்று
அவதிகளும் அனுபவித்தோம்.

மிகப்பெரிய கப்பல்கட்டும்
தளமொன்று வேலையற்றுச்

சிகரெட்டைப் பற்றவைக்கும்
தீப்பொறிக் காய்உழைக்கும்

காட்சியினைக் கணநேரம்
கற்பனையில் காணுங்கள்!

சீச்சீ!
அவரையெலாம் சிறையிலிடு!
தூக்கிலிடு!

சிரச்சேதம் செய்துவிடு!
இல்லையெனில்,
தினம்செத்து

வருகின்ற தொழிலாளர்
வயிற்றுக்கு வழிஏது?

ஆனாலும்—
குலாக்குகளோ[48] அளப்பரிய வெண்ணெயினை,

தானியத்தைக் கிடங்குகளில்
தட்டின்றி வைத்திருந்தார்.

அவர்களொன்றும் முட்டாள்கள் அல்ல;
கிட்டங்கிச்

சுவர்களுக்குள் தானியத்தைச்
சுருட்டிப் பதுக்கிவைத்தால்,

கறுப்புச் சந்தையிலே
கைநிறையப் பணம்பார்க்கும்

திருப்பம்வரும் என்றவர்கள்
சிந்தித் திருந்தார்கள்.

பட்டினியோ துப்பாக்கிப்
பரல்களையும் மிஞ்சியதாய்ச்

சுட்டுப் பொசுக்கியெமைச்
சுடுசாம்பல் ஆக்கியதே.

இத்தகைய நிலைமையினில்
எதுதேவை?
விளக்கெண்ணெய்த்

தத்துவமா?
இளக்காரம் தனைக்காட்டும் மனப்பாங்கா?

இல்லையில்லை!
நமக்கெல்லாம் இப்போது எதுதேவை?

வல்லுருக்கு மனப்பான்மை;
வயிரமொத்த நெஞ்சுறுதி!

எனவேதான்—
தலைவர்லெனின் இத்தகைய குலாக்குகளை

உணவுக் கொள்முதல்செய்
கோஷ்டிகளை உருவாக்கி

மடக்கி வெற்றிகொள்ள
வழிபார்த்தார்.
இவ்வாறு

அடக்குவது ஜனநாயகத்துக் கழகல்ல
என்றெந்த

மடையன்தான் இத்தகைய
வேளையினில் சிந்திப்பான்?
கடைகெட்ட கயவருக்குக்
கருணையென்ன?
இவர்க்கெல்லாம்
தடையற்ற வல்லுருக்குச்
சர்வாதி காரமொன்றே
விடையாகும்!
அதுவொன்றே வெற்றிக்கும் வழிகாட்டும்!

* * *

வெற்றிகண்டோம்.
என்றாலும், யாமிருந்த கப்பலதோ
முற்றாகப் பழுதுபட்டு
மூளியென நின்றதுவே.
மேனியெல்லாம் ஓட்டைகளாய்,
விரிசல் நெளிசல்களாய்த்
தானிருக்க,
சட்டங்கள் தகர்ந்து பொடிந்திருக்க,
எந்திரங்கள் துடிப்போய்ந்து
இறப்பதற்குக் காத்திருக்க,
பொந்துசந்தை அடைப்பதற்கும்
போக்கற்றுத் தானிருக்க,
நீரில் முடங்கிப்போய்
நெட்டுயிர்த்து நின்றதுவே.
வாருங்கள்!
கப்பலிதன் வருத்தத்தைத் தீருங்கள்!
செப்பனிட்டுச் சீர்படுத்தித்
திருத்தங்கள் செய்திந்தக்
கப்பலினை மீட்டுமந்தக்
கடல்மீது செலுத்துங்கள்!

கரைஎங்கே?
துறைஎங்கே?
கலங்கரைநல் விளக்கெல்லாம்

தரைகாட்டும் பணிமறந்து
தணிந்தவிந்து போயினவே.

அலைகடலில் பாய்மரத்தை
அகல விரித்துவிட்டு

நிலையிழந்து தள்ளாடி
நீர்கிழித்துச் சென்றோம்யாம்.

கப்பலிது குடைசாய்ந்து
கவிழ்ந்திடுமோ?
ஆபத்து

அப்படியும் நேர்ந்திடலாம்.
ஏனென்றால், அதன்தளத்தில்

ஏறி இருந்தவர்தம்
எண்ணிக்கை கொஞ்சமல்ல;

ஈரைந்து கோடிப்பேர்!
எல்லோரும் விவசாயி!

குதூகலத்தால், குரோதமனக்
கோட்டத்தால், எமைப்பார்த்து

எதிரியர்கள் மகிழ்ச்சியுடன்
ஏளனமாய் ஊளையிட்ட

போதினிலும்,
லெனின்மட்டும் மனங்குலைந்து போகவில்லை;

மோதியெழும் அலைவீச்சில்
திக்காடி முக்காடிப்

பரிதவித்த கப்பலதன்
பாய்மரத்தைப் பிணைத்திருந்த

இருபத்துக் கயிற்றினையும்
இழுத்துப் பிடித்தவராய்க்

கடற்காற்றின் திசையறிந்து
கப்பலினைத் திருப்பிவிட்டார்.

குடைசாய விருந்தகப்பல்
கொடிமரம்போல் நிமிர்ந்தெழுந்து,

தடைகடந்து துறைமுகத்துள்
தருக்கோடு நுழைந்ததுகாண்!

உடனேயே புயலெல்லாம்
ஓய்ந்ததுமோர் அதிசயம்தான்!

வேண்டுமட்டும் ரொட்டிகளை
விவசாயப் பெருமக்கள்

கூண்டுவண்டி தனிலேற்றிக்
கொண்டிருந்தார். வாசல்தொறும்

"என். இ. பி.[49], விற்குமிடம்,
வாங்குமிடம்" என்றெல்லாம்

கண்ணில் விளம்பரங்கள்
கச்சிதமாய்ப் பட்டனகாண்.

"செப்பனிடை முனைந்துவிட்டோம்;
சிறிதுமினிப் பயமில்லை.

தப்பின்றி அளந்தறியத்
தான்கற்றுக் கொள்ளுங்கள்"

என்றுலெனின் கண்சிமிட்டி
எமக்கூக்கம் தருகின்றார்.

என்றாலும்,
கரைநீரோ இளைத்துக் களைத்துடலம்

சோர்ந்திருந்த மாலுமியர்
தமக்கோர் தூளியைப்போல்

நேர்ந்து மெலவசைந்து
நின்றதுவே.
அதனாலே,

"காற்றுமில்லை! இந்நிலையில்
கப்பலினை ஓட்டென்று

சாற்றுவதில் அர்த்தமென்ன?"
என்றவர்கள் சலித்திட்டார்.

லெனினவரோ,
கூட்டுறவுச் சங்கமெனும் இறங்குதுறை
இனிதமைந்து,
பாறையற்று இருந்திடுமோர் ஆழ்ந்தகுடாக்
கடலதனை மக்களுக்குக்
கைநீட்டிக் காட்டிவிட்டார்.
இடமதனைக் கண்டவுடன்,
நிர்மாணம் என்றிடுமோர்
செப்பனிடும் துறைக்குள்ளே
சோவியத்துப் பெருநாடாம்
கப்பலது பாய்விரித்துக்
கனஜோராய்ச் சென்றதுகாண்.
வெடிப்பை, விரிசல்களை
விரைந்து சரிப்படுத்தி
முடிக்க லெனினவரே
முன்வந்து உழைக்கின்றார்!
இரும்புத் தகடுகளை,
இழைத்த பலகைகளை
அரும்பாடு பட்டாங்கு
அவர்சுமந்து செல்கின்றார்!
வருங்காலக் கூட்டுறவுச் சங்கங்கள்,
மற்றுமுள்ள
நிருவாக அமைப்புக்கள்
நிலையையெலாம்,
தம்மரிய
தொலைநோக்கால் கண்டறிந்து,
துல்லியமாய்க் கணித்தறியும்
கலைநோக்கால் அளந்தவற்றைக்
கணக்கெடுத்துக் கொள்கின்றார்!
இதன்பின்னர்,
லெனினவர்தாம் மேல்தளத்தில் ஏறித்தம்

பதவியினை மறுபடியும்
ஏற்றுப் பணிபுரிந்தார்;
முன்னாலும், பின்னாலும்,
முப்புறத்தும், எப்புறத்தும்
மின்னிச் சுடர்விடுக்கும்
எண்ணற்ற விளக்கொளிகள்!
திகைப்பூட்டும் விதத்தினிலே
திடுமென்று தாக்கிவந்த
வகையினுக்குப் பதிலாக,
இனிமேலே,
வரையறுத்துத்
திட்டமிட்ட முற்றுகையே
தினந்தோறும் இடம்பெறுமால்!
தெட்டத் தெளிவோடும்,
தீர்மான புத்தியொடும்,
முதன்முதலில் பின்வாங்கி
வந்திடவும் முனைந்திட்டோம்;
இதனாலே எவரேனும்
இழிவுபட நேர்ந்ததுவோ?
அத்தகையோர் யாரேனும்
இருப்பின், அவரெல்லாம்
சத்தமின்றி வெளியேறித்
தம்வழியே செல்லட்டும்!
இத்தோடு பின்வாங்கல்
நின்றுவிடும்; இனிமேலே
வைத்தகுறி தப்பாமல்
முன்னேறிச் சென்றிடுவோம்.
ஆர்.சி.பி.50 ஊழியர்காள்!
அடலேறு போல்நிமிர்ந்து
வாருங்கள்!
கப்பலினை வழிநடத்திச் செல்லுங்கள்!
எத்தனையோ நூற்றாண்டுக்
காலம்வரை பொதுவுடைமை

இத்தரையில் சிறந்தோங்கி இருந்துவரும்.
இதில்பத்து

வருடத்தில் குறுக்கிட்ட
வாதனையும் வேதனையும்

ஒருபொருட்டோ?
ஆதலினால், உறுதியிலே தளராது

முன்னேறிச் சென்றிடுவோம்.
இடைவழியில் வந்துற்ற

என். இ. பி. 51 சங்கடங்கள்
இறந்துபடும்; மறைந்துவிடும்.

மெல்லமெல்லப் பணியாற்றி
மெதுவாகக் கட்டிவந்தால்,

வல்லமையில் ஈாமெழுப்பி
வருகின்ற மாளிகையும்

பன்னூறு மடங்காகப்
பலம்பெற்று நிலைத்திருக்கும்.

இன்னுமிங்கு "தனியுடைமை"
ஒருசிறிதே இருப்பதனால்

முன்னேறும் வேகமது
முடங்குவதும் வாஸ்தவம்தான்.

என்றாலும்,
உலகெங்கும் எழுந்தோங்கும் புயல்வரவை

முன்தோன்றி அறிவுறுத்தும்
கறுத்திருண்ட முகிற்கூட்டம்

தன்னில், ஏற்கெனவே
சட்டச் சடாரென்று

மின்னல் பளிச்சிட்டு
வெட்டுவதைக் காண்கின்றோம்.

எதிரிகளில் பழையவர்கள்
புதியவர்க்கு இடம்கொடுத்து

உதிரிகளாய்ச் சிதறுண்டு
ஒழிகின்றூர்.
என்றுலும்,

பொறுத்திருந்து பாருங்கள்—
புவிக்கோள் இதன்மீது

நிறைந்திருக்கும் வானமெலாம்
நெருப்புமிழச் செய்திடுவோம்!

இருந்தாலும்,
இதையெல்லாம் எழுதுவதை விடவும்அதைத்

திருத்தமுறச் சாதித்துக்
காட்டுவதே சிறப்பாகும்.

அலுவலக நிர்வாகி யாஞலும்,
அல்லதுவோர்

தொழிலகத்தில், எந்திரத்தில்
தொழில்புரிவோர் ஆஞலும்,

இன்றைக்கு நம்மவர்கள்
யாரெனிலும், எல்லோரும்

ஒன்றைமட்டும் நன்கறிவோம்:
உழைப்பாளி வர்க்கம்தான்

வெற்றியினைப் பெற்றது; அந்த
வெற்றியினை உருவாக்கும்

பெற்றியினை லெனினவரே
பெற்றிருந்தார்!—என்றறிவோம்.

அந்நாளில் கோமின்டர்ன்
அதனில் தொடக்கமுற்று,

இந்நாளில் கருக்கரிவாள்—சுத்தியலை
இலச்சினையாய்ப்

பொறித்துப் புழங்கிவரும்
புத்தம் புதுக்காசு

வரைக்கும்,
நாம்பெற்ற வெற்றிகளும் சாதனையும்

விரிவடைந்து விரிவடைந்து,
லெனினவர்தம் மகத்தான
சரிதத்தின் ஏடுகளைச்
சந்ததமும் தீட்டிவரும்.
புரட்சியெலாம் உரிமைக்காய்ப்
போராடும் மக்களர்தம்
திரட்சியிலே பிறப்பதுதான்.
சிந்தித்துப் பார்த்திட்டால்,
தனிமனிதர் புரட்சியெனும்
தண்டா யுதமதனை
இனிதெடுத்துப் போர்புரிய
எள்ளளவும் ஏலாது.
என்றாலும்,
தம்மறிவின் இணையற்ற விசைவேகம்,
குன்றாத மனோவுறுதி
இன்னபல குணத்தாலே
தம்மொத்த பற்பலரின் மத்தியிலும்,
தலைவர் லெனின்
மும்மடங்கு பொலிவுற்று
முன்னணியில் நின்றிருந்தார்.
தீர்க்க தரிசனத்தால்
லெனினவர்தாம் தெரிந்துரைத்த
மார்க்கத்தில் பலநாடும்
வரிசைக் கிரமத்தில்
முன்னேறிச் சென்றந்த
முதறிஞர் கண்டுரைத்த
பொன்னுரையை நனவாக்கிப்
பொலிந்துவரக் காண்குவமால்.
வெள்ளையரோ, கறுப்பர்களோ,
வேறு நிறத்தவரோ—
எல்லா இனத்தவரும்
இந்நாளில் கோமின்டர்ன்

கொடியின்கீழ் அணிதிரண்டு
கோஷமிட்டு வருகின்றார்.

படிப்படியாய்க் கரைந்துவரும்
ஏகாதி பத்தியமும்,

பணக்கார வர்க்கமதும்,
பாருலகைத் துன்புறுத்தித்

தனதாட்சி தனையின்னும்
சாதித்து வந்தாலும்,

ஞானிலெனின் பெற்றெடுத்த
ஞானப் புதல்வனெனத்

தானிலங்கும் சோவியத்துக்
குடியரசின் சாதனைக்கு

மரியாதை யோடுதலை
வணங்குவதும் காண்கின்றோம்.

அரியபெரும் முயற்சிகட்கும்,
அனுதினமும் பணக்காரர்

திருக்கூட்டம் செய்துவரும்
சூழ்ச்சித் திறங்களுக்கும்

அஞ்சாது,
புகைத்திரளை அள்ளி யெறிந்தே நம்

இஞ்சின் தலைதெறிக்கும்
வேகத்தில் ஏகுதுகாண்.

இந்நிலையில்—

திடுமென்று இடிவிழுந்து
தீய்த்தாற்போல்,
நாங்களெலாம்

கிடுகிடுக்க, நடுநடுங்க,
செய்தியொன்று கேட்டதுவே:

மாமேதை லெனினவர்க்கு
மாரடைப்பாம்...

* * *

# 12

கண்கலங்கி நிற்குமொரு போல்ஷ்விக்கைக்
காட்சிக்கே

கண்காட்சி தனில் வைத்தால்,
அன்னவனைக் காண்பதற்கு

அல்லும் பகலும்
அறுபத்து நாழிகையும்

செல்லும் பெருங்கூட்டம்!
இத்தகைய வற்றையெலாம்

இன்னுமொரு நூறாண்டுக்
காலம்தான் ஏகிவிட்டால்

கண்ணாலே காண்பதற்குக்
கடுகளவும் முடியாது!

வெள்ளைப் படையினர்எம்
முதுகுகளில் சூட்டுக்கோல்

கொள்ளியினால் ஐந்துமுகத்
தாரகையைக் குறித்தார்கள்;

இஞ்சின் நெருப்புக்கே
எம்மையெலாம் இரையாக்கி

நெஞ்சம் களித்திட்டார்
ஜப்பானி நீசர்படை;

மாமந்தோவ்[52] தனைச்சார்ந்த
வெறிக்கூட்டம் எம்மையெலாம்

பூமிக்குள் தலைகீழாய்
உயிரோடு புதைத்தார்கள்;

ஈயத்தின் தீக்குழம்பை,
இரும்புக் குண்டுகளை

வாய்க்குள் செலுத்தியெமை
வாயடைக்கப் பார்த்தார்கள்;

"இனியேனும் சொல்லாதே!"
என்றே கொக்கரித்துத்

தனியாணை இட்டார்கள்.

என்றாலும்—

எம்முடைய

கொதித்துக் கனன்றெரிந்த

தொண்டைக் குழியிருந்து

குதித்துவந்து,

சொல்மூன்று குலவையிட்டு ஒலித்தனவே:

"கம்யூனிசம்

நீடூழி

வாழ்க!"

## 13

அந்நாள்—

ஜனவரியில் இருபத்தி இரண்டாம்நாள்:

அந்நாளில் சோவியத்துக்

காங்கிரசின் அவைகூடும்

மண்டபத்தில்,

உருக்கினைப்போல் வலிமையினை நெஞ்சகத்தே

கொண்டிருக்கும் தலைவர்பலர்

கூடத் தொடங்கிவிட்டார்.

வரிசை வரிசையென

வருகைதந்த அவரெல்லாம்

பிரச்சினைகள் பலகுறித்தும்

பேச்சுக் கொடுத்தவராய்,

கிண்டல் உரையாடிக்

கிளுகிளுத்துச் சிரித்தவராய்

மண்டபத்தில் வந்தமர்ந்தார்......

"ஆரம்ப மாவதற்கு

அவர்கள் குறித்திருந்த

நேரமும்தான் ஆயிற்றே.

தாமதமேன்?

நில்லுங்கள்!

தலைமைக் குழுவினர்கள்
தானமரும் இடமதனில்

பலபேரைக் காணேமே!
பார்ப்பவர்தம் கண்களெலாம்

கனன்று சிவந்திருக்கும்
காரணமென்?
காலினின்[53] ஏன்

அனல்மேல் நிற்பதுபோல்
அல்லாடித் தவிக்கின்ருர்?

சேதியென்ன?
வாய்திறக்கச் சிரமமென்ன?
ஏன் இந்தச்

சூதான பேரமைதி?
சொல்லுதற்குத் தயக்கமென்ன?

ஒருவேளை... அதுதானே?
ஒருக்காலும் இருக்காது!

இருந்தாலோ?...
இருந்தாலோ?..."

பாரப் பெருங்கழுகு
கீழ்நோக்கிப் பாய்ந்ததுபோல்,

கூரைஎங்கள் தலைமீது
குமைந்து சாய்ந்ததுவே.

பணிந்துநின்ற தலைகளெலாம்
பயத்தால் வெலவெலத்துக்

குனிந்து தரையதனைக்
குறிவைத்து நோக்கினவே.

மெழுகுவத்திச் சரவிளக்கின்
மிதந்தாடும் தீச்சுடர்கள்

மழுக்கென்று ஒளிகுன்றி
மடிவதுபோல் நடுங்கினவே.

தேவையற்ற பேரொலியாய்த்
தெறித்த மணியோசையதன்

நாவைப் பெருமோனம்
நறுக்கென்று அடக்கியதே.
அந்நேரம் காலினிஞே
அலையெழும்பும் உணர்ச்சிகளைத்
தன்னுள் புதைத்தவராய்த்
தடுமாறி எழுகின்றார்.
ஆனாலும், பெருகிவரும்
கண்ணீர் அருவியதோ
தாளுகக் கன்னத்தும்
தாடியிலும் வழிந்தோடித்
துளித்துளியாய்ப் பளபளக்கத்
தொடங்கியதே.
துயரத்தை
ஒளித்து வைப்பதற்கோ
அவராலும் ஒண்ணவில்லை.
பொருத்தெல்லாம் செங்குருதி
புகுந்து புடைப்பேற,
வருத்தத்தை மறைப்பதற்கு
வழியற்றும்,
தமக்குள்ளே
நிலைகுழம்பிப் பொங்கிவரும்
நினைவுகளைப் புரிந்துகொளும்
வலியற்றும் இவ்வாறு வாய்நேர்ந்தார்:
"நேற்றைக்கு
மணிஆறு ஐம்பதுக்கு
மாமேதை தோழர்லெனின்
மாண்டுவிட்டார்!......"

* * *

## 14

பன்னூறு ஆண்டுகளும்
பார்க்கவொண்ணு அவலமொன்றைக்

கண்ணுற்று,
அவ்வாண்டு கண்கலங்கி நின்றதுவே.

கரைகாணாப் பெருந்துயரைக்
கண்ணுற்ற அந்நாள்தான்

தரைமீது எந்நாளும்
தன்கதையைக் கூறிநிற்கும்

அந்நாளோ—

இரும்புமனம் படைத்தோரின்
இதயங் களைக்கூடக்

கரும்பினைப்போல் பிழிந்தெடுத்துக்
கதறியழ வைத்ததையா!

கலங்காத போல்ஷ்விக்குக்
காளையரும் வேதனையால்

குலுங்கிக் குலுங்கியழும்
கோரத்தைக் கண்டதையா!

தாங்கவொண்ணா மனப்பளுவால்,
சகிக்கவொண்ணாப் பெருந்துயரால்

நாங்களெல்லாம் தள்ளாடி
நடந்து திரிந்தலைந்தோம்.

"எங்கே?
எப்போது?
எவ்வாறு நேர்ந்ததிது?

எங்களுக்கு விவரத்தைச்
சொல்வதற்கு ஏன்தயக்கம்?"

வீதிகளில் சந்துகளில்
விரைந்து கடந்துசென்ற

போதினிலே மாஸ்கோவின்
போல்ஷாய்[54] அரங்கதனில்

சடலத்தை வைக்குமொரு
சவப்பெட்டி தனைக்கண்டு

உடலம் குலுங்கியதே!
உலகெல்லாம் சுற்றியதே!

அகமகிழ்வோ நத்தையைப்போல்
அசமந்த மாய்நகரும்;

மிகுதுயரோ புயலைப்போல்
வெறிபிடித்து மேலோங்கும்.

பகலோனில் ஒளியில்லை,
பனிக்கட்டித் துண்டுகளோ

தகதகத்து ஒளிரவில்லை.
சஞ்சிகைகள் எல்லாமும்

அட்டைக் கரிநிறத்தில்
அவலச் செய்தியதைக்

கொட்டிக் கவிழ்த்துலகைக்
குலைநடுங்கச் செய்தனவே!

பாட்டாளி மக்களர்தம்
மூளைக்குள் அச்செய்தி

தோட்டாவைப் போற்பாய்ந்து
துளைத்துருவிப் பாய்ந்ததுவே!

பணியாற்றும் தொழிற்சாலைப்
பட்டறையின் கருவிகளை

நனைத்தாங்கே கண்ணீரும்
நதியாய்ப் பெருகியதே!

நோவில் நொம்பலத்தில்
நூறுமுறை பதப்பட்டும்,

சாவைப் பலமுறைகள்
சந்தித்தும் பார்த்திட்ட

ஏருழவன் தன்மனைவி
முகமதனை ஏறிட்டு

நேர்நின்று நோக்குதற்கும்
நெஞ்சிலுரம் அற்றவனாய்ப்

பார்வையினை மாற்றிநின்றான்.
ஆனாலும் பாவையவள்

கூர்மதியால் அவன்கரத்தைக்
கொண்டுண்மை கண்டுவிட்டாள்!

கற்களைப்போல் எதைக்கண்டும்
கலங்காதார் உதடுகளும்

பற்கள் பதிந்ததனுல்
பச்சைரத்தம் சிந்தினவே!

பிள்ளைகளோ ஒருகணத்தில்
பெரியவர்கள் போல்வளர்ந்து

உள்ளக் கவலைகொண்டு உழன்றுருக,
தலைநரைத்த

பெரியவர்கள் எல்லோரும்
பிள்ளைகள்போல் கண்ணீரைச்

சொரிந்தழுது நின்றனரே!...

காற்ருே இரவெல்லாம்
கண்துஞ்சாப் பெருந்துன்ப

ஊற்ருல், உலகெல்லாம்
ஊளையிட்டு அலைந்ததுவே!

ஆனுலும்,
உறைபனியில் ஆழ்ந்திருக்கும் மாஸ்கோவில்

தானமைந்த ஓர் அறையில்,
சவப்பெட்டி தனக்குள்ளே

புரட்சிக்குத் தந்தையுமாய்,
புத்திரனு மாயிருந்த

திருச்செல்வர் கிடக்கின்ருர்
என்னுமொரு செய்தியினை

எவர்தான்,
எப்படித்தான்
ஏற்றுக் கொளமுடியும்?

அவர்தான் மரிப்பாரா?
ஆனுலும்...
அவரிங்கு

மரித்தார்!
மரித்துவிட்டார்!
மரிக்கவில்லை என்றுமினி
உரைப்பதிலே பயனுண்டோ?
சவப்பெட்டி உள்ளுக்குள்
கண்மூடி அவர்கிடக்கும்
காட்சியினைப் பெட்டியதன்
கண்ணாடி வழியாகக்
காண்பதுவும் பொய்யாமோ?
பவலெத்ஸ்கி ரயில்நிலையம்
தனிலிருந்து படைவீரர்
அவரையன்றோ சுமந்துவந்தார்!
அவர்செல்வ ரிடமிருந்து
விடுவித்துத் தந்த நகர்
வீதிகளின் வழியவர்தம்
சடலத்தைத் தானன்றோ
தாங்கி எடுத்துவந்தார்!
வீதியெலாம் வெட்டுண்டு
விரிந்துபட்ட காயம்போல்
வேதனையால் வாய்புலம்பி
வெந்து குமைந்ததுவே.
அக்டோபர் புரட்சியதன்
ஆரம்பத் தாக்குதலின்
கெக்கலியை,
காலடியைக் கேட்டுத் தெரிந்திருந்த
பாதையதன் சரளைக்கல்
ஒவ்வொன்றும்,
பார்புகழும்
மேதைலெனின் தனைக்கண்டு
விம்மிதமும் உற்றதுண்டே!

செங்குருதி நிறத்துகிலில்
ஜிகினுப்பூ வேலேயினுல்

இங்கெழுதி வைத்துள்ள
கோஷங்கள் யாவினையும்

சிந்தித்தும்,
வார்த்தைகளாய்த் திரட்டி உருக்கொடுத்தும்

தந்ததுவும் தகைசான்ற
தலைவர் லெனினன்றே?

இங்குள்ள கோபுரங்கள்
எல்லாம் லெனினவர்தம்

சிங்கக் குரலதனைக்
கேட்டுச் சிலிர்த்ததன்றே?

அன்னவர்தம் குரல்கேட்டோர்
அவர்தம்மைப் பின்பற்றிச்

செந்நெருப்புத் தழலூடும்
வழிநடந்து செல்லாரோ?

இங்குள்ள தொழிலாளர்
எல்லோரும் லெனின்அவரை

நன்கறிய மாட்டாரோ?
தங்களது நல்லிதயம்

தம்மையெலாம் அவர்தமது
சவப்பெட்டி மீதினிலே

செம்மலரின் குலம்போலே
சிந்திவிட மாட்டாரோ?

உழைப்பாளர் மக்களர்தம்
உரிமைப்போர்த் தளபதியாய்

வழிகாட்டிச் சென்றதுவும்,
வயிரம்போல்,
உருக்கைப்போல்

தொழிலாளர் தம்குலத்தைத்
துணிவுபெறச் செய்தவரை

எழுச்சிபெறச் செய்ததுவும்,
இறுதிவெற்றி அவர்க்கென்றே
அறுதியிட்டுக் கூறியதும் லெனினன்றோ?
அவ்வாறே
இறுதிவெற்றி கண்டதுவும்
பாட்டாளி இனமன்றோ?
இங்குள்ள விவசாயி
எல்லோரும் லெனினவர்தம்
மங்காப் பெரும்பெயரை,
விவிலியநூல் தனிற்காணும்
ஞானியர்கள் பெயர்களிலும்
நனிசிறந்த திருப்பெயராய்ப்
பேணித்தம் இதயத்துப்
பேழையிலே போற்றுகின்றார்.
ஏனெனிலோ—
அவர்களது இனிய பெருங்கனவாய்த்
தானிருந்த உழுநிலத்தை—
அவர்களது தாத்தாக்கள்
பற்பலபேர் பலகாலும்
போராடிப் பார்த்துயிரை
அர்ப்பணித்தும்,
தம்வாழ்வில் அடையாத பெருங்கனவை—
நனவாக்க,
உழுதுவரும் நன்னிலத்தை உழவர்குலம்
தனதாக்க உதவியதும்
தகையாளன் லெனினன்றோ?
அம்மட்டோ?
செஞ்சதுக்கம் அதனுள் துஞ்சுகின்ற
கம்யூனிஸ்டு வீரர்பலர்[55]
கல்லறையின் உள்ளிருந்து,

"இதயம் கவர்ந்தவரே!
வாழ்ந்திருப்பீர்!
எழில்வாழ்வை
அதற்குள்ளே முடிப்பதற்கு
அவசியமே இல்லை!" என்று
இதமாகச் சொல்வதுபோல் இருக்கிறது.
அற்புதமாம்
புதுமைசெயும் ஒருமனிதன்
பொட்டென்று வாய்திறந்து
"இவருக்காய் நாங்களெலாம்
இப்போதே இறந்துபட்டால்,
இவர்பிழைத்து எழுந்திடுவார்"
என்றுரைத்து விட்டக்கால்,
தெருக்களெலாம் அணைகடந்து
திரண்டெழுந்து, மக்களெலாம்
மரிப்பதற்கே தயாராகி
மகிழ்ச்சியுடன் வந்திடுவார்.
ஆனாலும் இத்தகைய
அற்புதங்கள் நேர்வதில்லை.
வீணான கனவுஅவரை
மீட்டுவரப் போவதில்லை.
தலைவர்லெனின்—
அவர்சடலம் தானிருக்கும் சவப்பெட்டி—
நிலைகுலைந்து மனந்துவண்டு
நிற்குமெங்கள் நெடுந்தோள்கள்—
இவையன்றி வேறில்லை.
லெனினவரோ இறுதிவரை
புவிமனிதர் யாவரையும்
போல்வாழ்ந்தே உயிர்நீத்தார்.
ஆதலினால்,
இதயத்துள் அனலாகக் கொதித்தெழும்பும்

வேதனையைச் சகிப்பதலால்
வேறேதும் மார்க்கமில்லை.

அழுகையுடன் அணிவகுத்து
அவருடலைச் சுமந்தெடுத்து

வழிநடப்போர் தோள்மீது
மிதந்துசெலும் செந்நிறத்துச்

சவப்பெட்டி யிதைப்போன்ற
மதிப்பரிய தனிச்சுமையைப்

புவிப்பரப்பில் வாழ்ந்துவரும்
பொதுமக்கட் பெருங்கடல்கள்

என்றைக்கும், எக்காலும்
இவ்வாறு பரிந்தெடுத்துச்

சென்றதில்லை!
லெனினுடலம் செல்கின்ற வழியெல்லாம்,

தலைவரவர் அறிவுக்கும்
சக்திக்கும் வாரிசாய்

நிலவிவரும் போர்வீரர்
நேராக நின்றவர்க்குத்

தலைவணக்கம் செய்கின்றார்.
சமுத்திரம்போல் மக்களெலாம்

அலையலையாய், திரள்திரளாய்,
ஆங்காங்கே நின்றிருந்தார்.

ஆயிரத்தித் தொளாயிரத்துப்
பதினேழாம் ஆண்டதனில்,

மாயாத கொடுங்குளிர்சேர்
மாரிப் பருவமதில்,

உண்கின்ற ரொட்டிக்காய்
ஓடிவந்து, க்யூவரிசை

தன்னில் நின்றவர்கள் ஒருசிலரே!
தகிக்கின்ற

கும்பிக் கொதிப்பைவிடக்
குளிருக்கே மிகவஞ்சித்

தம்பசியைப் பொறுத்தொருநாள்
தள்ளிவந்தோர் பலருண்டு.

இன்றைக்கோ—
முதியவரும், இளையவரும், வெம்பிணியால்

குன்றிவிட்ட மாந்தர்களும்,
குழந்தைகளும்,
உயிர்நடுக்கும்

கொடுங்குளிரில் திரண்டுவந்து
க்யூவரிசைப் பேரணியில்

நடுநடுங்கி நிற்கின்றார்.
நகரத்தார், கிராமத்தார்

இருபிரிவும் அருகருகே
இணைந்தொன்றாய் நிற்கின்றார்;

சிறியவரும் பெரியவரும்
வருத்தத்தால் சிதைகின்றார்.

உழைப்பாளர் உலகமெலாம்
ஒன்றுபட்டு அணிதிரண்டு

வழிநடந்த காட்சியது
வையகத்தில் லெனின்வாழ்ந்த

வாழ்க்கையதன் ஜீவன்மிகும்
வடிவமெனத் தோற்றியதே.

கதிரவனும் அஸ்தமனக்
கதிர்க்குலத்தைப் பூமியின்மேல்

உதிர்த்துவிட்டு மனஞ்சோர்ந்து
ஒளிகுன்றி மறைந்துவர,

சாட்டையடி பட்டவர்போல்
தவித்துநின்ற சீனர்களும்

வாட்டமுற்றுத் தலைகுனிந்து
வணங்கியவண் நின்றாரே.

இரவுகளோ நாட்களதன்
தோள்களிலே மிதந்தேகி
வரவிருக்கும் நேரத்தை,
தேதிகளைக் குழப்பிவர,
தாரகையின் சுடர்ஒளிரும்
சமயமென்றே,
இரவான
நேரமென்றே தோற்றவில்லை.
என்றாலும்—
நீக்ரோக்கள்—
அமெரிக்க நாட்டினின்றும்
அங்குவந்த நீக்ரோக்கள்—
இமைவழியே நீர்பொழிய
லெனின்முன்னர் அழுகின்றார்.
என்றுமில்லாக் கொடியபனி
எல்லோரின் கால்களையும்
தின்று மெல்வதுபோல்
சுட்டெரித்துத் தீய்த்ததுவே.
இத்தகைய கொடுமையிலும்
எல்லோரும் நாள்முழுதும்
சித்தத் துறுதியுடன்
சேர்ந்தொன்றாய் நின்றனரே!
கதகதப்பை உண்டாக்கக்
கையோடு கைமோதும்
விதமறிந்தும், அமைதியுடன்
வெடவெடத்து நின்றனரே!
உறைபனியோ லெனினவர்மேல்
நாங்கள்கொண்ட உள்ளன்பின்
உரமதனைச் சோதிக்கும்
உரைகல்லே யானாற்போல்,
பற்றிப் பிடித்தலைத்துப்
பலவாறும் எமைவாட்டிக்

குற்றுயிராய்க் குலையுயிராய்க்
கொடுமைபல செய்ததுவே!

குமபலுகக மததுயிலே
குத்தீட்டி போற்புகுந்தும்,

கம்பத்தின் பின்னாலே
காத்திருந்தோர் மத்தியிலும்

ஊடாடிப் பாய்ந்தும்,
உன்மத்தம் கொண்டதுபோல்

பாடாய்ப் படுத்தியெமைப்
பதைபதைக்கச் செய்ததுவே!

படிகளெலாம் ஏறுதற்கு
அரிதான பாறைகள்போல்

நெடிதோங்கி எம்மையெலாம்
நெட்டுயிர்க்கச் செய்தனவே!

இப்போதோ—
பெருமூச்சும், இடம்விட்டுப் பெயர்வதுவும்

கப்பென்று ஸ்தம்பித்துக்
கடுமோனம் நிலவியதால்.

முடிவறியாப் பெரும்பள்ளம்
நாலடிக்கு முன்னாலே—

அடியெடுத்து வைத்ததனை
அஞ்சாது கடப்பதுவோ?

பொன்னென்றே மதிப்பரிய
பொருளாக இருந்துவந்த

பண்ணையடி மைத்தனத்தின்
பாதாளம் அஃதாகும்.

இக்குழியின் விளிம்பதனில் —
லெனின்;
அவர்தம் சவப்பெட்டி.

அக்குழிக்கு அப்பாலோ?
அகில உலகனைத்தும்

செம்மாந்து புகழ்பரப்பிச்
செக்கச் சிவந்தொளிரும்

கம்யூனே காட்சிதரும்!...
எதைநாங்கள் காண்கின்றோம்?

வித்தகராம் லெனினவர்தம்
விரிந்தகன்ற பெருநெற்றி;

அத்தோடு மங்கலென
நதேஜ்தா[56] அவர்உருவம்......

கண்ணீர் கசியாத
கண்கள் எனக்கிருந்தால்

இன்னும் எதையெதையோ
இனம்கண்டு கொண்டிருப்பேன்.

விழித்திரையில் நீர்வடியா
வேளையினில், மகிழ்பொங்கிக்

களிதுள்ளும் நாட்களைநான்
தெளிவாகக் கண்டதுண்டு.

இறந்தவர்க்குச் செய்கின்ற
இறுதிமரி யாதையெனப்

பறந்தாடும் கொடிகளெலாம்
தலைதாழ்த்திப் பணிந்தனவே.

"கடைசிவரை போரிட்டுக்
கடமை புரிந்தவரே!

விடைபெறுவீர், எம்தோழ!
வீயாப் புகழ்சுமந்த

உந்தம் திருநாமம்
உலகுள்ள நாள்வரைக்கும்

எந்தம் இதயத்தில்
இறவாது இலங்கிவரும்!..."[57]

பயங்கரம்தான்!
கண்களினைப் பட்டென்று மூடிவிட்டுக்

கயிற்றின்மேல் நடப்பதுபோல்
கவலையைநீ கடந்துவிடு!

நேர்நின்று ஒருநிமிடம்
நிலையான உண்மையினைக்
கூர்விழியால் பார்ப்பதுபோல்
கொடுமையிதைப் பார்த்துவிடு!

* * *

## 15

அணிவகுப்பின் நாதவிசை
ஆற்றுப் பெருக்கினிலே
இனிதே மிதந்துசெலும்
இன்பம்போல்,
என்னுடம்பு
பளுக்குறைந்து காற்றாகிப்
பறப்பதுபோல் மகிழ்ச்சியிலே
களிக்கின்றேன்.
இந்நிமிடம் காலமெல்லாம் என்னுள்ளே
ஒளிபரப்பும்;
இன்றைக்கும், என்றைக்கும், ஒருக்காலும்
அழியாது வாழ்ந்துவரும்—
என்பதனை அறிவேன்யான்.
இந்நாளின் பேரணியில்
யானும் ஒருவனென்ற
எண்ணத்தால் மகிழ்பொங்கி
எக்களிப்பு எய்துகின்றேன்.
கண்ணீரும் எமக்கிடையே
பொதுவுடைமைப் பொருளாகும்.
மண்ணகத்தில் நாங்கள்ஒரு
வர்க்கம் எனும்அந்தப்
பொன்னான,
மகத்தான,
புனித உணர்வான

தன்னிறைவு தருமின்பம்
தனக்குநிகர் உண்டாமோ?

கொடிகள் ஒவ்வொன்றுய்க்
குனிந்து மறுபடியும்

முடிசாய்த்து வணங்கிடினும்,
வருங்காலப் போர்களிலே

மீட்டும் நிமிர்ந்துநின்று
வினையாற்றும் உறுதியினைக்

காட்டுதற்கே இன்றைக்குத்
தலைவணங்கிக் காட்சிதரும்.

"கழுகினைப்போல் தொலைதூரம்
காண்கின்ற உம்முடைய

விழிகளை யாம் நிரந்தரமாய்
மூடிவிட்டோம் சோதரரே!..."[58]

தோளோடு தோளிணைந்து
துணைநின்றேம்—என்றாலும்

வீழவல்ல; தரைமீது
வேருன்றி நிற்பதற்கே!

கண்ணிமைகள் சிவப்பேறிக்
கனக்க,
பதாகைகளின்

செந்நிறமும் கருமையுற,
சிந்துகண்ணீர் பளபளக்க,

சமாதியினை மெலக்கடந்து
தலைவர் லெனினவர்க்கு

அமைதியுடன் இறுதிவிடை
எல்லோரும் அளிக்கின்றேம்.

சவஅடக்கம் தனக்குரிய
சடங்கெல்லாம் நடக்கையிலே

எவரெவரோ லெனின்பற்றிச்
சொற்பொழிவு ஆற்றிநின்ருர்.

பேசுவது இருக்கட்டும்.
பெருந்துயரம் என்னவெனில்,

தேசுதவழ் அவர்முகத்தைத்
தெரிசிக்க இருப்பதுவோ

ஒருநிமிடம்!
ஒரே நிமிடம்!
உளமாரக் கண்டவரை

அருமையுடன் உள்ளத்தால்
ஆரத் தழுவுதற்கும்

நேரமுண்டோ?
மக்களெலாம் நெஞ்சப் பதைப்போடு

ஓரக்கண் ணிட்டங்கு
உறைபனித்தூள் படிந்திருக்கும்

கடிகார[59] வட்டமதைக்
காண்கின்றார்.
அடடாவோ!

கடிகார முட்களுக்கேன்
இந்தக் கனவேகம்?

கடைசி மணியோசை
காதில் விழுகிறது!

நடைபோடும் காலா! நீ
நகராதே! நின்றுவிடு!

மானிடமே!
சராசரமே!
வாழ்வே!
உயிர்மூச்சே!

நீணிலமே!
நின்றிடுக!
அசையாது நின்றிடுக!

சுத்தியலைக் கையேந்தித்
தொழில்புரியும் மானிடனே!

இத்தருணம் நின்றிடுக!
எங்கும் பெருமௌனம்

நிலவட்டும்!
ஏனென்றால், நீணிலத்தில் உதித்திட்ட
தலைவர்களில்,
போராட்ட வீரர்களில்,
தலைசிறந்த
வீரத் தலைவரவர்
விடைபெற்றுச் செல்கின்றார்.
பீரங்கி முழங்கியது.
ஆயிரம்பீ ரங்கிகளோ?
ஆர்கண்டார்?
ஆனாலும், பீரங்கி அதிர்வேட்டோ
ஓர்பிச்சைக் காரனவன்
உள்ளங்கை தனில்வீழ்ந்த
காசுகளைப் போல்மெல்லக்
கலகலத்த தேயல்லால்
ஓசை மிகப்பெரிதாய்
ஓங்கி ஒலிக்கவில்லை.
வேதனையால் உறுத்துகின்ற
விழிகளைநான் பாடுபட்டுப்
பாதி யிமைதிறந்து
பார்க்கின்றேன்;
உறைந்தாற்போல்
அசையாது,
மூச்சுவிட அறியாது நிற்கின்றேன்.
அசைந்தாடும் செங்கொடிகள்
அணிவரிசை யதன்முன்னால்
இருள்படிந்து,
மரணம்போல் இயக்கமற்று நின்றிடுமோர்
உருவையென இவ்வுலகம்
நிற்பதைநான் உணர்கின்றேன்.
உலகமதன் மீதினிலோ—
உலகத்து மானிடர்கண்

கலகலத்து நீர்சொரிந்து
கழுவியதோர் சவப்பெட்டி.

சவப்பெட்டி அதனருகில்
எம்பக்கம் சார்ந்துநிற்போர்

எவரெனிலோ—
அவரெல்லாம் இவ்வுலக மக்களர்தம்

பிரதிநிதிப் பெருங்கூட்டம்!
பேருலகில் யாம்கண்ட

பெரும்புயலை,
புரட்சியினை,
பிரளயத்தைப் பெரிதாக்கி

அரும்பணியை முழுமையுற
ஆற்றி, நிறைவேற்றி

வருங்கால வாழ்வதனை
வளமாக்க நிற்கின்றோம்.

* * *

ஆனாலும்—
வணங்கிநின்ற செங்கொடியின் அணிவரிசை

தானிருந்த இடத்திருந்து,
தளபதியார் முரலோவின்[60]

"முன்னேறிச் செல்க!" என
முழக்கமிடும் ஆணையது

இந்நேரம் தொலைவிருந்து
எங்களுக்குக் கேட்கிறது.

ஆனாலும், இவ்வாறு
ஆணையிடல் அவசியமோ?

தானாக நாங்களெலாம்
நெடுமுச்சு தானெடுத்து

பளுவாகி விட்டஉடற்
பாரத்தைச் சிரமமொடு

இழுத்து, வசமாக்கி,
இரும்புக் கனம்கனக்கும்

பாதத்தைத் தூக்கிவைத்து,
படிப்படியாய்ச் சதுக்கத்துப்

பாதையினைப் பின்விடுத்த
படிநடந்து வருகின்றோம்.

எம்கரத்தில் உறுதியுடன்
இறுகப் பிடித்திருந்த

செங்கொடிகள் காற்றினிலே
சிரந்தூக்கி யாடினவே.

எங்களணி வரிசையிலே
இருந்தோர் பேராற்றல்

பொங்கிப் பிரவகித்து
எங்கெங்கும் பொழிந்தோடிச்

சிந்தனைப்பே ருலகமெனச்
சிலிர்த்துப் பரந்ததுவே!

அந்தவொரு சிந்தனையும்
அனைவருக்கும் ஒருமுகமாய்

உந்தி யெழுந்ததுதான்;
உழைப்பாளி, விவசாயி,

போர்வீரர் யாவருக்கும்
பொதுவான சிந்தனைதான்:

யாரினிநமக் காதரவு?
அறிஞர்லெனின் இல்லாது,

இனிநந்தம் குடியரசை
எப்படித்தான் நடத்துவது?

லெனினவர்தம் ஸ்தானத்தில்
இனியொருவர் தேவையன்றோ?

அவரிருந்த ஸ்தானத்தை,
அத்தகைய பேரிடத்தை

எவர்மூலம் நிரப்புவது?
எவ்வாறு நிரப்புவது?

"போதுமையா!
முட்டைகடி பொறுக்காத மெத்தையிலே

சாதுவைப்போல் கண்ணயர்ந்து
சயனித்த தெலாம்போதும்!

தோழரே! செயலாளர்
உம்மிடம்தான் சொல்லுகின்றேன்.

ஆலைத் தொழிலாளர்
அனைவரையும் ஆர்.சி.பி.[61]

உறுப்பினர்தம் பட்டியலில்
உடனடியாய்ச் சேருமையா!..."

வெறுப்புற்றுப் பல்கடித்து
விஷநோக்கு நோக்குகின்ற

முதலாளிக் கூட்டமதோ
முன்னேறும் நமைக்கண்டு

கதிகலங்கிப் பீதிகொண்டு,
கனத்துவிட்ட தம்முடம்பில்

முடைநாற்றம் நாறுகின்ற
வியர்வை கசிந்தோட,

தொடைநடுங்கி,
கால்களெலாம் தொளதொளக்க ஆடுகின்றார்.

பாட்டாளி நான்குலட்சம்
பேர்களையும் படைதிரட்டிக்

கூட்டாகக் கட்சிக்குள் கொண்டுவந்தால்,
அச்செயலே

மேதைலெனின் தமையிங்கு
மீட்டும்வர வேற்குமொரு

பாதையிலே மலர்தூவும்
பணியெனவே மாறாதோ?

'செயலாளர் தோழரே! நான்
உம்மிடம்தான் செப்புகின்றேன்.

பயமென்ன?
லெனின் இடத்தை நிரப்பவழி பார்ப்பதெனில்
இளையவர்கள் அனைவரையும்
கட்சிக்குள் இணையுங்கள்!
கிழவனென எனைமதித்தால்—
கேளுமையா! இதோ எனது
பேரன் இருக்கின்றான்!
ஒய்.சி.எல்[62] பேரணியில்
வீர இளைஞர்களை
விரைவினிலே சேருமையா!"

* * *

நங்கூரம் பாய்ச்சிநின்ற
நந்தம் கடற்படையே!
சிங்கேறு போல்இனிமேல்
முன்னேறிச் சென்றிடுக!
நீரெலிபோல் நுழைந்துசெலும்
நீர்மூழ்கிக் கப்பல்களே!
நேரமிது!
கடலடியில் தருக்கோடு நீந்திடுக!

"இந்நாளில் இங்கிருப்போம்;
மறுநாளில் ஏகிடுவோம்.
எந்நாளும் மாகடல்மேல்
ஏகி மகிழ்ந்திடுவோம்!"[63]

செங்கதிரே!
வந்தெங்கள் செய்தியெலாம் கண்டிடுக!
மங்கிக் கவலையுற்ற
வதனத்தை மாற்றிடுக!
பெற்றோர்கள் அடிச்சுவட்டில்
பிள்ளைகளும் உறுதியுடன்
உற்றடுத்து நடந்துகுழல்
ஊதியிசை பாடுகின்றார்:

"ஒன்றி ரண்டு மூன்று
என்று நடை போடும்
பயோனி யர்கள் நாங்கள்;
பயந்து விட மாட்டோம்.
பாசிஸ் டுக் கூட்டம்
நாச முறச் செய்வோம்!"[64]

நரைத்துவிட்ட ஐரோப்பா
நாய்போல் எமைநோக்கிக்
குரைக்கிறது!
"புலிநாயே! கோபமுடன் எமைப்பார்த்து
முறைக்காதே! நின்றுவிடு!
மூக்குடைந்து போகாதே!
தரையோடு சேர்த்துன்னைத்
தகர்த்து நொறுக்கிடுவோம்!"
எனக்கூறி நாங்களெல்லாம்
எச்சரிக்கை செய்கின்றோம்.
தனக்குவமை இல்லாத
தலைவர்லெனின் தம்மரணம்
எம்மையெலாம் ஒன்றாக்கி,
இணையற்ற வலுவூட்டிக்
கம்யூனிஸ்ட் யாவரையும்
கடல்போலத் திரட்டியதே!
ஆலைகளின் புகைபோக்கிக்
கோபுரங்கள் அத்தனைக்கும்
மேலாக,
செஞ்சதுக்கச் சின்னம் மிளிர்ந்தசையும்
செங்கொடிதான் வானோங்கிச்
சிரந்தூக்கிப் பறந்தாடும்!
இங்குள்ள லட்சோப
லட்சமக்கள் அத்தனைபேர்
தம்கரமும் அக்கொடியைத்
தாங்கிநிற்கும் மரமாகும்!

அலைபரவி யசைந்தாடும்
அக்கொடியின் அசைவுகளில்
தலைவர்லெனின் குடியிருந்து
தலைநிமிர்ந்து மொழிகின்றார்:
"இறுதிப்போர் புரிவதற்கு
எழுச்சியுற்றுத் தயாராகி
உறுதியுடன் நில்லுங்கள்!
உழைப்பாளித் தோழர்களே!
புல்லடிமை புரிந்தவரே!
போதும்!
இனி உறுதியுடன்
நில்லுங்கள்!
கூன்முதுகை நேராக நிமிர்த்துங்கள்!
பாட்டாளி ராணுவமே!
படைதிரண்டு,
வரலாற்றின்
ஏட்டில் எந்நாளும்
இயற்றாத பெரும்போரை—
போர்கள் அனைத்தினிலும்
புகழ்வாய்ந்த அறப்போரை—
நேர்மைதனை நிலைநாட்டும்
நீதிப்போர்ப் புரட்சியினை—
தரைமீது புகழோங்கிச்
சந்ததமும் வாழும்வண்ணம்
விரைவினிலே உலகெங்கும்
வெற்றிபெறச் செய்திடுவீர்!"

1924.

# குறிப்புக்கள்

1. த்ஸெர்ஜின்ஸ்கி — (முழுப்பெயர் : பெலிக்ஸ் எத்மந்தோவிச் த்ஸெர்ஜின்ஸ்கி); அப்போதைய உள்நாட்டு விவகாரத் துறைக் கமிசார்; லெனினை உறுதியோடு பின்பற்றியவர். பக்கம் 24

2. 1924 ஜனவரியில் லெனினது சடலம் பார்வைக்கு வைக்கப் பட்டிருந்த இடம்; மாஸ்கோவின் மத்தியில் உள்ள வரலாற்றுப் புகழ்மிக்க பொது மண்டபம். பக்கம் 28

3. உல்யாஞேவ் — லெனினது குடும்பப் பெயர்; லெனின் என்பது அவரது புனைபெயர். பககம் 29

4. கௌஜான்; பிராம்லி — பழைய ரஷ்யாவில் அன்னியரின் உடைமையாயிருந்த இஞ்சினீயரிங் தொழிற்சாலைகள். புரட்சிக்குப் பின்னர் இவை தேசவுடைமையாக்கப் பட்டன. இவற்றின் பெயர்களும் மாற்றப்பட்டு, இவை பெருமளவுக்கு விஸ்தரிக்கப்பட்டன. பக்கம் 30

5. எலியசேவ்—ரஷ்யநாட்டின் பிரதான நகர்களில் பெரிய கடைகள் பலவற்றை நடத்திவந்த பெரும் உணவு மண்டி வியாபாரி. பக்கம் 32

6. இவஞேவா — வோஸ்னெசன்ஸ்க் — பெரும் பஞ்சாலைத் தொழில் கேந்திரம். பல ஆண்டுகளாக இங்கு பெரிய வேலைநிறுத்தங்களும் புரட்சிகர எழுச்சிகளும் நிகழ்ந்து வந்தன. பக்கம் 35

7. ஸ்டீபன் ராசின் — 17-ம் நூற்றுண்டின் விவசாய எழுச்சியின் தலைவர். பக்கம் 35

8. தையர்ஸ்; கல்லிபெட் — 1871-ல் பாரீஸ் கம்யூனுக்கு எதிரான தாக்குதல்களைத் தலைமை தாங்கி நடத்திய பிரஞ்சுப் பிரதம மந்திரி தையர்ஸ். அவரது தளபதி கல்லிபெட். பக்கம் 50

9. பாரீஸ் கம்யூன் தியாகிகள் புதையுண்டிருக்கும் பாரீஸ் கல்லறையான பெரி லக்காய். பக்கம் 50

10 ஸ்லிஸ்ஸல்பர்க் — லெனினது மூத்த சகோதரர் அலெக்சாந்தர் ஜாரைக் கொலைசெய்ய முயன்றதற்காகக் கைது செய்யப்பட்டுத் தூக்கிலிடப்பட்ட இடம். இக் கோட்டையில் பல. ரஷ்யப் புரட்சிவீரர்கள் தூக்கிலிடப் பட்டனர். பக்கம் 57

11. தொழிலாளிவர்க்க விடுதலைக்குப் போராடுவோர் கழகம் — இக் கழகமே கம்யூனிஸ்டுக் கட்சியின் கருவாக விளங்கியது. பக்கம் 61

12. விளதிமிர்க்கா — அரசியல் கைதிகளை மாஸ்கோவிலிருந்து சைபீரியாவுக்கு அடித்து விரட்டிச் சென்ற நெடும்பாதை. பக்கம் 61

13. எஸ். ஆர். கள் — சோஷலிஸ்டு-புரட்சிக் கட்சியினர்; தனி நபர் பயங்கர வாதத்தை ஆதரிக்கும் குட்டிபூர்ஷ்வா ஸ்தாபனம் இது. அக்டோபர் புரட்சிக்குப் பின்னர் இவர்கள் சோவியத் ஆட்சிக்கு எதிராகச் சதி செய்யும் கும்பல்களாகிச் சீரழிவுற்றனர். பக்கம் 64

14. ஆர். சி. பி. (பி) — ரஷ்யக் கம்யூனிஸ்டுக் கட்சி (போல்ஷ்விக்) 1918-முதல் 1925வரை உபயோகிக்கப்பட்ட பெயர். பக்கம் 65

15. கப்போன்—1905—ஜனுவரி 9 அன்று ஜாரிடம் மனுக் கொடுப்பதற்காகச் சென்ற ஓர் அமைதியான ஊர் வலத்தைப் போலீசார் சுட்டனர்; இதனால் நூற்றுக் கணக்கானவர்கள் இறந்தனர். இதன் தலைவரான கப்போன் என்ற பாதிரி, போலீசாரின் சூழ்ச்சிக்கு உடன்பட்டு, தொழிலாளர் குழுக்களை நிறுவினார். தொழிலாளர்களது பரிதாபகரமான வாழ்க்கை ஜார் மன்னருக்குத் தெரியாது என்ற நம்பிக்கையைப் பரப்பி, அவர்களை ஊர்வலம் போகச் சொல்லி, போலீசாரின் வெறியாட்டத்திற்கு ஆளாக்கி விட்டார். பக்கம் 70

16. முக்தென்; துஷிமா — 1904 - 1905-ம் ஆண்டின் ரஷ்ய-ஜப்பானிய யுத்தம் நடந்த இடங்கள். இப்போரில் ஜாரிஸம் ஜப்பானியரிடம் படுதோல்வியடைந்தது. ஜார் ஆட்சியின் சீரழிவை இது புலப்படுத்தியது; 1905-ம் ஆண்டுப் புரட்சியைத் தூண்டிவிட்ட முக்கிய சம்பவங் களில் இதுவும் ஒன்றாக இருந்தது. பக்கம் 71

17. பிரஸ்னின்யா — மாஸ்கோவிலுள்ள ஆலை வட்டாரம். 1905-ம் ஆண்டில் இங்குதான் முதல் தெருப்போர் தொடங்கியது. பக்கம் 71

18. அறிக்கை — 1905 அக்டோபர் 17 அன்று ஜார் வெளியிட்ட அறிக்கையை இது குறிக்கிறது; இவ் அறிக்கை சில பிரஜா உரிமைகளை வழங்க வாக்குறுதி யளித்தது. வெகுஜன எழுச்சியையும் கோபத்தையும் தணிக்க முயன்ற சூழ்ச்சி இது. பக்கம் 72

19. துபசோவ் — செயின்ட் பீட்டர்ஸ்பர்கின் கவர்னர் ஜெனரல். எழுச்சியுற்ற தொழிலாளர்களுக்கு எதிரான தாக்குதல்களுக்குத் தலைமை தாங்கிய தளபதி. பக்கம் 72

20. செக்கா — த்ஸெர்ஜின்ஸ்கியின் தலைமையில் இருந்த தனிப் படை. இப்படை சோவியத் ஆட்சியின் முதலாண்டுகளின் போது எதிர்ப்புரட்சிச் சதிகாரர்களை நசுக்கி அடக்கியது. பக்கம் 72

21. ஆரம்பத்தில் புரட்சிகர லட்சியத்தை ஆதரித்து வந்த அறிவாளிகள் சிலர் புரட்சி தோற்ற பின்பு நம்பிக்கை இழந்துபோய், போர்க்குணமிக்க இயக்கக் கோட்பாடுகளைக் கைவிட்டு "கடவுளைத் தேடுவதில்", அதாவது சமய விசாரணையில் ஈடுபட்டுவிட்டனர். பக்கம் 73

22. ஜார்ஜி பிளக்கனேவ் — பிரபல மார்க்சிய அறிஞர்; சித்தாந்தி. 1905-ல் இவர் வலதுசாரியாகி, லெனினை விட்டுப் பிரிந்து விட்டார். ரஷ்ய சமூக ஜனநாயகக் கட்சியில் சந்தர்ப்பவாதிகளான மென்ஷ்விக் கோஷ்டியை இவர் உருவாக்கினர். பக்கம் 73

23. பொல்தவா (உக்ரைன், 1709); பிளெவ்னு (பல்கேரியா, 1877) — ரஷ்யத் துருப்புக்கள் வரலாற்றுப் புகழ்மிக்க பெரும் போர்களை நிகழ்த்தி வென்ற போர்முனைகளுக்கு அருகிலுள்ள நகரங்கள். பக்கம் 76

24. ஜிம்மர்வால்டு — 1915-ல் ஸ்விட்சர்லாந்தில், ஜிம்மர்வால்டு என்ற இடத்தில் நடைபெற்ற சர்வதேச சோஷலிச மாநாடு. இம்மாநாடு ஏகாதிபத்திய யுத்தத்துக்கு எதிராகத் திட்டவட்டமான நிலையை மேற்கொண்டது. பக்கம் 77

25. கெய்ஸர் — கெய்ஸர் வில்ஹெம் II; ஜெர்மானிய மன்னர். பக்கம் 82

26. நெவ்ஸ்கி — பெத்ரோகிராடிலுள்ள பிரதான வீதி. பக்கம் 82

27. தார்தனெஸ்கி — இடைக்கால அரசாங்கத்தில் அமைச்சராக இருந்த மில்யுகோவுக்கு இட்டிருந்த கேலிப் பெயர். 1917-ல் வளர்ந்தோங்கி வந்த வெகுஜன அதிருப்தியை மிருகத்தனமாக அடக்குவதற்கு முயன்றவர்களில் இவரும் ஒருவர். பக்கம் 83

28. மென்ஷிவிக்குகள் — ரஷ்ய சமூக ஜனநாயகத் தொழிற் கட்சியிலிருந்த சிறுபான்மையான சந்தர்ப்பவாதிகள். பக்கம் 84

29. போரிஸ் சாவின்கோவ் — எஸ். ஆர். கட்சித் தலைவர்களில் ஒருவர். புரட்சிக்குப் பின்னர் பல எதிர்ப்புரட்சிச் சதிச் செயல்களைத் தூண்டி விட்டவர். பக்கம் 84

30. லித்தீனி — பெத்ரோகிராடு நகரின் பிரதான வீதிகளில் ஒன்று. பக்கம் 85

31. ஷெஷின்ஸ்காயா — மரீன்ஸ்கி நடன அரங்கின் பிரதான பாலே நடிகை; ஜாரின் அபிமானத்துக்கு உரியவளாக இருந்தவள்; ஜார் மன்னன் இவளுக்குப் பரிசாக வழங்கிய அரண்மனையை, புரட்சி புரிந்த மக்கள் கைப்பற்றிக் கொண்டனர். பக்கம் 87

32. ஜூலை — 1917 ஜூலை 3—4 தேதிகளில், பெத்ரோகிராடு தொழிலாளர்கள், போர்வீரர்கள், மாலுமிகள் ஆகியோர் சோவியத் மக்களிடம் அதிகாரம் முழுவதையும் கொடுத்து விட வேண்டும் என்பதற்காக அமைதியான ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர். இதனை இடைக்கால அரசாங்கம் துப்பாக்கிப் பிரயோகம் செய்து கலைத்தது. பக்கம் 88

33. ஜினோவீவ் — 1901-ல் ரஷ்ய சமூக ஜனநாயக இயக்கத்தில் சேர்ந்தார். ரஷ்ய சமூக ஜனநாயகத் தொழிற்கட்சியின் இரண்டாவது (1903) மாநாட்டுக்குப் பின்னர் இவர் போல்ஷ்விக்குகளோடு சேர்ந்தார். புரட்சிக்குப் பின்னர் கட்சி விரோதமான ட்ராட்ஸ்கி—ஜினோவீவ் கூட்டணியை உருவாக்கியவர்களில் இவரும் ஒருவர். 1934-ல் இவரது கட்சி விரோத நடவடிக்கைகளுக்காகக் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டார். பக்கம் 88

34. கிரென்ஸ்கி — சோஷலிஸ்டு-புரட்சிக்கட்சியினர்; 1917 ஜூலை முதல் முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தின் தலைவராக இருந்தார். 1917 ஆகஸ்டில் பிரதமர் கிரென்ஸ்கி லெனினைக் கைதுசெய்ய உத்தரவிட்டார்; லெனினைக் கொலை செய்யவும் ரகசியமாகத் திட்டமிட்டார். பக்கம் 88

35 ஸ்மோல்னி — பெத்ரோகிராடு (இப்போதைய லெனின் கிராடு) சோவியத் இருந்துவந்த வரலாற்றுப்புகழ்மிக்க கட்டிடம்; அக்டோபர் புரட்சியின் தலைமையகம்.
பக்கம் 92

36. ட்ராட்ஸ்கி — ரஷ்ய சமூக ஜனநாயகக் கட்சியில் இருந்தவர். அக்டோபர் புரட்சிக்குப் பின்னர் பல முக்கிய பதவிகளை வகித்து வந்தார். கோமின்டர்ன் நிர்வாகக் கமிட்டியிலும், கட்சி மத்தியக் கமிட்டி பொலிட் பீரோவிலும் உறுப்பினராக இருந்தார். 1920-ல் கட்சியின் பொதுவான திசைவழிக்கும், சோஷலிச நிர்மாணத்துக்கான லெனினது திட்டத்திற்கும் எதிராகப் போராடிய எதிர்ப்புச் சக்திகளுக்குத் தலைமை தாங்கினார். 1927-ல் கட்சியிலிருந்து நீக்கப்பட்டார்; 1929-ல் சோவியத் விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்காக இவரது சோவியத் பிரஜாவுரிமை பறிக்கப்பட்டது; நாட்டிலிருந்தும் வெளியேற்றப் பட்டார். பக்கம் 93

37. அரோரா — புரட்சி தொடங்கிவிட்டது என்று வெடித்து முழங்கிச் சமிக்ஞை கொடுத்த வரலாற்றுப் புகழ்மிக்க போர்க்கப்பல். பக்கம் 93

38. துகோனின், கோர்னிலோவ்—வெள்ளைப்படைத் தளபதிகள்; குச்கோவ் — முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தின் அமைச்சர். இவர்கள் புரட்சியைத் தடுத்து நிறுத்தும் நோக்கத்தோடு, சதிசெய்த தலைவர்கள். பக்கம் 97

39. ஆணைகள் — சமாதானம், நிலம்பற்றிய ஆணைகள்; தொழிலாளர் விவசாயி அரசை உருவாக்கும் முடிவு. புரட்சி அரசாங்க அதிகாரிகள் விடுத்த முதல் ஆணைகள். பக்கம் 97

40. குறிப்பு 13ஐப் பார்க்கவும். பக்கம் 100

41. பிரெஸ்ட் — இளம் சோவியத் அரசு ஜெர்மானியர்களோடு அநியாயமாக ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ளும் நிர்ப்பந்தத்துக்கு ஆளாயிற்று. அதுவே பிரெஸ்ட் ஒப்பந்தம். இது ஜெர்மனியில் நிகழ்ந்த புரட்சி கெய்ஸரைத் தூக்கியெறியும்வரை, அதாவது 1918 நவம்பர் வரையிலுமே நீடித்தது. பக்கம் 101

42. உள்நாட்டு யுத்தகாலத்துக் கார்ட்டூன் சித்திரங்கள், சோவியத் குடியரசை விழுங்க வரும் பற்பல தலைகொண்ட ராட்சசப் பிறவியாக ஏகாதிபத்தியத்தைச் சித்திரித்தன.
பக்கம் 102

43, 44, 45. தளபதி தெனிகின் முதல் வெள்ளைப்படைத் தாக்குதலைத் தெற்கிலிருந்து தலைமைதாங்கி நடத்தினர். இவர் தோல்வியுற்ற பின் விரைவிலேயே ராங்கெல் பிரபு கிரிமியாவிலிருந்து உக்ரைனியன் ஸ்டெப்பி வெளிகளுக்குள் படையெடுத்தார். தளபதி கோல்சாக் சைபீரியாவிலிருந்த வெள்ளைப் படைகளுக்குத் தலைமை தாங்கினர். வெளி நாடுகளிலிருந்து கிட்டிய ஆயுதபலம், பணபலம் ஆகிய வற்றின் துணையோடு இவர்கள் சோவியத் குடியரசைப் பொடிப் பொடியாக்க ஏககாலத்தில் முயன்றனர். இவர்களது முயற்சிகளின் விளைவு என்னவாயிற்று என்பது யாவரும் அறிந்ததே. பக்கம் 102-103

46. வெர்ஸ்ட் — தூர அளவை; 3500 அடி தூரம். பக்கம் 103

47. மிச்செல்சன் ஆலை — 1918-ஆகஸ்டில் மாஸ்கோவிலுள்ள மிச்செல்சன் ஆலையில் நடைபெற்ற ஒரு தொழிலாளர் கூட்டத்துக்கு லெனின் செல்லும் போது, எஸ். ஆர். கட்சியைச் சேர்ந்த பயங்கரவாதியான ·கப்ளான் என்ற பெண் லெனினைச் சுட்டுக்கொல்ல முயன்றுள்; ஆனல் லெனின் காயங்களோடு உயிர் தப்பினர். இதனையே இப் பகுதி குறிப்பிடுகிறது. பக்கம் 104

48. குலாக்குகள் — விவ்சாயிகளைக் கூலிக்கமர்த்திச் சுரண்டி வாழ்ந்த பணக்கார விவசாயிகள். உள்நாட்டு யுத்தத்தின் போது இவர்கள் சோவியத் அதிகாரிகளுக்குத் தெரியாமல் உணவுப் பொருள்களைப் பதுக்கி வைத்தார்கள்; அதன் மூலம் உணவு நெருக்கடியை அதிகரிக்கச் செய்தார்கள். பக்கம் 105

49. என். இ. பி. — புதிய பொருளாதாரக் கொள்கை என்பதன் சுருக்கம். லெனின் அறிவித்த இக்கொள்கை, சுதந்திரமான தனியார் வர்த்தகத்தைத் தற்காலிகமாக அனுமதிக்கவும், பொருளாதாரம் புத்துயிர்பெற உதவவும் திட்ட மிட்டது. ·ஆயினும் பொருளாதாரத்தின் கேந்திர ஸ்தா னங்கள் அனைத்தும் பாட்டாளி அரசின் வசமே இருந்தன. பக்கம் 109

50. ரஷ்யக் கம்யூனிஸ்டுக் கட்சி. பக்கம் 111

51. என். இ. பி. — குறிப்பு 49ஐப் பார்க்கவும். பக்கம் 112

52. மாமந்தோவ் — வெள்ளைப்படைத் தளபதி; மிருகத்தனமான தாக்குதலுக்குப் பேர் போனவர். பக்கம் 116

53. காலினின் — (முழுப்பெயர்: மிகைல் இவனேவிச் காலினின்). லெனினது பழம்பெரும் சீடர்களில் ஒருவர்; அகில ரஷ்ய

மத்திய நிர்வாகக் கமிட்டியின் தலைவர்; பின்னர் சோவியத் யூனியனது சுப்ரீம் சோவியத் தலைமைக்குழுவின் தலைவராகவும் இருந்தார். பக்கம் 118

54. போல்ஷாய் அரங்கு — மாஸ்கோவிலுள்ள மாபெரும் நாடக அரங்கம்; லெனினது சடலம் இங்குதான் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது. அவருக்கு இறுதி வணக்கம் செலுத்துவதற்காக லட்சக்கணக்கான மக்கள் க்யூ வரிசையில் நின்றனர். பக்கம் 120

55. செஞ்சதுக்கத்தில் பல பெரும் புரட்சியாளர்களின் சடலங்கள் அடக்கம் செய்யப்பட்டு, அவர்கள் கௌரவிக்கப் பட்டுள்ளனர்; இவர்களில் பாரீஸ் கம்யூன் போராட்டத்தில் பங்கெடுத்த வீரர்கள் சிலரும் இடம் பெற்றுள்ளனர். பக்கம் 125

56. நதேஜ்தா — (முழுப்பெயர்: நதேஜ்தா கான்ஸ்தாந்திநோவா குருப்ஸ்காயா) லெனினது மனைவி; உறுதி வாய்ந்த போல்ஷ்விக். பக்கம் 131

57. ரஷ்ய நாட்டுப் புரட்சியின் பிரபலமான ஈம ஊர்வலப் பாடலொன்றின் வரிகள். பக்கம் 131

58. ரஷ்யப் புரட்சி கீதமொன்றின் பகுதி. பககம் 133

59. லெனின் சமாதிக்கு அருகே கிரெம்ளினில், ஸ்பாஸ்கி கோபுரத்திலுள்ள கடிகாரம். பக்கம் 134

60. முரலோவ் — 1903-ல் கட்சியில் சேர்ந்தார். அக்டோபர் புரட்சிக்குப் பின்னர், விவசாய மக்கள் கமிசார் அலுவலகத்தின் ஊழியர் குழு உறுப்பினராக இருந்தார். மாஸ்கோ ராணுவ வட்டாரத்தின் தளபதி; 1927-ல் கட்சி விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டமைக்காகக் கட்சியிலிருந்து நீக்கப்பட்டார். பக்கம் 136

61. ரஷ்யக் கம்யூனிஸ்டுக் கட்சி. பக்கம் 138

62. ஒய்.சி. எல் — இளைஞர் கம்யூனிஸ்டுக் கழகம். பக்கம் 139

63. பிரபலமான கப்பற்படைப் பாடல். பக்கம் 139

64. இளம் பயோனியர்கள் கழகத்துப் பாடலொன்றின் பகுதி. பக்கம் 140



மயாகோவ்ஸ்கி

"லெனின் கவிதாஞ்சலி" எனும் இந் நூல், ருஷ்ய நாட்டின் புரட்சிக் கவிஞர் மயாகோவ்ஸ்கியின் சிறந்த படைப்புகளுள் ஒன்றாகும். இவரது கவிதை புதுமையானது. மகாகவி பாரதியார் புதுமைக் கவிதைக்கு, "சுவை புதிது, பொருள் புதிது, வளம் புதிது, சொல் புதிது, சோதிமிக்க நவ கவிதை, எந்நாளும் அழியாத மகா கவிதை......" என்று இலக்கணம் கூறியதைப் போல அமைந்தது இவரது கவிதை. மாமேதை லெனினது நினைவுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ள இந் நெடுங் கவிதை, அமைப்பிலும் சொல்வடிவிலும் புதுமையும் புரட்சியும் மிகுந்து விளங்குகிறது. சோஷலிஸ எதார்த்தவாதத்தைச் சித்தரிக்கும் சீரிய படைப்பு இது. லெனினை முழுமையாகப் புரிந்துகொள்ள உதவும் இந்நூலை மூலத்தின் சுவைக் குன்றாமல் தமிழில் கவிஞர் ரகுநாதன் வடித்துத் தந்துள்ளார்.

NCBH லெனின் நூற்றாண்டு விழா வெளியீடு